CICTArchives

# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2040 தை - ஆனி (2009 சனவரி - சூன்)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 3



CICTArchives

# செம்மொழி

செய்தி மடல் 3


முதன்மை ஆசிரியர்

பேராசிரியர் **ச. மோகன்**

ஆசிரியர்

பேராசிரியர் **க. இராமசாமி**

இணையாசிரியர்கள்

பேராசிரியர் **இ. சுந்தரமூர்த்தி**

முனைவர் **இரெ. குமரன்**

முனைவர் **ந. அரணமுறுவல்**



## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

6, காமராசர் சாலை, சேப்பாக்கம், சென்னை - 600 005, தொலைபேசி : 044 - 2844 3222

மின்னஞ்சல்: info@cict.in, director@cict.in, இணையத்தளம்: www.cict.in


செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு பத்துச் செயல்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்திவருகின்றது.

- 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
- பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்தல்
- செம்மொழித் தமிழின் மொழி, இலக்கியம், தொல்லியல், கட்டடக்கலை முதலியவை சார்ந்த காட்சிக் குறும்படங்களை உருவாக்கல்
- இணையவழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
- வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
- வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
- செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
- பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
- இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
- செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்

## பொருள் நிரல்


1. வாழ்த்துச்செய்தி
   - பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி 1
2. திருக்குறள் திருப்பணி
   - அறிஞர் அண்ணா 2
3. பயிலரங்குகள் 5
4. பதிப்புக்கலை
   - வ. அய். சுப்பிரமணியம் 18
5. கருத்தரங்குகள் 22
6. இரங்கல் செய்தி
   பேராசிரியர் கமில் வாச்லாவ் சுவலபில் 42
7. பொருந்தல் அகழாய்வு
   - கா. இராஜன் 43
8. இரங்கல் செய்தி
   பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியம் 46
9. பணி அறிக்கை 47


*அட்டை: தேனி மாவட்டம் பொருந்தல் அகழாய்வில் கிடைத்த மணிகள்*

CICTArchives

# வாழ்த்துச் செய்தி



உலகெங்கும் வாழும் தமிழர்களும் தமிழ் அறிஞர்களும் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாகத் தமிழுக்குச் செம்மொழித் தகுதி வழங்க வேண்டும் என்று கனவு கண்டார்கள். 12-10-2004 ஆம் நாள் இந்திய அரசு தமிழுக்குச் செம்மொழித் தகுதி வழங்கியதின் மூலம் அது நனவானது. செம்மொழிக் கனவு நனவானதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் பங்களிப்பு தமிழ்மொழி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கதாகும்.

செம்மொழித் தகுதி வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாகச் செம்மொழித் தமிழுக்கான திட்டச் செயற்பாடு இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையால் 2005ஆம் ஆண்டு சூலை மாதம் உருவாக்கப்பட்டு அதை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மைசூரில் அமைந்துள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டது. இத்திட்டம் நான்கு பெரும் பிரிவுகளைக் கொண்டது. அவை: 1. தமிழ்மொழி மேம்பாட்டு வாரியம், 2. செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், 3. முனைவர் பட்ட ஆய்வுகள், முனைவர் பட்ட மேலாய்வுகள், 4. விருதுகள். ஒட்டுமொத்தத் திட்டத்தையும் செயற்படுத்தத் தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம் 2005 அக்டோபர் மாதம் அமைக்கப்பட்டது. அக்குழுவின் தலைவராக நான் அமர்த்தப்பட்டேன். திட்டச் செயற்பாட்டின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

2005ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் சென்னையில் தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் முதல் கூட்டம் நடைபெற்றது. அறிஞர் பெருமக்கள் பலர் கூடிச் செயல் திட்டம் பற்றிக் கலந்துபேசிப் பண்டைக் காலம் முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைத் தமிழின் செவ்வியல் காலம் என வரையறுத்தனர். செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநரின் மேற்பார்வையில் 2006ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நிறுவப்பட்டது. 2006ஆம் ஆண்டு முடிவதற்குள் திட்டப் பணிகளுக்கான அறிவுரைக் குழு அமைத்தல்; பலதுறை சார்ந்த அறிஞர் பெருமக்களைக் கொண்டு ஆய்வுப்பணி மேற்கொள்ளல்; நூலகம் அமைத்தல்; ஆங்கிலத்தில் செய்திமடல் வெளியிடல்; இணையத்தளம் நிறுவல்; கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தல் முதலிய பணிகள் நிறைவேற்றப்பட்டன. நிறுவனத்தின் பன்முகப் பணிகளின் மூலம் செம்மொழித் தமிழாய்வு குறித்த விழிப்புணர்வு உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களிடம் உருவாக்கப்பட்டது.

தமிழ் மொழி மேம்பாட்டு வாரியப் பணிக் காலத்தில் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை அமைப்பதற்காகக் குழு ஒன்றினை உருவாக்கியது. குழுவின் துணைத் தலைவராக நான் பணியாற்றினேன். குழு அளித்த பரிந்துரையின் பேரில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைய 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் நாள் இந்திய அரசால் ஏற்பளிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் நாள் சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் சீரிய தலைமையில் இந்திய அரசின் மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் **அர்ஜுன்சிங்** அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் 2008ஆம் ஆண்டு மே 19ஆம் நாள் சென்னைக்கு மாற்றப்பட்டுச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைமையில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் அமைப்புகளின் வழிகாட்டுதலில் செயல்படத் தொடங்கியது.


ஒட்டுமொத்தத்தில் இதன் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவு சிறப்பாக அமைந்துள்ளது. பல்வேறு ஆய்வுத் திட்ட அறிக்கைகள் முடிக்கப்பட்டு மதிப்பீடுசெய்யப்படுகின்றன. திராவிட ஒப்பிலக்கண ஆங்கில நூல், 7 ஆங்கிலச் செய்திமடல்கள், செவ்வியல் இசையில் அமைந்த செம்மொழித் தமிழ்ப் பாடல்கள் அடங்கிய குறுந்தகடு, தொல்காப்பியம் முற்றோதல் அடங்கிய 5 குறுந்தகடுகளின் தொகுப்பு ஆகியவை வெளியிடப் பட்டுள்ளன. பழந்தமிழ் இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, நாணயங்கள் குறித்த 26 காட்சிக் குறும்படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 15000 நூல்களோடும் ஓலைச் சுவடிகளை மின்னாக்கம் செய்த குறுந்தகடுகளோடும் நூலகம் தகுதிப்படுத்தப்பட்டுள்ளது. செம்மொழித் தமிழ் ஆய்வில் ஈடுபட்டுள்ள இளம் ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 30 முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் 12 முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

குறுகிய காலத் திட்டப் பணிகளுக்கான நிதி உதவி 60 ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2005-06, 2006-07, 2007-08 ஆகிய ஆண்டுகளுக்கான குடியரசுத்தலைவர் விருதுகளுக்கு இரண்டு மூத்த தமிழறிஞர்களும் 15 இளம் அறிஞர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

மத்திய அரசும் உலகெங்கும் உள்ள அறிஞர்களும் தருகிற பேராதரவுடன் இந்த நிறுவனம் உலகப் புகழ்பெற்ற அறிவுசார்ந்த நிறுவனமாக மலரும் என்று நான் பெரிதும் நம்புகிறேன்.

**(வா.செ. குழந்தைசாமி)**
*துணைத் தலைவர்*
ஐம்பெருங்குழு • எண்பேராயம்

**ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்**



அண்ணா நூற்றாண்டு நினைவாக

# திருக்குறள் திருப்பணி

## அறிஞர் அண்ணா

**வ**ள்ளுவர் தந்த திருக்குறள், தமிழர்க்கு மட்டுமல்லாமல், பண்புடன் வாழ விரும்பும் அனைவருக்கும், ஓர் வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

திருக்குறள், பூஜா மாடத்துக்கு மட்டும் தயாரிக்கப்பட்ட ஏடல்ல. புனைந்துரைகள் நெளியும் புராணமல்ல - வாழ்விலே, தூய்மையை அவரவரும், தத்தமது திறனைச் சரியாகப் பயன்படுத்தி, மற்றவரின் வாழ்வின் மேம்பாட்டினையும் மதித்து ஒழுகுவதன் மூலம் பெறக்கூடியது என்ற பெருநெறியைக் காட்டும் நூலாகும்.

திருவிழாக்களையும் தீர்த்த மகிமைகளையும் திருப்பல்லாண்டுகளையும் திருவவதாரங்களையும், இவற்றின் பிற பதிப்புக்களான வெண்பொங்கல், இனிப்புச் சாதம் எனும் இன்ன பிறவற்றினையும் மக்களுக்கு வழங்கும் அழுக்குக் கருத்துரைகள் கொண்ட ஏடுகளையே தமிழ்நாடு கொண்டாடி வருகிறது. காரணம் பலப்பல. விளைவோ, வாழ்வில் வேதனை, சமூகத்தில் சச்சரவு, நாட்டிலே நலிவு.

நாம் இதுகாறும், அத்தகு ஏடுகளின் பிடியிலிருந்து நாடு விடுபட வேண்டுமென்பதற்கான பணிபுரிந்து வந்தோம் - அப்பணி தொடர்ந்தும் நடந்துவருகிறது.

அப்பணியுடனும் இதுபோது நாம் வள்ளுவர் தந்த திருக்குறளை ஒவ்வொரு இல்லத்திலும் குடியேறச் செய்தாக வேண்டும், ஒவ்வொருவர் மனத்திலும், அவருடைய அற உரைகளைப் பதியச் செய்ய வேண்டும் என்ற சீரிய பணியினையும் மேற்கொண்டுள்ளோம்.

நாம், நாவலரும் பாவலரும் கூடிடும் நான்மணி மாடத்திலே அல்ல, உலவுவது, உரையாடுவது. நாதனைக் கண்டோம், எம் நாவில் அவர் சூலம்பட இம்மெய்யறிவு கொண்டோம் என்று இயம்பிடும் அருள் விற்பனையாளர்களின் அணிமாடங்களை நாம் அணுகுவதில்லை.

மக்கள் மன்றத்திலே உலவுகிறோம், ஏரடிக்கும் எல்லனையும், காடு திருத்தும் கந்தனையும் காண்கிறோம். ஏழையின் கண்ணீரையும், எத்தனின் கபடத்தையும் காண்கிறோம். கட்டுக் கதைகளை நம்பிக் கருத்தைக் குழப்பிக் கொள்ளும் பாமரரிடம் சென்று பகுத்தறிவு பேசுகிறோம்.

இத்தகையவர்களிடம், நாம், மறைந்து கிடக்கும் இம்மாணிக்கத்தை - குறளைக் காட்டும் - மகத்தான பணியினை மேற்கொண்டுள்ளோம்.

நமது பணி வெற்றி பெற்றால்தான், மக்களின் உடைமையாகும் இந்தத் தமிழ் அறிவுக் களஞ்சியம்.

நமது பெரும்பணி மூலமே, மக்களுக்கு, வாழ்க்கையிலே கிளம்பும் எத்தகைய சிக்கலையும் சந்தேகத்தையும் நீக்கவும் போக்கவும், நேர்மையை நிலைநாட்டவும் உதவும் இப்பெரு நூலின் உண்மைப் பொருள் தெரியமுடியும்.

குறள் ஏந்திச் செல்வோம், நாடுநகரமெங்கும் - பட்டி தொட்டிகளெல்லாம்.

பண்பாடு எது என்பதை மக்கள் அறியச் செய்வோம்.

அறம், பொருள், இன்பம் எனும் அரிய முப்பொருளை மக்கள் உணர மட்டுமல்ல, நுகரவும் பணியாற்ற வேண்டும். புதிய பணி - ஆனால் நமது பழைய பணியின் தொடர்ச்சிதான் - முற்றிலும் புதிதல்ல.

அப்பணிக்கு நாம் நம்மைத் தயாரித்துக்கொள்வதற்கு, குறளின் அருமை பெருமை பற்றி அறிஞர் கூறியுள்ள கருத்துரைகளை எண்ணிப்பார்ப்பது, முக்கியமான முதல் வேலையாகும்.

பேராசிரியர் சுந்தரனார், பெரும்புலவர் - அவர், வள்ளுவரின் திருக்குறளைப் பற்றிய அருமை

CICTArchives



பெருமையினை அறிவிக்கப் பல கூறவேண்டாம் - முக்கியமானதைச் சுட்டிக்காட்டினாலே போதும் என்று எண்ணி,

வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி

என்று பாடியுள்ளார்.

இந்த 'ஒருகுலத்துக் கொருநீதி' எனும் முறையினைக் காலம்கூடத் தகர்க்காதபடி, அவ்வப்போது உரம் ஊட்டி வருவனவே, புராண இதிகாச சாதிகள். அவற்றை நம்பியதாலேயே நாடு நலிவுற்றது.

நாட்டின் நலிவு நீங்கி, மக்கள் நல்வாழ்வு பெறுவதற்காக, வள்ளுவர் குறளை மறுவற நன்கு உணர்ந்தோராதல் வேண்டும், மக்கள்.

வள்ளுவர், சகல பிரச்சினைகளையும் ஆராய்ந்து, அரிய உண்மைகளை வெளியிட்டிருக்கிறார். கடவுட் கொள்கை, நாடு, அரசு, இல்வாழ்க்கை எனும் பல பகுதிகளாக உள்ள குறளின் முழு நோக்கம், மக்கள் அறநெறியில் நிற்க வேண்டும் என்பதேயாகும். ஏனெனில் அவர் கூறியபடி அறத்தால் வருவதே இன்பம். இந்த அறநெறியைப் பரப்பும் பணியினை மேற்கொள்ளும் நமக்கு உறுதுணையாக, அறிஞரின் கருத்துரைகள் உதவுகின்றன.

வள்ளுவர் வரையறுத்துரைத்த கடவுள் நிலை, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் எனும் முதுமொழிக் கிணங்கியதாகும். அவர் பத்துக் குறட்பாக்களிலும் ஆதிபகவன் - வாலறிவன் - மலர்மிசை ஏகினான் - வேண்டுதல் வேண்டாமையிலான் - இறைவன் - பொறிவாயில் ஐந்தவித்தான் - தனக்குவமையில்லாதவன் - அறவாழி அந்தணன் - எண்குணத்தான் - என முறையே அமைத்துள்ளார் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார் புலவர் வரதராசனார்.

'திருக்குறள் என்னும் இவ்வரிய அறநூல் உலகியலுக்குரிய பெருநூலாகும். உலகியலில் கூறுதற்குரிய பெரிய பொருள்கள் பலவற்றினும், அறம், பொருள், இன்பம் என்ற மூன்றினும் பெருமையுடைய பொருள் பிறிது கிடையாது. வீடுபேறும் இம்மூன்றன் ஏதுவாகப் பெறப்படுவதேயன்றி வேறன்மையின், அதனைப் பெய்துவிக்கும் பெருமையும் இம் மூன்றற்குமேயாகும். ஆகவே, எவ்வகையிலும் பெருமையென்பது இம்மூன்றற்குமே உரியதாகலின், இம்மூன்றனையும் விளக்கும் நூற்பெருமைக்கு ஏனை எந்நூலும் இணையாகாமையின், இதுவே எல்லாப் பெருமைக்கும் உரித்தாய்ப் பெருநூல் எனப்படுவதாயிற்று' என்று அதன் அருமையினை அழகுற எடுத்துக் கூறியுள்ளார் அவ்வை துரைசாமி எனும் அருந்தமிழ்ப் புலவர். இத்தகு பெருநூல் இயற்றுதற்கேற்ற சூழ்நிலை, தமிழகத்தே இருந்தது எனும் சிறப்பினை மற்றோர் அறிஞர்,


'தமிழ் மக்கள் எண்ணிறந்த நூற்றாண்டுகளிற் பழகிய வாழ்க்கையின் பயனாக ஒப்புயர்வற்ற நாகரிகத்தைப் பெற்றனர். அதனால் அவர் தம்முள் பல பேரறிஞர் தோன்றி அருந்தமிழ் நூல்கள் இயற்றுவாராயினர். அவ் வறிஞருள் முதன்மையாக வைத்து எண்ணத்தகுந்த மேன்மையாளர் வள்ளுவர் என்பார். அவர் இயற்றியருளிய திருநூல் திருக்குறள்.

திருக்குறள் ஒழுக்கமுறை கூறும் நூல். அதிற் கூறப்பெறும் ஒழுக்கச் சட்டங்கள் தமிழ்நாட்டினரின் பண்பட்ட ஒழுக்கச் சட்டங்களே; என்றாலும் அவை உலகத்தார் அனைவராலும் சாதி, சமய, நிற வேறுபாடுகள் ஒழித்துக் கைக் கொள்ளத் தக்காங்கு சீர்பெற அமைந்திருக்கின்றன. அதனால் திருக்குறளை உலகினர் அனைவரும் தத்தமக்கு ஏற்ற 'பொது மறை' எனத் தழுவிக்கொண்டு தம்தம் மொழிகளில் பெயர்த்தெழுதிப் போற்றுவான் தொடங்கினர். ஆங்கிலம், செர்மன் முதலிய எல்லா மொழிகளிலும் இன்று திருக்குறள் மொழிபெயர்க்கப் பெற்றுப் போற்றிப் படிக்கப்பெற்று வருகின்றது' என்று குறித்திடுகிறார்.

புலவர் ஏறு நமது திருவள்ளுவர் என்பது பொருந்தாப் புகழுரை அல்ல, பொருளுடைய உண்மை உரை என்பதைப் பெரியசாமிப் புலவர் கூறுகிறார்.

வள்ளுவர் இயற்றிய குறள் நூல் உலகிற் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பெற்று, ஆங்காங்கு வழங்கி வருதலை உணர்ந்த தமிழ் அன்பர்கள், வள்ளுவர் குறள் உலகப் பொதுநூல் எனவும், வள்ளுவர் உலகப் பொது அரசரெனவும் உளம்கொண்டு போற்றுகின்றனர்; வள்ளுவர் குறளின் வாடை தமிழ்

**அறம், பொருள், இன்பம் எனும் அரிய முப்பொருளை மக்கள் உணர மட்டுமல்ல, நுகரவும் பணியாற்ற வேண்டும்.**



நூல்களிலெல்லாம் வீசுதலால் வள்ளுவரைத் தமிழ்ப் பன்னூற்கும் அரசரென யாம் போற்றுகின்றோம்.

நாட்டுப்பற்றுக்கு, நமது வள்ளுவர் எவ்வளவு அரும்பெரும் துணையாக அமைகிறார் என்பதைப் புலவர் வரதராசனார்,

'எதிர்காலத் தமிழ்நாட்டைப் பற்றி எண்ணத் தெரியாதவர்களுக்குத் திருவள்ளுவர் இன்றும் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றார்; எண்ணத் தெரிந்தவர்களின் எண்ணங்களைச் செம்மைப்படுத்தித் தெளிவூட்டும் தெள்ளியராகவும் விளங்குகின்றார். அவர் எழுதியுள்ள பத்துக் குறளும் நாட்டுப்பற்று உடைய ஒவ்வொருவரும் நாடோறும் காலையும் மாலையும் நாட்டை நினைந்து உருகி வழிபடும் வழிபாட்டிற்கு ஏற்ற பாக்களாகவும் உள்ளன என்று கூறலாம்.'

'மிகுதியான விளைவும் தக்க சான்றோரும் குறைவற்ற செல்வரும் வேண்டும். தனியுடைமை நீங்கும் எதிர்காலத்தில் 'தாழ்விலாச் செல்வரும்' வேண்டும் என்பதற்கு ஈடாகத் 'தாழ்விலாச் செல்வமும்' வேண்டும் என்று மாற்றி எண்ண வேண்டிய நிலைமை மெல்ல அமைந்து வருகின்றது' என்று கூறுகிறார்.

அந்த நாட்டுக்கு, அமைய வேண்டிய அரசுபற்றியும், வள்ளுவனார் கூறாதிருந்தாரோ! இல்லை! அருமையான முறையில் அதுபற்றியும் கூறியுள்ளார் என்பதை அறிஞர் சேதுப்பிள்ளை, 'அரசியலைக் குறித்துத் திருவள்ளுவர் கூறும் அறிவுரை எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் ஒத்ததாகும். இவ்வுலகில் ஆசை பிடித்த அரசர் எந்நாளும் உண்டு. 'ஆசைக்கோர் அளவில்லை அகிலமெலாம் கட்டி ஆளினும் கடல் மீதிலே ஆணை செலவே நினைவர்.' அதற்கு மேல் ஆகாயத்தையும் கட்டியாள ஆசைப்படுவர். இது படைச் செருக்குற்ற மன்னர் இயற்கை.

இவ்வாறு ஆசைவெறி பிடித்தலையும் அரசர்க்குத் திருவள்ளுவர் ஒன்று கூறுகின்றார். நெறியல்லா நெறி சென்று, பிறர் கதறக் கதறக் கைப்பற்றிய நாடும் செல்வமும் வந்த வழியே போய்விடும் என்பது அவர் வாக்கு.

'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்' என்ற அருமைத் திருக்குறள் ஓர் அரசியல் மந்திரம். அழுகையில் வந்தது அழுகையிற் போகும் என்பது வள்ளுவர் வாய்மொழி. பிறர் வடிக்கும் கண்ணீரில் ஓர் அரசன் பெற்ற நாடு, அவன் வடிக்கும் கண்ணீரில் அகன்று போய்விடும் என்பது அதன் கருத்து. இன்னும் நாடாளும் அரசன் தன் குடிகளின் கருத்தைத் தழுவியே ஆளவேண்டும்; குடிகளின் இணக்கத்தைப் பெற்ற அரசுதான் நெடுங்காலம் நிற்கும் என்பது திருவள்ளுவர் கொள்கை என்று வியந்து கூறுகிறார்.

குறளின் அருமையினை எடுத்துரைத்த அறிஞர் அனேகர். பல மொழிகளிலே, குறள் மொழி பெயர்க்கப்பட்டு, அதன் பெருமை, கடல் கடந்தும் சென்று பரவியுள்ளது. எனினும் தமிழர் மனைகளிலே, குறள் உண்டோ? பஞ்சாங்கம் இருக்கும் - பாரதக் கதை இருக்கும் - இராமாயணமும் இருக்கும் - அல்லி அரசாணி மாலையும், அபிமன்யு வீரமும் இருக்கும்- அறநெறி கூறும் அருமைத் திருக்குறள் இருக்குமா? இல்லையே! ஏன்? இதனை எண்ணி ஏங்குபவரின் தொகையே குறைவு. உளம் நொந்து, சு.வே. நடராசன் என்பார்,

'தமிழ்நாடு எங்கணும் கம்பன் திருநாள்; எங்கணும் கம்பன் நினைவு மலர்கள்; எங்கணும் கம்பச்சித்திரம். எங்கணும் கம்பர் தரும் காட்சி. மேடைப் பிரசங்கிகளைக் கவனித்தால் கம்பன் காவியம், கம்பனும் நகைச்சுவையும் என்பது பேச்சு. அது போன்று வள்ளுவன் திருநாள் கொண்டாடப்படுகின்றதா? அவன் பெயரால் நினைவு மலர்கள் வெளிவருகின்றனவா? பத்திரிகைகள் குறளுக்குத் தனியிடம் கொடுக்கின்றனவா?

கம்பராமாயணத்தை இடைவிடாது பயில்கின்றார்கள் - பயிற்றுகின்றார்கள். காவியரசனையில் சொக்கிக் கற்பனைக் கதைகளைக் கருத்தூன்றிக் கற்கின்றார்கள். தமிழன் வீரத்தை - அகவாழ்வை - அவனது பகுத்தறிவைக் கெடுக்கின்ற இடங்களைக் கண்டு வியந்து கொண்டாடுகின்றார்கள்.

கண்ணகி வழிவந்த வீரமங்கையர்கள் கற்பழிக்கப் படுகின்ற இடங்களிலே ஆகா! ரசனை! பாவனை! என்று சொக்கித் தம்மையே மறந்துவிடுகின்றார்கள். நமது புலவர் பெருமக்கள் - பண்டித மணிகள், அவர்கள் வள்ளுவன் நூலை இடைவிடாது பயில்கின்றார்களா? பயிற்றுகின்றார்களா? குறளிலே காணப்படுகின்ற தமிழன் வீரத்தை - அகவாழ்வை - அவனது பகுத்தறிவைக் கொண்டாடுகின்றார்களா? கொண்டாடு வார்களாயின், கைவேல் களிற்றோடு போக்கி வருபவன் - மெய்வேல் பறியா நகும்; மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை; அறிவுடையார் எல்லாமுடையார் என்பவற்றைப் பேசுகின்றார்களா? மறுத்து, வாலியைக் கொன்ற ஆரிய இராமனின் வீரியத்தையும் அகல்யையின் சுய நீக்கத்தையும் பேசுகின்றார்களே! போற்றிப் புகழ்கின்ற ஒரு நூலை ஏன் மறைக்கின்றார்கள்? அதன் மாண்பை மக்களுக்கு ஏன் எடுத்துக்காட்டவில்லை? இதனைக் கேட்டால், 'மக்கள் பக்குவம் அடையவில்லை; அவர்கள் நீதியை எப்பொழுதும் விரும்புவதில்லை. அது அவர்கள் செவிகளுக்கு இன்பமூட்டுவதில்லை' என்று கூறிவிடுகின்றார்கள். 'இந்த நிலையினைக் காணத்தான் வருத்தம் ஏற்படுகின்றது; நெஞ்சம் புண்படுகின்றது' என்று குமுறுகிறார்.

புண்பட்ட நெஞ்சுடன் உள்ளனர் அறிந்தோர். அறியாதார்க்கோ, குறள், ஓர் புதிர்!

பண்டைத் தமிழரின் மனப்புண்ணும், பயனில் நூற்களை மட்டுமே அறிந்ததால், மக்கள் மனத்திலே மூண்டு கிடக்கும் மருளும், போக்கப்படவேண்டும் - நாம் மேற்கொள்ளும் பணிமூலம்.

வாழ்க வள்ளுவர் ! வளர்க குறள் நெறி!

**நன்றி: குறளமுதம், பக். 261-266**

CICTArchives



# பயிலரங்குகள்

பயிலரங்கு 1

## சங்க இலக்கியத் துறைகள் கோட்பாடு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரைச் செந்தமிழ்க் கல்லூரி உயராய்வு மையமும் இணைந்து மதுரையில் நடத்திய 'சங்க இலக்கியத் துறைகள் கோட்பாடு' பற்றிய தேசியப் பயிலரங்கு 22.12.2008 முதல் 31.12.2008 வரை பத்து நாட்கள் நடைபெற்றது.

புதுதில்லி சவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுவைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், காந்தி கிராமக் கிராமியப் பல்கலைக் கழகம், மதுரைக் கல்லூரி, அமெரிக்கன் கல்லூரி, தியாகராசர் கல்லூரி, யாதவர் கல்லூரி, செந்தமிழ்க் கல்லூரி, பாத்திமா கல்லூரி, எஸ்.எப்.ஆர். மகளிர் கல்லூரி, அய்ய நாடார் சானகி அம்மாள் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஆய்வு மாணவர்கள் 60 பேர் பயிலரங்கில் பங்குபெற்றுப் பயன்பெற்றனர். பல்துறை அறிஞர்கள் பயிலரங்கில் கலந்துகொண்டு பயிற்று வித்தனர்.

22.12.2008 காலை 10 மணியளவில் நடந்த பயிலரங்கத் தொடக்க விழாவுக்குச் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திரு இரா. குருசாமி தலைமைதாங்கினார். முதல்வர் முனைவர் கே.சின்னப்பா வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தொடக்கவுரையாற்றினார். ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரா. மோகன் அறிமுகவுரை நிகழ்த்தினார். தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் கதிர். மகாதேவன், மதுரை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் பேராசிரியர் கெ. பாண்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேராசிரியர் தமிழண்ணல், தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். மதுரைச் சட்டமன்ற உறுப்பினர் திரு என். நன்மாறன், மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு ஆர். அழகுமலை ஆகியோர் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர். முனைவர் நிர்மலா மோகன் நன்றி கூறினார்.

தொல்லியல் அறிஞர் முனைவர் வெ.வேதாசலம் கல்வெட்டுப் பயிற்சி அளித்தார். 20.12.2008ஆம் நாள் திருமோகூர், நரசிங்கம், திருமலை நாயக்கர் மகால் ஆகிய இடங்களுக்கு ஆய்வாளர்களை அழைத்துச்சென்று கல்வெட்டுக்களை வாசித்துக்காட்டினார். 29.12.2008 அன்று பயிலரங்கின் சிறப்பு நிகழ்ச்சியாகப் பேராசிரியர் இரா. மோகன் சங்க இலக்கிய வினாடி வினாப் போட்டியைப் புதுமையான முறையில் நடத்தினார்.

31.12.2008 அன்று பகல் 12 மணியளவில் பேராசிரியர் தமிழண்ணல் 'கேட்டலும் கிளத்தலும்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆய்வு மாணவர்கள் எழுப்பிய ஐயங்களுக்கு விடையளித்தார். சங்கப் பாடல்களை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள் அமர்வுகளில் உரை நிகழ்த்தினர்.

பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முதுமுனைவர் இரா. இளங்குமரனார்
பேராசிரியர் சோ. ந. கந்தசாமி
பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியன்
முனைவர் சரசுவதி இராமநாதன்
முனைவர் எம். அருணகிரி
முனைவர் எஸ். சாரதாம்பாள்
முனைவர் பா. ஆனந்தகுமார்
முனைவர் சி. தனலட்சுமி
முனைவர் எம். மணிவேல்
முனைவர் பா. சம்பத்குமார்
பேராசிரியர் பெ. மாதையன்
பேராசிரியர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
கவிஞர் ஈரோடு தமிழன்பன்
பேராசிரியர் வ. ஜெயதேவன்
பேராசிரியர் அ. இராமசாமி
பேராசிரியர் அ. அறிவுநம்பி






பேராசிரியர் இரா. மோகன்
முனைவர் சிலம்பு நா. செல்வராசு
பேராசிரியர் த. ஞானசுந்தரம்
முனைவர் ம. திருமலை
பேராசிரியர் கே. ஜெயமூர்த்தி
முனைவர் வீ. காந்திமதி
முனைவர் கே. இராஜா

ஆகிய அறிஞர்கள் பயிலரங்கில் பங்குபெற்றார்கள்.

முனைவர் கா. உமாராஜ், முனைவர் து. நிர்மலா மோகன் ஆகிய இருவரும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

31.12.2008 பிற்பகல் 2 மணிக்கு நிறைவு விழா எண்பேராய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் தலைமையில் நடைபெற்றது. முனைவர் நிர்மலா மோகன் வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் சிற்பி. பாலசுப்பிரமணியன் நிறைவுரை நிகழ்த்தினார். செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திரு ஆர். குருசாமி விழாவில் பங்கேற்று வாழ்த்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் கே.சின்னப்பா நன்றி கூறினார்.

பயிலரங்கில் பங்குபெற்ற அனைவருக்கும் என்சிபிஎச் நிறுவனம் வெளியிட்ட சங்க இலக்கிய நூல்கள் செம்மொழி நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

**பயிலரங்கு 2**

# பழந்தமிழ் இலக்கியங்கள் - ஓர் அறிமுகம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து நடத்திய 'பழந்தமிழ் இலக்கியங்கள் - ஓர் அறிமுகம்' என்னும் பயிலரங்கம் 2009 சனவரி 16 முதல் 25 முடிய 10 நாட்கள் நடைபெற்றது. இதில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளிலிருந்து ஆய்வியல் நிறைஞர்கள், முதுகலை மாணவ, மாணவியர்கள் 60 பேர் பங்கேற்பாளர்களாகக் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



16.1.2009 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்ற தொடக்க விழா நிகழ்ச்சிக்குத் தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையர் முனைவர் இரா. பெருமாள்சாமி தலைமைவகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் க. முருகன் வரவேற்புரையாற்றினார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வறிஞர் முனைவர் கு. சிவமணி பயிலரங்கின் நோக்கம் குறித்து உரைநிகழ்த்தினார். மதுரை காமராசர் பல்கலைக்கழக மேனாள் தமிழியல் துறைத்தலைவர் முனைவர் தமிழண்ணல் கருத்துரை வழங்கினார். தமிழ்நாடு உலகத் தமிழ்க் கல்வி இயக்கக மதிப்புறு இயக்குநர் முனைவர் ச.வே. சுப்பிரமணியன் சிறப்புரை வழங்கினார். பேராசிரியர் பி.வல்சகுமார் நன்றி கூறினார்.

பேராசிரியர் இரா. மோகன்
பேராசிரியர் நிர்மலா மோகன்
பேராசிரியர் அ. இராமசாமி
பேராசிரியர் கு. சிவமணி
பேராசிரியர் வி. சசிகலா
பேராசிரியர் ஞா. ஸ்டீபன்
பேராசிரியர் சிந்தி கயாள்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
முனைவர் ஆர். வரலட்சுமி



CICTArchives



பேராசிரியர் பி. வல்சகுமார்
முனைவர் ஜி. விஜயா
பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியன்
முனைவர் எம். எஸ். ஸ்ரீஜெயந்தி
முனைவர் வே. கட்டளைகைலாசம்
முனைவர் எம். பழனியப்பன்
முனைவர் ருக்குமணி
முனைவர் பி. வேலம்மாள்
முனைவர் டி . முருகசாமி
பேராசிரியர் தொ. பரமசிவன்
முனைவர் ச. கணபதிராமன்
முனைவர் ஏ.பாக்கியமுத்து
முனைவர் யாழ் எஸ்.சந்திரா
முனைவர் சபா. அருணாசலம்
பேராசிரியர் அ. அறிவுநம்பி
முனைவர் சு. அழகேசன்
முனைவர் பி.நடராசன்
கவிஞர் பாலா
முனைவர் மு.சுதர்சன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் சி.கன்மணி
முனைவர் க. பசும்பொன்

ஆகிய 31 அறிஞர்கள் கலந்துகொண்டு பழந்தமிழ் இலக்கியம் தொடர்பான தலைப்புக்களில் உரை நிகழ்த்தினார்கள்.

22.01.2009 அன்று நடந்த விழாச் சிறப்பு நிகழ்ச்சிக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் இரா. தி. சபாபதிமோகன் தலைமை யேற்றார். பேராசிரியர் கு. சிவமணி பயிலரங்கம் குறித்துக் கருத்துரை வழங்கினார். மாநிலத் தகவல் ஆணையர் முனைவர் இரா. பெருமாள்சாமி, கல்லூரி ஆட்சிக்குழுத் தலைவர் அருள்திரு கோவிந்தானந்தா சுவாமிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஐம்பெருங்குழு உறுப்பினர் கவிஞர் கனிமொழி சங்க இலக்கியங்களின் தொன்மையும் பெருமையும் பற்றிச் சிறப்புரையாற்றினார். கல்லூரிச் செயலர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆசியுரை வழங்கினார்.

25.01.2009ஆம் நாள் பிற்பகல் 3 மணியளவில் நிறைவு விழாவன்று மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் இரா. ஆவுடையப்பன் தலைமையுரையாற்றிப் பங்கேற் பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் சு. கோபாலகிருஷ்ணன், திருநெல்வேலி மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் தா. சகாயதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நிறைவுரையைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் நிகழ்த்தினார். பேராசிரியர் கு. சிவமணி பயிலரங்க நிகழ்வுகள் குறித்த தொகுப்புரையும் கல்லூரி முதல்வர் முனைவர் க. முருகன் நன்றியுரையும் வழங்கினர். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர்களாகப் பேராசிரியர் கு.சிவமணியும் பேராசிரியர் பி.வல்சகுமாரும் செயல்பட்டார்கள்.

பயிரலங்கில் பங்குபெற்ற 60 ஆய்வாளர்களுக்கும் என்சிபிஎச் வெளியிட்ட சங்க இலக்கிய நூல்கள் செம்மொழி நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

**பயிலரங்கு 3**

# சங்க இலக்கிய இசைப் பயிலரங்கம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியும் இணைந்து சென்னையில் நடத்திய சங்க இலக்கிய இசைப் பயிலரங்கு 19-1-2009 முதல் 28-1-2009 வரை பத்து நாட்கள் நடைபெற்றது.

19.1.2009 காலை 10 மணியளவில் தாகூர் அரங்கில் நடந்த பயிலரங்கத் தொடக்க விழாவில் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி முதல்வர் முனைவர் கே.ஏ. பக்கிரிசாமி பாரதி வரவேற்புரைவழங்கினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் அரிமளம் சு. பத்மநாபன் பயிலரங்கின் நோக்கவுரையை நிகழ்த்தினார். இதைத் தொடர்ந்து கலை - பண்பாட்டுத் துறையின் துணைச் செயலாளர் டேனியல் பிரேம்நாத் தலைமை உரையாற்றினார்.

முதுபெரும் இசைக்கலைஞர் பத்மவிபூசன் டாக்டர் எம். பாலமுரளி கிருஷ்ணா குத்துவிளக்கேற்றிப் பயிலரங்கைத் தொடங்கிவைத்தார். தமது உரையில் பழந்தமிழ் இலக்கியத்தையும் மரபையும் கற்பதன் இன்றியமையாமையை வலியுறுத்தினார். முதுபெரும் தமிழிசை அறிஞர் முனைவர் இரா. திருமுருகன் சங்க இலக்கியத்தைப் பற்றிக் குறிப்பாகவும் சங்க இலக்கிய இசைக்கூறுகளைப் பற்றி விரிவாகவும் எடுத்துரைத்தார். பழைய இலக்கியங்களையும் இலக்கணக் கூறுகளையும் இசை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார். கலை - பண்பாட்டுத் துறையின் உதவி இயக்குநர் திரு வ. ஜெயபால் வாழ்த்துரை வழங்கினார். முனைவர் அரிமளம் சு. பத்மநாபன் நன்றியுரையுடன் தொடக்க விழா நிறைவடைந்தது.



CICTArchives







இப்பயிலரங்கில் இசை, நாட்டிய ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் 60 பேர் பங்குபெற்றுப் பயன்பெற்றனர்.

முனைவர் இரா. திருமுருகன்
திரு எம். கோடிலிங்கம்
முனைவர் எம். ஏ. பகீரதி
பேராசிரியர் எம். வைத்தியலிங்கம்
திரு பாபநாசம் அசோக் ராமன்
பேராசிரியர் கே. ஆர். சீத்தாலட்சுமி
முனைவர் ஆர். எஸ். ஜெயலட்சுமி
முனைவர் ருக்மணி ரமணி
முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்
முனைவர் முத்துக் குமாரசுவாமி
முனைவர் உமா மகேசுவரி
முனைவர் சுப்புலட்சுமி மோகன்
செல்வி கௌரி ராஜகோபால்
முனைவர் கூ. மு. புவனேசுவரி
முனைவர் இராம. கௌசல்யா
முனைவர் மார்கரெட் பாஸ்டின்
முனைவர் அபிராம சுந்தரி
பேராசிரியர் பிரமிளா குருமூர்த்தி
பேராசிரியர் கரு. அழ. குணசேகரன்
முனைவர் மாதவி
முனைவர் கே. ஏ. பக்கிரிசாமி பாரதி
முனைவர் சீர்காழி கோ. சிவசிதம்பரம்
செல்வி மதுவந்தி
திரு எஸ். ஆர். வீரராகவன்
செல்வி மாலாபாரதி
செல்வி கே. சத்தியபிரியா
செல்வி இராஜலட்சுமி

ஆகிய இசைத்துறை வல்லுநர்களைக் கொண்டு 38 அமர்வுகள் நிகழ்த்தப்பட்டன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, முத்தொள்ளாயிரம் ஆகிய பழந்தமிழ் நூல்கள் பங்கேற்பாளர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டன.

28-1-2009 பிற்பகல் 3.30 மணிக்கு நடந்த நிறைவு விழாவின் தொடக்கமாகப் பயிலரங்கில் பயின்ற சங்கப் பாடல்களிலிருந்து 3 பாடல்களைப் பங்கேற்பாளர்கள் அனைவரும் சேர்ந்து பாடினர். அதனைத் தொடர்ந்து ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் கே. ஏ. பக்கிரிசாமி பாரதி வரவேற்புரையும் முனைவர் அரிமளம் சு. பத்மநாபன் தொகுப்புரையும் வழங்கினர்.

விழாவிற்குத் தலைமை ஏற்ற செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி, நிறுவனம் மேற்கொண்டுவரும் பல்வேறு பணிகள் பற்றிக் குறிப்பிட்டதுடன் அனைத்துத் தரப்பினரும் செம்மொழி நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றித் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை புரிய வேண்டும் என்றும் சிறப்புரையில் கூறினார்.

இவ்விழாவில் பேசிய தினமணி நாளிதழின் ஆசிரியர் திரு கே. வைத்தியநாதன் அனைத்துப் பள்ளிகளிலும் இசையைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்றும் தமிழ்ப் பாடல்களை மெட்டமைத்துப் பாடுவதன் மூலம் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டார். வளரும் கலைஞர்களுக்குத் தளர்வு இருக்கக்கூடாது என்றும் மரபு இசையை வளர்க்க நாம் போட்டியை எதிர்கொண்டாக வேண்டும் என்றும் கலைமாமணி இசை அறிஞர் டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

முத்தொள்ளாயிரம் பாடல்களுக்கு முனைவர் சரசுவதி சுந்தரேசனும் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலுக்கு இலதாராஜேந்திரன், இராஜஸ்ரீ ஆகியோரும் நடனம் ஆடினர்.

பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமியும் தினமணி நாளிதழ் ஆசிரியர் திரு கே. வைத்தியநாதனும் பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களையும் பழந்தமிழ்ப் பாடல்கள் அடங்கிய குறுந்தகடுகளையும் என்சிபிஎச் வெளியிட்ட சங்க இலக்கிய நூல்களையும் வழங்கினர். இசையியல் விரிவுரையாளர் முனைவர் சுப்புலட்சுமிமோகனின் நன்றியுரையோடு விழா நிறைவுற்றது.

***பயிலரங்கு 4***

## ஆசிரியர்களுக்குச் சங்க இலக்கியப் பயிற்சி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையும் இணைந்து ஈரோட்டை அடுத்துள்ள துடுப்பதி - செங்குந்தர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் 2009 சனவரி 27 முதல் பிப்ரவரி 5 முடிய 10 நாட்கள் ஆசிரியர்களுக்குச் சங்க இலக்கியப் பயிலரங்கை நடத்தின.





பயிலரங்கத் தொடக்க விழா 27-1-2009 அன்று காலை நடைபெற்றது. மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் அனைவரையும் வரவேற்றார். ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு பொன். குமார் தமது தலைமையுரையில் செம்மொழி நிறுவனம் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு ஆசிரியர்கள் துணையுடன் சங்க இலக்கியங்களையும் பயிற்றுவிக்குமாறு கேட்டுக்கொண்டார். செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணி தொடக்கவுரை நிகழ்த்துகையில் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் பல்வேறு திட்டங்களையும் பணிகளையும் விரிவாகக் கூறியதுடன் தமிழ் ஆர்வலர்கள், ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள் ஆகியோரிடையே செம்மொழித் தமிழ் பற்றிய விழிப்புணர்ச்சியைக் கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் வழியே உருவாக்கியிருப்பது பற்றியும் செம்மொழித் தமிழுக்குச் சிறப்பான பணியாற்றியவர்களுக்கு நிறுவனம் வழங்கும் விருதுகள் பற்றியும் பிற மாநிலத்தவர்களுக்கும் பிற நாட்டினருக்கும்கூட விருதுகள் வழங்கப்படுவது குறித்தும் எடுத்துரைத்தார். செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் திரு ஜெ. சுத்தானந்தன் வழங்கிய வாழ்த்துரையில், இப்பயிலரங்கைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆசிரியர்களைக் கேட்டுக்கொண்டார். கவிஞர் ஈரோடு தமிழன்பன் தமது சிறப்புரையில் இலாட்விய நாட்டு அரசு இலாட்விய மொழியை வளர்ப்பதற்காக மேற்கொண்டுவரும் முயற்சிகளை விளக்கிக் கூறி அவை போன்ற செயற்பாடுகள் செம்மொழித் தமிழ் வளர்ச்சிக்குச் செய்யப்பட வேண்டும் என்று கூறினார். வடமொழி இலக்கண அறிஞர் பாணினியை அரசு சிறப்பித்ததைச் சுட்டிக்காட்டித் தொல்காப்பியருக்கும் நடுவண் அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பேரவைச் செயலாளர் க. நா. பாலன் நன்றி கூறினார்.

பத்து நாட்களிலும் கீழ்க்காணும் 39 அறிஞர்கள் தனித்தனித் தலைப்புக்களில் பயிற்சி வகுப்பு நடத்தினார்கள். பயிலரங்கில் 50 ஆசிரியர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றார்கள்.

பேராசிரியர் கு. சிவமணி
முனைவர் பி. சண்முகம்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
எழுத்தாளர் பிரபஞ்சன்
முனைவர் கா. அரங்கசாமி
முனைவர் அரங்க. இராமலிங்கம்
பேராசிரியர் மு. பொன்னுசாமி
முனைவர் சி. எஸ். பழனிச்சாமி
பேராசிரியர் நா. முத்துமோகன்
பேராசிரியர் க. நெடுஞ்செழியன்
பேராசிரியர் இராம. சுந்தரம்
பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்
முனைவர் எஸ். இராஜவேலு
முனைவர் கே. அமுதன்
முனைவர் த. வசந்தாள்
முனைவர் இரா. தமிழரசி
பேராசிரியர் ஆ. தனஞ்செயன்
முனைவர் பி. ஆனந்தகுமார்
பேராசிரியர் பி. இளங்கோ
முனைவர் ய. மணிகண்டன்
பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியன்
முனைவர் இரா. பூங்குன்றன்
பேராசிரியர் பக்தவத்சல பாரதி
முனைவர் சிலம்பு நா. செல்வராசு
முனைவர் என். இளங்கோ
முனைவர் எஸ். கல்யாணி
பேராசிரியர் தி. முருகரத்தனம்
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் எஸ். வேங்கடராமன்
முனைவர் ஞா. ஸ்டீபன்
பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்
புலவர் பா. கண்ணையன்
முனைவர் எஸ். இராஜு
முனைவர் த. தருமராஜ்
பேராசிரியர் வீ. அரசு
பேராசிரியர் பெ. மாதையன்
முனைவர் டி. கே. நடராசன்
முனைவர் மே. து. ராசுகுமார்
முனைவர் ஔவை நடராசன்

5.2.2009 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஈரோடு செங்குந்தர் மேனிலைப் பள்ளியில் நடந்த பயிலரங்க நிறைவு விழாவில் திரு ஜெ. சுத்தானந்தன் தலைமையுரையும் திரு த. ஸ்டாலின் குணசேகரன் வரவேற்புரையும் நிகழ்த்தினர். முதன்மைக் கல்வி

அலுவலர் திரு பொன். குமார் தொடக்கவுரையும் எண்பேராய உறுப்பினர் முனைவர் ஔவை நடராசன் நிறைவுப் பேருரையும் நிகழ்த்தினர். திரு க. நா. பாலன் நன்றிகூற விழா இனிதே முடிந்தது.

ஒருங்கிணைப்பாளர்களாகப் பேராசிரியர் கு.சிவமணியும் திரு த. ஸ்டாலின் குணசேகரனும் விளங்கினர். பங்குபெற்ற அனைவருக்கும் என்சிபிஎச் வெளியிட்ட சங்க இலக்கிய நூல்கள் செம்மொழி நிறுவனத்தால் வழங்கப்பட்டன.




*பயிலரங்கு 5*

# ஆசிரியர்களுக்குச் சங்க இலக்கியப் பயிற்சி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் இசுலாமியா கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து வாணியம்பாடியில் நடத்திய 'ஆசிரியர்களுக்குச் சங்க இலக்கியப் பயிற்சி' என்ற தலைப்பில் அமைந்த பயிலரங்கம் 1-2-2009 முதல் (6-2-2009 நீங்கலாக) 11-2-2009 வரை 10 நாட்கள் நடைபெற்றது.

இப்பயிலரங்கத் தொடக்க விழா 1.2.2009 காலை 10 மணியளவில் கல்லூரி முதல்வர் முனைவர் மேஜர் சையத் சகாபுதீன் தலைமையில் நடைபெற்றது. கல்லூரிச் செயலர் சு. கெய்சர் அகமது முன்னிலை வகித்தார். தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ப. சிவராஜி வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தொடக்கவுரையாற்றினார். வி.ஐ.டி. நிகர்நிலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கோ. விசுவநாதன், பாரதி தமிழ்ச் சங்க நிறுவனர் அ. ஜெயமோகன் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர். ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. உமாராஜ் நன்றி கூறினார்.





இப்பயிலரங்கில் ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கேற்பாளர்களாகக் கலந்துகொண்டனர்.

முனைவர் வி.எம். ஷாஜஹான் கனி
பேராசிரியர் தி.மு. அப்துல்காதர்
கவிக்கோ அப்துல் ரகுமான்
முனைவர் ஜே. மனுவேல்
புலவர் பா.கண்ணையன்
முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்
முனைவர் ஆர். விவேகானந்த கோபால்
பேராசிரியர் கரு. அழ. குணசேகரன்
பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்
முனைவர் மேஜர் சையத் சகாபுதீன்
பேராசிரியர் ஆர். சம்பத்
முனைவர் டி .செல்லையா
முனைவர் கே. பார்த்திபராஜா
பேராசிரியர் இரா. மதிவாணன்
முனைவர் முகமது அலி ஜின்னா
பேராசிரியர் அ. அறிவுநம்பி
பேராசிரியர் பி. சிவராஜி
பேராசிரியர் சி. நம்மாழ்வார்
பேராசிரியர் இரா. மோகன்
பேராசிரியர் அப்துல் சமது
முதுமுனைவர் இரா. இளங்குமரனார்
முனைவர் இலக்குவனார் மறைமலை
முனைவர் கே. விசுவநாதன்
முனைவர் ஏ. ஜெயமோகன்

ஆகிய அறிஞர்களைக்கொண்டு 26 அமர்வுகள் நடத்தப்பெற்றன. சங்க இலக்கியம் சார்ந்த 26 தலைப்புக்களில் உரை நிகழ்த்தப்பட்டது.

11-2-2009 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவுக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் மேஜர்



சையத் சகாபுதீன் தலைமை தாங்கினார். கல்லூரிச் செயலர் சு. கெய்சர் அகமது முன்னிலை வகித்தார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. உமாராஜ் வரவேற்புரையாற்றினார். செம்மொழி நிறுவன எண்பேராய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் நிறைவுரையாற்றினார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு சிறப்புரையாற்றினார். முதுமுனைவர் இரா. இளங்குமரன் மதிப்பீட்டுரையாற்றினார். இறுதியில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ப. சிவராஜி நன்றிகூறினார்.

பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் என்சிபிஎச் வெளியிட்ட சங்க இலக்கியத் தொகுப்பு செம்மொழி நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

***பயிலரங்கு 6***

## சங்க இலக்கிய உயர்நிலைப் பயிற்சி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நெய்வேலித் தமிழ்ச் சங்கமும் இணைந்து சங்க இலக்கிய உயர்நிலைப் பயிற்சி என்ற பொருளில், நெய்வேலியில் 2009 பிப்ரவரி 19 முதல் 28 முடிய 10 நாட்கள் பயிலரங்கை நடத்தின.

பயிலரங்கத் தொடக்க விழா 19.1.2009 அன்று காலை 9 மணியளவில் நெய்வேலிச் சுரங்கத் துணைப் பொதுமேலாளர் திரு சி. பெருமாள்சாமி தலைமையில் நடைபெற்றது. தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு சி. துரைக்கண்ணு அனைவரையும் வரவேற்றார். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பயிலரங்கைத் தொடக்கிவைத்து உரையாற்றினார். செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ந. அரணமுறுவல் நன்றி நவின்றார். தமிழ்ச் சங்கச் செயற்குழு உறுப்பினர் திரு தி. ஞானசேகரன் தொகுப்புரை வழங்கினார்.

முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் தாயம்மாள் அறவாணன்
முனைவர் கே. சின்னப்பா
பேராசிரியர் தமிழண்ணல்
முனைவர் நிர்மலா மோகன்
பேராசிரியர் இரா. மோகன்
முனைவர் மே.து. இராசுகுமார்
பேராசிரியர் சோ.ந. கந்தசாமி
முனைவர் சிலம்பு நா. செல்வராசு
பேராசிரியர் செ.வை. சண்முகம்
முனைவர் சரசுவதி இராமநாதன்
முனைவர் சோ. சத்தியசீலன்
முனைவர் அ. அறிவொளி
முனைவர் த. வசந்தாள்
முனைவர் ய. மணிகண்டன்
முனைவர் தி.மு. அப்துல்காதர்
முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
முனைவர் இரா. அறவேந்தன்
முனைவர் மு. நளினி
முனைவர் இரா. கலைக்கோவன்
முனைவர் வ. ஜெயதேவன்
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் ஜி. கஜேந்திரன்

முதலியோர் பயிரலங்கில் கருத்துரை வழங்கினர்.

10 நாட்கள் நடந்த பயிலரங்கில் 28 அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினார்கள். திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 7 கல்வி நிறுவனங்களின் 66 மாணவர்கள் பயிலரங்கில் பங்குபெற்றார்கள்.





CICTArchives



அவர்களுக்குச் செம்மொழி நிறுவனத்தால் தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்ட சங்க இலக்கியத் தொகுப்பும் பிற நூல்களும் வழங்கப்பட்டன.

பயிலரங்கு நடந்த ஒவ்வொரு நாள் மாலையிலும் மாணவர்களுக்குத் தகுதியானவர்களைக்கொண்டு பயன்தரத்தக்க வகையில் கணினிப் பயிற்சி கொடுக்கப் பட்டது. ஒவ்வொரு நாளும் மாலையில் கலை நிகழ்ச்சியும் நிகழ்த்தப்பெற்றது.

பயிலரங்க நிறைவு விழா 28.2.2009 பிற்பகல் 3.30 மணியளவில் நடந்தது. தமிழ்ச் சங்கத் தலைவர் திரு கோவி. கோபாலகிருட்டிணன் வரவேற்புரை ஆற்றினார். விழாத் தலைவர் நெய்வேலி நிறுவனத் துணைப் பொதுமேலாளர் திரு எஸ். இராமலிங்கம் தமிழின் சிறப்புக்களை எடுத்து விளக்கினார். சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் பொன். கோதண்டராமன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். முனைவர் ந. அரணமுறுவல் நன்றி நவின்றார். செயற்குழு உறுப்பினர் ஜி. முத்துக்கிருட்டிணன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். பயிலரங்கில் பங்குபெற்ற ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலிருந்தும் ஒவ்வொருவர் பயிலரங்கின் பயன்பாடு பற்றிக் கருத்துரை வழங்கினர். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர்களாக முனைவர் ந. அரணமுறுவலும் முனைவர் மருதூர் அரங்கராசனும் செயல்பட்டனர்.

***பயிலரங்கு 1***

# சங்க இலக்கிய உயர்நிலைப் பயிற்சி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மேலைச்சிவபுரி கணேசர் கலை -அறிவியல் கல்லூரியும் இணைந்து சங்க இலக்கிய உயர்நிலைப் பயிற்சி என்ற தலைப்பில் பயிலரங்கை 2009 பிப்ரவரி 27 முதல் மார்ச்சு 8 முடிய 10 நாட்கள் நடத்தின.

27.2.2009 காலை 10.30 மணியளவில் நடந்த பயிலரங்கத் தொடக்க விழாவிற்கு முனைவர் தமிழண்ணல் தலைமை ஏற்றுச் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் தா. மணி அனைவரையும் வரவேற்றார். செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணி நோக்கவுரையாற்றினார். தமிழுக்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணித்த தமிழ் அறிஞர்கள் பற்றியும் இதில் பங்கேற்பவர்களின் பொறுப்புணர்ச்சி பற்றியும் அவர் எடுத்துரைத்தார். பேராசிரியர் க. அரங்கநாதன் நன்றிகூறினார். முனைவர் தி. பூங்குன்றன் நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தார்.

பத்து நாட்களில் 18 அமர்வுகளில் கீழ்க்காணும் 36 அறிஞர்கள் கட்டுரை அளித்துக் கருத்துரை வழங்கினார்கள்.

பேராசிரியர் சோ. ந. கந்தசாமி
பேராசிரியர் வ. குருநாதன்
கவிஞர் அறிவுமதி
முனைவர் வா. மு. சே. முத்துராமலிங்க ஆண்டவர்
பேராசிரியர் க. அரங்கநாதன்
பேராசிரியர் க. நெடுஞ்செழியன்
பேராசிரியர் இரா. மதிவாணன்
பேராசிரியர் எம். செல்வராசு
பேராசிரியர் பி. முத்துவீரப்பன்
முனைவர் த. ஜெயராமன்
முனைவர் வி. பழனியப்பன்
முனைவர் என். முருகேசபாண்டியன்
திரு ஞானாலயா கிருட்டிணமூர்த்தி
முனைவர் கே. கனகராஜ்
திரு எஸ். இராமகிருஷ்ணன்
முனைவர் மு. சுதர்சன்
பேராசிரியர் எஸ். சாரதாம்பாள்
பேராசிரியர் கா. இராஜாராம்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
முனைவர் பா. மதிவாணன்
முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்
எழுத்தாளர் அஸ்வகோஷ்
முனைவர் எம். ஜெயலட்சுமி
முனைவர் எம். கணேசன்
முனைவர் டி. திருஞானமூர்த்தி
முனைவர் திருஞானசம்பந்தம்
பேராசிரியர் டி. கே. நடராஜன்
முனைவர் பா. ஆனந்தகுமார்






பேராசிரியர் ச. பக்தவத்சலபாரதி
பேராசிரியர் நா. முத்துமோகன்
பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்
முனைவர் ரோஸ்லெட்
திரு செந்தமிழன்
பேராசிரியர் இராம. சுந்தரம்
எழுத்தாளர் பிரபஞ்சன்
திரு பி. தியாகு

முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் 60 பேர் பயிலரங்கில் பங்குபெற்றனர். பங்கேற்றோர்க்குத் தமிழ்மண் பதிப்பகச் சங்க இலக்கியத் தொகுப்பு செம்மொழி நிறுவனத்தால் வழங்கப்பெற்றது.

8.3.2009 அன்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் தா. மணி வரவேற்புரையாற்றினார். செம்மொழி நிறுவன ஆய்வு வல்லுநர் முனைவர் கி. செயக்குமார் தலைமையுரையில் செம்மொழி நிறுவனப் பணிகளை எடுத்துரைத்தார். முனைவர் ந. முருகேசபாண்டியன் மதிப்பீட்டுரை நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினர் பேராசிரியர் இராம. சுந்தரம், பயிலரங்கில் பங்குபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ஜே. ரோஸ்லெட் நன்றிகூற விழா நிறைவுற்றது.

பயிலரங்க ஒருங்கிணைப்பாளர்களாக முனைவர் கி.செயக்குமாரும் முனைவர் ந.முருகேசபாண்டியனும் செயல்பட்டார்கள்.

**பயிலரங்கு ௭**

## மலேசியத் தமிழ் ஆசிரியர்களுக்குத் தமிழ் இலக்கணப் பயிற்சி

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையும் இணைந்து மலேசியத் தமிழ் ஆசிரியர்களுக்குத் தமிழ் இலக்கணப் பயிற்சி என்ற





பொருளில் 7.3.2009 முதல் 18.3.2009 வரை பயிலரங்கைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடத்தின.

இப்பயிலரங்கில் மொத்தம் 24 அமர்வுகள் இடம் பெற்றன. இதில் மலேசியத் தமிழாசிரியர்கள் 60 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். தம் கருத்துரையில் மலேசியப் பேராளர்கள் மலேசிய நாட்டில் 3000 தமிழாசிரியர்கள் இருப்பதால் தொடர்ந்து இத்தகைய பயிற்சி வகுப்புக்களை நடத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

7.3.2009 அன்று காலை 10.30 மணிக்கு நடந்த தொடக்க விழாவில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சா. உதயசூரியன் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் தலைமை ஏற்று உரை நிகழ்த்தினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ஆ. கார்த்திகேயன் வாழ்த்துரை வழங்கினார். மலேசியப் பாடத் தேர்வு வாரியக் கல்வி அமைச்சு உதவி இயக்குநர் மூர்த்தி தன் வாழ்த்துரையில் மலேசியாவில் உள்ள தமிழாசிரியர்கள் அனைவரும் செம்மொழித் தமிழ் அறிவிப்பை மனதார வரவேற்கின்றனர் என்றும் மலேசியக் கவிஞரும் எழுத்தாளருமான சீனி நயினா முகமது செம்மொழி என்ற பெயரில் இதழ் ஒன்றை நடத்தியுள்ளார் என்றும் குறிப்பிட்டார். மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் வே. சபாபதி வாழ்த்துரை வழங்கினார்.

தொடக்க உரையாற்றிய கவிஞர் ஈரோடு தமிழன்பன், உலகளவில் 50 நாடுகளில் வாழும் தமிழர்கள் நினைத்தால் தமிழை வளர்க்க முடியும் என்றும் உலகம் முழுவதும் தற்போது தமிழர்கள் பரவியிருந்தும் தமிழை வளப்படுத்த முடியவில்லை என்றும் அவர்கள் பொருளாதார ரீதியாகவும் ஆதிக்க ரீதியாகவும் பின் தங்கியிருப்பதே இதற்குக் காரணம் என்றும் மொழி ஆசிரியர்களுக்கு மொழி மீது அளவு கடந்த பற்றும் புலமையும் கற்பித்தல் திறனும் இருக்க வேண்டும் என்றும் இவர்கள் பிற ஆசிரியர்களை விட மதிக்கத் தக்கவர்கள் என்றும் கூறினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வறிஞர் முனைவர் கா. உமாராஜ் நன்றிகூறினார்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன்
முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
முனைவர் பெ. மாதையன்
முனைவர் பா. ஜெயக்குமார்

CICTArchives



முனைவர் வி.ஆர். மாதவன்
முனைவர் கே. திலகவதி
முனைவர் செ.வை. சண்முகம்
முனைவர் இரா. மதிவாணன்
பேராசிரியர் வ. குருநாதன்
முனைவர் என். அதியமான்
பேராசிரியர் பி. விருத்தாசலம்
முனைவர் சி. திருஞானசம்பந்தம்
முனைவர் ஆறு. இராமநாதன்
முனைவர் எம்.கே. கோவைமணி
முனைவர் மு. இளமுருகன்
முனைவர் மு. தெய்வநாயகம்
முனைவர் கே. அன்னசுந்தரி
முனைவர் இல. இராமமூர்த்தி
முனைவர் ஆர். திருநாவுக்கரசு
முனைவர் பார்வதியம்மாள்
முனைவர் வி. பழனியப்பன்
முனைவர் ச. பக்தவத்சலபாரதி
முனைவர் சித்திரபுத்திரன்
முனைவர் இலட்சுமணன்
பேராசிரியர் க. நெடுஞ்செழியன்
பேராசிரியர் எஸ். இராதாகிருஷ்ணன்
முனைவர் பி. இராமலிங்கம்
பேராசிரியர் சோ.ந. கந்தசாமி
கவிக்கோ அப்துல் ரகுமான்
முனைவர் சு.செல்லப்பன்
முனைவர் இரா. இளங்குமரன்
பேராசிரியர் தமிழண்ணல்
முனைவர் சிற்பி. பாலசுப்பிரமணியம்
திரு ஒ. முத்தையா

ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

18.3.2009 பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ஆ. கார்த்திகேயன் வரவேற்புரை நிகழ்த்தினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமையேற்று உரை நிகழ்த்தினார். எண்பேராய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் வாழ்த்துரையில், தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட வேண்டும் என்றும் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் திருக்குறள் இருக்கை நிறுவப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு பெ. இராசேந்திரன், மலேசிய இந்திய ஆய்வியல் துறைத் தலைவர் முனைவர் சு. குமரன் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர்.

நிறைவுரையாற்றிய கவிக்கோ அப்துல் ரகுமான் அயல்நாட்டுத் தமிழர்கள் வாழ்கின்ற மண்ணில் வேரூன்ற வேண்டும் என்றும் மொழி ஒன்றுதான் நமக்குத் தடயமாக உள்ளது, அம்மொழியைக் காக்கத் தமிழாசிரியர்கள் ஒரு துறையில் மட்டுமின்றிப் பல்துறையிலும் வித்தகராக விளங்க வேண்டும் என்றும் கூறினார். முனைவர் சா. உதயசூரியனின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களாக முனைவர் கா. உமாராஜ், முனைவர் சா.உதயசூரியன் ஆகிய இருவரும் செயல்பட்டார்கள்.

பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் என்சிபிஎச் வெளியிட்ட சங்க இலக்கிய நூல்கள் செம்மொழி நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

***பயிலரங்கு 9***

# தொல்காப்பியமும் பிற மரபிலக்கணங்களும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையும் இணைந்து நடத்திய தொல்காப்பியமும் பிற மரபிலக்கணங்களும் என்ற பொருளிலான தேசியப் பயிலரங்கம் 09.3.2009 முதல் 18.3.2009 வரை 10 நாட்கள் நடைபெற்றது.

9.3.2009 காலை 10 மணியளவில் இப்பயிலரங்கின் தொடக்க விழா செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி பயிலரங்கைத் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகக் கிறித்துவ இலக்கிய இருக்கையின் மேனாள் பேராசிரியர் சூ. இன்னாசி மாணவர்களுக்கான பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.

இப்பயிலரங்கில் முதுகலை மாணவர்கள் 24 பேரும், ஆய்வியல் நிறைஞர் 18 பேரும், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் 18 பேரும் ஆக மொத்தம் 60 பேர் கலந்து கொண்டனர். இதில்,

பேராசிரியர் சூ. இன்னாசி
பேராசிரியர் இரா. சீனிவாசன்
பேராசிரியர் க. முருகையன்
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் மு. பொன்னுசாமி
பேராசிரியர் பத்மநாப பிள்ளை
பேராசிரியர் குருசாமி
பேராசிரியர் பெ. மாதையன்



CICTArchives








முனைவர் ய. மணிகண்டன்
பேராசிரியர் அ. தாமோதரன்
பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்
பேராசிரியர் கி. நாச்சிமுத்து
பேராசிரியர் சேது பாண்டியன்
பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்
பேராசிரியர் செ.வை. சண்முகம்
பேராசிரியர் சி. சண்முகம்
பேராசிரியர் இரா. கோதண்டராமன்
முனைவர் ஆர். இராசாராம்

உள்ளிட்ட 40 அறிஞர்கள் கலந்துகொண்டு ஆய்வுரை வழங்கினர். இப்பயிலரங்கின் இறுதியில் தொல்காப்பியம், இக்கால இலக்கண, மொழியியல் நூல்கள் உள்ளிட்ட 18 நூல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

18.3.2009 பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவில் பயிலரங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ந. தெய்வசுந்தரம் வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தலைமைதாங்கினார். பேராசிரியர் செ.வை. சண்முகம் பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் சி. சண்முகம் வாழ்த்துரை வழங்கினார். பயிலரங்கில் பயிற்சியளித்த ஆய்வறிஞர்களிடம் அதிகமான வினாக்களைத் தொடுத்த மாணவர்களுக்குப் பேராசிரியர் க. இராமசாமி பரிசு வழங்கிச் சிறப்பித்தார். பேராசிரியர் இரா. கோதண்டராமன் நன்றி கூறினார்.

இப்பயிலரங்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களாகப் பேராசிரியர் இரா. கோதண்டராமனும் முனைவர் ந. தெய்வசுந்தரமும் செயல்பட்டனர்.

**பயிலரங்கு 10**

## சங்க இலக்கியம் : பத்துப்பாட்டு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வேலூர் ஊரீசு கல்லூரியும் இணைந்து சங்க இலக்கியம்: பத்துப்பாட்டு என்ற தலைப்பில் 13-3-2009 முதல் 22-3-2009 வரை 10 நாட்கள் பயிலரங்கை நடத்தின. இதில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களிலிருந்து 30 வல்லுநர்கள் ஆய்வுக் கட்டுரையை வழங்கினர்.

ஊரிசு கல்லூரி, அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி, வாலாசா ஸ்ரீ மகாலட்சுமி பெண்கள் கல்லூரி, ஆர்க்காடு கல்லூரி ஆகியவற்றிலிருந்து 50 மாணவர்கள் பங்கேற்றனர்.

13.3.2009 காலை 10.30 மணிக்குத் தொடக்க விழா நடைபெற்றது. தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் டி. செல்லையா வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் டி. டேனியல் எழிலரசு முன்னிலை வகித்துப் பயிலரங்கின் முக்கியத்துவத்தை விளக்கினார். வேலூர் பேராயரும் ஊரீசு கல்லூரி ஆட்சிமன்றத் தலைவருமான பேரருள் முனைவர் ஒய். வில்லியம் தலைமை உரையாற்றினார். இதில், அவர் சங்கத் தமிழுக்குக் கிறித்துவர்களின் பங்களிப்பைப்பற்றி எடுத்துரைத்தார். மாண்புமிகு பொதுப்பணித் துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் சங்க



CICTArchives





இலக்கியம் தொடர்பாக ஆய்வு உரை வழங்கியதோடு செம்மொழி நிறுவனம் அளித்த சங்க இலக்கிய நூல்களை மாணவர்களுக்கு வழங்கினார். பேராசிரியர் கு.சிவமணி செம்மொழி நிறுவனத்தின் செயற்பாடுகளை விளக்கமாக எடுத்துரைத்தார். முனைவர் டி. மணிவண்ண பாண்டியன் நன்றி கூறினார்.

முனைவர் மு.சுதர்சன்
முனைவர் மு.தெய்வநாயகம்
பேராசிரியர் ஏ. ஆலிஸ்
முனைவர் ய. மணிகண்டன்
முனைவர் எஸ். தங்கதுரை
முனைவர் டி .எஸ். மல்லிகா
பேராசிரியர் இரா. மதிவாணன்
முனைவர் ஆர். மனுவேல்
முனைவர் இரா. பூங்குன்றன்
முனைவர் ஆர். மலர்விழி
பேராசிரியர் தி.மு. அப்துல்காதர்
முனைவர் டி. செல்வம்
முனைவர் அரங்க. இராமலிங்கம்
முனைவர் க.அ. இராசாராம்
பேராசிரியர் பி. சிவராஜி
முனைவர் எஸ். கலைமகள்
முனைவர் எஸ். சிவசங்கர்
பேராசிரியர் கு. இன்னாசி
முனைவர் கார்லோஸ்
பேராசிரியர் வ. ஜெயதேவன்
கவிக்கோ அப்துல் ரகுமான்
முனைவர் ஒ. மதிவாணன்
முனைவர் எம். பொன்னுசாமி
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் பி. கேசவன்
முனைவர் டி. மணிவண்ண பாண்டியன்
முனைவர் டி. செல்லையா
பேராசிரியர் கு. சிவமணி
முனைவர் உத்திரியமாரி சுகிர்தா

ஆகியோர் பயிலரங்கில் பங்குபெற்றுக் கருத்துரை வழங்கினார்கள்.

இப்பயிலரங்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் முதன்முதலாகச் சங்க இலக்கிய வினாடி வினாச் சுழற்கோப்பையை அறிமுகம் செய்தளித்தது. இப்போட்டியில் ஊரீசு கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்றனர். இக்கோப்பை ஒவ்வொரு ஆண்டும் மாவட்டக் கல்லூரிகள் இடையே சங்க இலக்கியப் போட்டிகள் நடத்தி வெற்றி பெறுவோருக்குச் சுழற்சி முறையில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பெற்றது.

22.3.2009 பிற்பகல் 4 மணியளவில் நடந்த நிறைவு விழாவுக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் டி.டேனியல் தலைமை தாங்கினார். பேராசிரியர் ஸ்டேன்லி ஜோன்ஸ் வரவேற்புரையாற்றினார். வேலூர் மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் பேராசிரியர் வேலுச்சாமி வாழ்த்துரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் எண்பேராய உறுப்பினர் பேராசிரியர் அப்துல் ரகுமான் தமிழ் மொழியின் பழம்பெருஞ் சிறப்புக்களை எடுத்துக்கூறிச் சிறப்புரை நல்கி ஊரீசு கல்லூரி மாணவர்களுக்குச் சுழற் கோப்பையைப் பரிசாக அளித்தார். கல்லூரி முதல்வர் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் செல்லையா நன்றி கூறினார். பேராசிரியர் கு.சிவமணி பயிலரங்கை ஒருங்கிணைத்து நடத்தினார்.

பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் என்சிபிஎச் வெளியிட்ட சங்க இலக்கிய நூல்கள் செம்மொழி நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

**பயிலரங்கு 11**

## சங்க இலக்கியச் சிறப்பியல்புகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகமும் இணைந்து, திருவேங்கடவன் பல்கலைக்கழக வளாகத்தில் 2009 மார்ச்சு 28 முதல் ஏப்பிரல் 6 வரை 10 நாட்கள் 'சங்க இலக்கியச் சிறப்பியல்புகள் பற்றித் தமிழ், தமிழ் அல்லாத மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்' என்ற பொருளில் தேசியப் பயிலரங்கத்தை நடத்தின. தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவை இப்பயிலரங்கின் ஆய்வுப் பொருளாகக்



CICTArchives



கொள்ளப்பட்டன. இப்பயிலரங்கில் ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், புதுவை ஆகிய மாநிலங் களிலிருந்து வந்த ஐம்பது மாணவர்கள் பங்குபெற்றார்கள்.

சங்க இலக்கியத்திலுள்ள ஒவ்வொரு நூலும் தனித்தனியாக ஆராயப்பெற்று இலக்கியச் சிறப்பு, இலக்கணம், மொழியியல், சமயம், நாட்டுப்புறவியல், கல்வெட்டியல், இசையியல், மகளிரியல் போன்றன ஆய்வுக் கட்டுரைகள் வழி நன்கு அறியப்பட்டன.

28.3.2009 பிற்பகல் 2 மணியளவில் தொடக்க விழா பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம். பிரபாகரராவ் தலைமையில் நடைபெற்றது. அவர் 'அயல் மாநிலத்தில் தமிழ் வளர்ச்சியும் இன்றைய நிலையும்' என்ற பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி சங்கத் தமிழ் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து விளக்கினார். எண்பேராய உறுப்பினர் கவிக்கோ அப்துல்ரகுமான் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி எடுத்துரைத்தார்.

திருப்பதி, சித்தூர், நகரி, புத்தூர், பாகாலா ஆகிய பகுதிகளில் வாழ்கிற தமிழர்களும் தமிழ் படிக்கும் மாணவர்களும் 41 செம்மொழி நூல்களை அட்டவணை இட்டு உயர்த்திப் பிடித்தவண்ணம் மேள தாளங்களுடன் வரவேற்புக் கொடுத்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

முனைவர் அப்துல்ரகுமான்
முனைவர் ஜி. கனேசன்
முனைவர் எம். வரதராசன்
முனைவர் ஆர். மலர்விழி
முனைவர் டி.எஸ். மல்லிகா
முனைவர் டி. செல்லையா
பேராசிரியர் வ. ஜெயதேவன்
முனைவர் மு. பொன்னுசாமி
முனைவர் பி. டாக்டர் நசீம்தீன்
பேராசிரியர் கரு. அழ. குணசேகரன்
பேராசிரியர் கே.ஏ. இராஜாராம்
முனைவர் மு. தெய்வநாயகம்
முனைவர் அரங்க. இராமலிங்கம்





முனைவர் சு. அழகேசன்
பேராசிரியர் டி. மணிவண்ண பாண்டியன்
முனைவர் தி. கமலி
முனைவர் வ. ஜெயா
பேராசிரியர் எஸ். கண்மணி
பேராசிரியர் டி. செல்வம்
பேராசிரியர் டி. திருவளவன்
பேராசிரியர் சூ. இன்னாசி
பேராசிரியர் அரு. மருததுரை
பேராசிரியர் அ. திருநாகலிங்கம்
பேராசிரியர் த. கனகசபை
முனைவர் என். ஞானப்பழம்
பேராசிரியர் அ. இராமசாமி
முனைவர் ஒ. முத்தையா
முனைவர் வேல். கார்த்திகேயன்
முனைவர் வி.ஜி. சொக்கலிங்கம்
முனைவர் ஏ. ஜெகதீசன்
பேராசிரியர் ஏ. முகமது அப்துல் காதர்
பேராசிரியர் பி. சிவகாமி

ஆகியோர் பயிலரங்கில் கருத்துரை வழங்கினார்கள்.

செம்மொழி நிறுவனம் அன்பளிப்பாகக் கொடுத்த என்சிபிஎச் வெளியீடான சங்க இலக்கிய நூல்களைச் சிறப்பு விருந்தினர் மாணவர்களுக்கு வழங்கினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கு. சிவமணி அறிமுகவுரை நிகழ்த்தினார். தமிழ்த் துறைப் பேராசிரியர் இரா. மனுவேல் வரவேற்புரையும் முனைவர் ஜான் மனுவேல் நன்றியுரையும் வழங்கினார்கள். பயிலரங்கம் மாணவர்களுக்கு மிகவும் பயன்தரத்தக்க வகையில் அமைந்திருந்தது.


6.4.2009 அன்று நடந்த நிறைவு விழாவுக்குத் தமிழ்த் துறை மூத்த பேராசிரியர் தேவசங்கீதம் தலைமை தாங்கினார். பேராசிரியர் இரா. மனுவேல் வரவேற்புரை நிகழ்த்தினார். எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராகத் தமிழக அரசின் உயர்கல்வி மன்றத் துணைத்தலைவர் பேராசிரியர் அ. இராமசாமி கலந்துகொண்டு செம்மொழிச் சிறப்பினை எடுத்துக் கூறிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஜான் மனுவேல் நன்றிகூறினார்.

CICTArchives



# பதிப்புக்கலை

வ. அய். சுப்பிரமணியம்



பழைய தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் பனையோலையிலிருந்து பெயர்த்துப் பதிக்கப்பட்டவை என்பதை நாமறிவோம். ஒவ்வொரு இலக்கியத்திற்கும் பல ஏடுகள் கிடைத்தமையும், அவற்றை ஆதாரமாகக் கொண்டு சுத்தப் பதிப்புக்களை வெளியிட முயன்றமையும், பதிப்பாசிரியர்கள் வாயிலாய் நாம் தெரிகின்றோம். இவ்வாறு பல ஏடுகளைப் பயன்படுத்திச் சுத்தமாகப் பதிப்பிப்பது ஒரு தனிக் கலையாக மேல்நாட்டில் வளர்ந்திருக்கிறது. நமது நாட்டில் பதிப்புப் பணியைச் சிறப்பாகச் செய்தவர்களுள்ளே உ. வே. சாமிநாதையர், சி. வை. தாமோதரம்பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை முதலியவர்களைக் குறிப்பிட வேண்டும். பதிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிலையங்களுள்ளே கம்பராமாயணத்தை வெளியிட்டு வரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தையும், அடையாற்றிலுள்ள கலாக்ஷேத்திரத்தையும் கூற வேண்டும்.

முன்னர்க் குறிப்பிட்ட மூவருள், உ. வே. சாமிநாதையர் ஏடுகளைச் சேகரித்து வகைப்படுத்தி, நல்ல ஏட்டைத் தெரிந்தெடுத்துப் பாடபேதங்களைக் குறித்துத் திறமையாகப் பதிப்பித்தார். ஆனால், சுத்த பாடங்களை நிறுவுவது அவர் நோக்கமன்று. 'அது பின்னர் ஆராய்ச்சியால் தெளிவுபட வேண்டியது' என்று அவர் கருதியிருந்தார் எனலாம். புறநானூற்றின் 280ஆவது பாடலின் 15ஆவது வரிக்கு அவர் எழுதிய குறிப்பே இதற்குச் சான்றாகும். இதனால் மிக எளிதாகத் திருத்தக்கூடியனவற்றைக்கூடத் திருத்தாமல் இருந்தவாறே அவர் பதிப்பித்துள்ளார். பாடங்களைத் தக்க சான்றுகளும், ஆராய்ச்சியும் இல்லாமல் திருத்துவது தகாது என்ற கொள்கையே அவருடைய பதிப்பிற்கு அடிப்படையாக அமைவதை நாம் ஊகித்தறியலாம். சி. வை. தாமோதரம் பிள்ளை அவ்வாறன்றி, தமக்குத் தோன்றியவாறே பல இடங்களில் திருத்த முனைந்தார். இதற்கு ஆதரவாகப் பல காரணங்களைத் தாம் பதிப்பித்த சூளாமணியின் முன்னுரையில் கூறியிருக்கிறார். ஆனால், எஸ். வையாபுரிப் பிள்ளை பதிப்புக் கலையின் நுணுக்கங்களை நன்றாகத் தெரிந்திருந்தார். அவர் பதிப்பித்த புறத்திரட்டு, அவர் ஆதரவில் வெளிவந்த சங்க இலக்கியம் ஆகியவற்றில் இந்தத் திறத்தின் சாயல்கள் தென்படினும் கம்பராமாயணப் பதிப்பு எவ்வாறிருக்க வேண்டும் என்பதைப்பற்றி விளக்கமாகக் கூறியிருக்கும் கம்பன் காவியம் என்ற நூலிலிருந்து இதனை நாம் நன்கறிய முடிகிறது. பதிப்புப் பணியில் உ. வே. சாமிநாதையர் பழைய முறையைப் பின்பற்றியவர் என்றால், வையாபுரிப்பிள்ளை புதுமுறையைப் பின்பற்ற ஆயத்தம் செய்தவர் எனலாம். இந்த இரு முறைகளின் வேறுபாட்டைத் தெரிய வேண்டுமாயின் மேல்நாட்டில் சிறப்பிடம் பெற்று விளங்கும் பதிப்புக் கலையின் (டெக்ஸ்டுவல் கிரிட்சிஸம்) போக்கை ஓரளவேனும் நாம் தெரிய வேண்டும்.

ஓர் இலக்கியத்தின் 'சுத்தப் பதிப்பு' பாடத்தில் காணும் ஐயங்களை நீக்கிப் பொருள் தெளிவு ஏற்பட வழிசெய்ய வேண்டும். படிப்பவர்கள் தாமே பாடத்தை உறுதிசெய்து கொள்வதற்காக எல்லாப் பிரதிகளிலும் காணும் பாடங்களையும் ஒழுங்காகப் பிழையின்றிக் கொடுக்க வேண்டும். பலவகையான பிரதிகளிற் காணும் எல்லாப் பாடல்களையும், வரிகளையும் சுத்தப் பதிப்பு கொண்டிருக்க வேண்டும். தெளிவற்ற ஒரு சொல்லால் அல்லது ஒரு வரியால் பாட்டின் பொருள் குறித்து மயங்க நேரிடும். எனவே இலக்கியத்தை அனுபவிப்பதற்குப் பாடத்தெளிவு மிகவும் இன்றியமையாதது. இதுமட்டுமன்று; பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் கால வரையறை பெறாதவை. இவற்றின் காலத்தை நிர்ணயிப்பதற்குரிய ஒரேவொரு நம்பகமான வழி, மொழிநிலை ஆராய்ச்சியாகும். பாடத் தெளிவும் உறுதியும் இல்லாவிடின் நிலையான எந்த முடிவும் இந்தத் துறையில் ஏற்படுவது இயலாது. எனவே, தமிழ் மொழி வரலாற்றுக்குப் பதிப்புக் கலையின் தேவையை மேலும் வற்புறுத்த வேண்டிய தேவையில்லை அல்லவா?


''சுத்தப் பதிப்பை வெளியிட நினைக்கும் ஆசிரியர் முதன்முதலில் அந்த நூலினுடைய எல்லாப் பிரதிகளையும் தேடித் திரட்ட வேண்டும். ஏடுகளைத் தவிர வேறு பிரதிச்சான்றுகளும் பதிப்பிற்குப் பயன்படும்.'' எல்லாரும் படித்து இன்புறுவதற்கெனச் சிறந்த இலக்கியங்களின் வசனங்கள் அச்சுருவிலும் ஏட்டுரு

விலும் இருக்கின்றன. கம்பராமாயண வசனங்கள், பல கம்பர் பாடல்களை இடையிடையே கொண்டு ஏட்டுருவில் இருப்பது நாமறிந்ததே. இத்தகைய பிரதிகளையும் திரட்ட வேண்டும். இவற்றைப் போலவே ஒவ்வொரு காலத்திலும் இலக்கிய ஆய்வாளர்கள் பாக்களைத் திரட்டிச் சேர்த்திருக்கின்றனர். இலக்கியங் களின் சுருக்கங்களைத் தொகுத்திருக்கின்றனர். உரையாசிரியர்கள் பலர் இலக்கியங்களின் அடிகளை எடுத்தாண்டிருக்கின்றனர். சில இலக்கியங்களின் பழைய மொழிபெயர்ப்புகளும், அவற்றின் பதிப்பிற்குப் பயன்படும். இவற்றைத் துணைச்சான்று *(டெஸ்டிமோனியா)* என்பார்கள். எனவே இந்தத் துணைச்சான்றுகளையும் ஏட்டுப் பிரதிகளுடன் சேகரிக்க வேண்டும். அவ்வாறு திரட்டும்போது பிரதிகள் பற்றிய வரலாற்றையும் நுணுக்கமாகப் பதிப்பாசிரியர் குறித்துக் கொள்வது நலம். அதன்பின் ஏட்டுப் பரிசோதனைப் பணியில் பதிப்பாசிரியர் ஈடுபட வேண்டும். கிடைத்த ஏடுகள் முழுவதும் பரிசோதித்தால் ஏதேனும் ஒன்று நல்ல ஏடாக *(நார்ம்)* அவருக்குத் தோன்றும். அதனை, வரிவரியாகவோ, பாட்டாகவோ ஒவ்வொரு பக்கத்திலும் எழுதி வைத்துக்கொண்டு ஏனைய பிரதிகளுடன் ஒப்பிட வேண்டும். இவ்வாறு ஒப்பிடும்போது, பாடவேறுபாடு, இடையீடு, வரிமாற்றம், பாடல் மாற்றம், ஓரங்களில் காணும் குறிப்பு, வேறு பல செய்திகள் முதலியவற்றைப் பதிப்பாசிரியர் கூர்ந்து கவனிக்க வேண்டும். இவற்றைப் போலவே, துணைச்சான்றுகளையும் பரிசோதித்துக் குறிப்பெடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு திரட்டிய குறிப்புக்களின் மூலம், பிரதிகளின் தொடர்பு பதிப்பாசிரியருக்கு நன்கு விளங்கும்.

இலக்கிய ஆசிரியர் தாமே எழுதிய அல்லது பிறர் எழுதத் தாமே சரிபார்த்துத் திருத்திய பிரதியைத் தன்பிரதி *(ஆட்டோகிராப்)* என்பர். இந்தப் பிரதி கிடைக்குமாயின், அந்த இலக்கியத்தின் பாடத்திற்கு இதைவிட உறுதி நல்கும் வேறொரு சான்று இருக்க முடியாது. பின்னுள்ளவர்கள், இந்தப் பிரதியைப் பலமுறை நகல் செய்திருப்பார்கள். இவ்வாறு செய்பவர்கள் மனிதர்கள் ஆகையால், அறிந்தோ அறியாமலோ பல மாறுபாடுகள் நகலில் புகுவது திண்ணம். எடுத்துக்காட்டாகப் புறநானூற்று ஏட்டை எழுத்தர் சொக்கன், நகல் எடுத்தார் என வைத்துக்கொள்வோம். அந்த நகலிலிருந்து எழுத்தர் முருகன் மீண்டும் நகல் செய்தார் என்றும் கொள்வோம். ஒவ்வொரு நகலிலும் ஒரு விழுக்காடு பிழை இருக்கும் என்றும் வைத்துக்கொள்வோம். புறநானூற்றின் மூலப் பிரதி முற்றிலும் *(100%)* சரியாக இருக்கும். சொக்கனின் நகல் ஒரு விழுக்காடு குறை உடையதாக இருக்கும். இதிலிருந்து தலைமுறையாக வழங்கிவரும் இலக்கிய ஏட்டு நகல்களில் எவ்வளவு மாறுபாடுகள் மலிந்திருக்கும் என்று தெளியலாம். மேலே காட்டிய எடுத்துக்காட்டிலிருந்து நகல்களைவிட அசல் ஏடுகள் பிழை குறைந்து, பழைமையுடையதாக இருக்கும் என்பது நமக்குத் தெரியவரும். அவ்வாறு அசல் ஏடுகளைத் தெரிந்தெடுத்தால் அவற்றின் பாடத்திற்கு மதிப்பும், உத்தரவாதமும் நாம் நல்க இயலும். நகல்களை நாம் விட்டுவிடவும் இயலும்.

ஆனால், ஒரு ஏட்டை எவ்வாறு அசலா, நகலா என்று தீர்த்துக் கூறுவது? இது எளிதன்று. நகல் அசலிலிருந்து காலத்தால் பிற்பட்டதாகத்தான் இருக்க வேண்டும். அசலுக்கும் நகலுக்கும் இடையே காணும் மிகப்பெரிய ஒற்றுமையால் ஒன்று மற்றொன்றின் நகலே என்று கூறும் விளக்கம் தவிர மற்றொரு விளக்கமும் அங்குப் பொருந்தாததாக இருக்க வேண்டும். இரு ஏடுகளின் ஒற்றுமையை நிர்ணயிக்கும்போது அவற்றில் காணும் சில பிழைகள் பதிப்பாசிரியருக்கு உதவியாக இருக்கும். குறிப்பிட்ட, ஆனால் முக்கியமற்ற தவறுகளை இரு பிரதிகள் கொண்டிருந்தால், அல்லது குறிப்பிட்ட பகுதிகளும் சொற்களும் இரண்டு ஏடுகளில் மட்டும் காணப்படுமாயின், அந்த ஏடுகளிடையே நெருங்கிய தொடர்பு இருக்கின்றது எனப் பதிப்பாசிரியர் துணிந்து கூற இயலும். இவ்வாறு தொடர்புடைய இரண்டில் அசாதாரணமான தவறுகள், ஒன்றில் காணப்படும்போது அவற்றை மற்றொன்றின் உதவியால் தெளிய முடியுமாயின், பின் பிரதியை மூலப் பிரதி என்று கூற இயலும். இந்த நுணுக்கங்களை அறிவதற்கும், அவற்றின் அடிப்படையில் தீர்வு காணுவதற்கும் பதிப்பாசிரியரே பிரதிகளைப் பரிசோதித்தறிய வேண்டும்.

இவ்வாறு பிரதிகளின் தொடர்பை அறிந்ததும், பதிப்பாசிரியருக்கு மற்றொரு உண்மை புலனாகும். அதாவது, பாடப் பொருத்தம், மூலப் பொருத்தத்தைக் காண்பிக்கும் என்பதாகும். பாடப் பொருத்த அடிப் படையில் பிரதிகளின் குடும்ப உறவை நிர்ணயித்துவிட முடியும். இதை நான் சற்று விளக்க வேண்டும். சிலப்பதிகாரத்தின் புதிய பதிப்பு ஒன்றிற்கு எட்டுப் பிரதிகள் கிடைத்தன என வைத்துக்கொள்வோம். இவற்றில் காணும் பாடப் பொருத்தத்தை ஆராய்ந்த பொழுது முதற் பிரதி, தனித்து நிற்பதாகத் தோன்றியது. ஏனைய ஏழு பிரதிகளில், முதல் மூன்றும் ஒரு வகையான உறவையும், மீதமுள்ள நான்கு பிரதிகளும் மற்றொரு வகையான உறவையும் உடையனவாகத்




தெரிந்தன. எனவே, இந்தப் பிரதிகளை மூன்று குடும்பமாக நாம் பகுத்துக்கொள்ளலாம். இந்தக் குடும்பம் மூன்றும், மூல ஏடு ஒன்றிலிருந்து பிறந்தன என்று கூறுவது விஞ்ஞான நெறியை ஒட்டியதாக இருக்கும். இத்தகைய உறவுமுறையை உயிரியல் துறை நன்கு தெளிவாக்கும். மேலே குறிப்பிட்ட மூன்று குடும்பங்களும், மூல ஏடு ஒன்றிலிருந்து பிறந்தது போல ஒவ்வொரு குடும்ப ஏடுகளும் ஒரு மூல ஏட்டைத் தமது பிறப்பு மூலமாகக் கருதுவது இயலும். இவ்வாறு கருதும் பிறப்புவழி ஏடு உண்மையில் கிடைக்கப்பெறாததாக

இருப்பினும், அதன் கூறுகளை ஊகிக்க இயலும். எனவே, முதல் குடும்பத்தைச் சேர்ந்த 2, 3, 4 ஆகிய மூன்று பிரதிகளுக்கும் ஆ என்னும் பிறப்புவழி ஏடு மூலமாக அமையும். இதைப் போலவே, 5, 6, 7, 8 ஆகிய நான்கு பிரதிகளுக்கும் ஈ என்னும் பிறப்புவழி ஏடு மூலமாக அமையும். முதல் ஏட்டிற்குக் குடும்ப அங்கங்கள் இல்லை என்பதை முன்னர்க் கண்டோம். எனவே, கிடைத்த, சிலப்பதிகார ஏடுகள் எட்டும், கீழ்வரும் மரபு வழியை உடையதாக இருக்கும். மூல ஏட்டை 'மூ' என்று குறித்தால், அதிலிருந்து 1, ஆ, ஈ என்னும் மூன்று பிறப்புவழி ஏடுகள் நகலாக்கப் பட்டிருக்கும் 'ஆ' விலிருந்து 2, 3, 4 ஆகிய மூன்று பிரதிகள் தோன்றியிருக்கும். 'ஈ' யிலிருந்து 5,6,7,8 ஆகிய நான்கு பிரதிகள் தோன்றியிருக்கும்.

இதில் மூ, ஆ, ஈ ஆகிய மூன்றும் கற்பித ஏடுகள். ஆனால், இவற்றின் பாடத்தை இவை ஒவ்வொன்றின் அங்கங்களுடைய பாடப் பொருத்தத்திலிருந்து நிறுவ இயலும். 'மூ' வின் பாடத்தை '1', 'ஆ', 'ஈ' ஆகிய மூன்று ஏடுகளின் பொருத்தத்திலிருந்தும், 'ஆ', 'ஈ' ஆகிய இரண்டின் பாடங்களை முறையே 2, 3, 4 என்னும் ஏடுகளிலிருந்தும் 5, 6, 7, 8 என்னும் ஏடுகளிலிருந்தும் நிறுவ இயலும். இவற்றில் 5, 6, 7, 8 ஆகிய ஏடுகளில் காணும் பாடங்களைவிட, 'ஈ'யின் பாடங்கள் நம்பக மாகவும், பழமையானதாகவும், தவறு குறைந்ததாகவும் இருக்கும். இதைப்போலவே, 'ஆ'வின் பாடமும் 2, 3, 4 ஆகிய ஏடுகளைவிட உண்மையானதாக இருக்கும். 1, ஆ, ஈ ஆகிய மூன்றின் பாடங்களை விடவும் 'மூ'வின் பாடம் மிக நம்பகமானதாக இருக்கும். எனவே, ஏடுகளை மரபுவழியாக வகைப்படுத்திக் கொண்டால், குறைந்த தவற்றையுடைய நம்பகமான பழைய பாடத்தை எளிதில் நிறுவ இயலும்.

இவ்வாறு ஏடுகளை வகைப்படுத்தும்போது, சில சமயம் ஒரே ஒரு மூலத்திலிருந்து அவையனைத்தும் பிறந்தவையாகக் கருத இயலாதுபோகும் இடமும் உண்டு. அங்கே, இருவேறு வகையான ஏடுகளின் கூட்டத்தைக் காண நேரிடும். வியாச பாரதத்தினுடைய புதிய பதிப்பிற்கு ஏடு திரட்டிய சமயம் இரு மூலங்களிலிருந்தும் ஏடுகள் பிரிந்திருப்பதாகப் பதிப்பாசிரியர் சுக்தங்கர் கருதியிருக்கிறார். இவற்றைப் பிளவுக் குடும்பங்கள் *(ரிசன்சன்ஸ்)* என்பர். இவற்றில் பாட வேறுபாடு காணப்படும் இடங்களை வேறெந்த வழியிலும் தெளிய இயலாதாயின், இந்தக் குடும்பங்களில் ஒன்றின் பாடத்தை மூல பாடத்தில் கையாளலாம். வடக்குப் பிளவுக் குடும்பத்தின் பாடத்தை உத்தரவாதமுள்ளதாக சுக்தங்கர் கருதுவதைக் கவனிக்க.

சில பிரதிகள் இருவேறு குடும்பப் பிரதிகளின் கூட்டுப் பிரதியாக இருக்கும். இரண்டு குடும்பங்களில் காணும் எல்லாத் தனி இயல்புகளும் ஒரு பிரதியில் காணப்படுமாயின், அதைக் கலப்புப் பிரதி *(மிக்ஸ்டு கோடக்ஸ் ஆர் கோன்ஃபிலேடட் மேனுஸ்கிரிப்ட்)* என்பர். கலப்பதற்கு மூலமாக இருந்த குடும்பப் பிரதியொன்று அழிந்துவிட்டால், இந்தக் கலவைப் பிரதிகளிலிருந்து அழிந்துபோன குடும்பத்தின் தனி இயல்புகளை நாமறிய இயலும். இது தவிர, இத்தகைய கலவைப் பிரதிகளால் அதிகப் பயன் இருப்பதாகத் தோன்றவில்லை.

இவ்வாறு பிரதிகளையும் துணைச் சான்றுகளையும் திரட்டி வகைப்படுத்தி, மரபுவழி நிறுவுவதை, *ஹியூரிஸ்டிக்ஸ்* என்பர். இவற்றால் பாடம் நிறுவுவதற்குக் கிடைக்கும் சான்றுகளைப் பிரதிச் சான்றுகள் என்பர். பிரதிகள் உலகில் வழங்கும்போது பல தவறுகள் இடம்பெறுகின்றன. அவற்றைத் தெளிவதற்கு இரு வகையான சான்றுகள் உதவும். முதற்சான்று, மேற் குறித்த பிரதிச் சான்று. இதனைப் புறச்சான்று என்பர். மற்றொரு சான்று அகச்சான்றாகும். இந்த அகச் சான்றுகளுள்ளே எழுத்தரால் நேரும் பிழைகளை ஆராய்வது மிக இன்றியமையாதது. கம்பராமாயணப் பிரதிகள் சிலவற்றில் இடைச்செருகல்கள் இருப்பதை நாமறிவோம். இவையும் எழுத்தரால் நிகழும் மாற்றமாகும். இவ்வாறு இடைச்செருகுதற்குரிய காரணங்களுள், பொருளில் காணும் சில சிக்கல்கள், செய்யுளமைப்பில் பிழை, பொடிந்த இடங்களை நிரப்பும் முயற்சி, மதவேறுபாடு ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். எழுத்தர் வெறுக்கும் செய்திகள் விடுபடுவதும், விரும்பும் செய்திகள் இடம் பெறுவதும் உண்டு. இடைச்செருகல்கள் புத்திபூர்வமாகச் செய்யப்படும் மாறுதல்களாகும். இவ்வாறு பிரதிகளில் காணும் தவறுகளை ஆராய்வதால், ஒரு பாடம் மூல உருவமா சிதைந்த உருவமா எனத் தெளிவது எளிது. வேறுபட்ட எழுத்தர்கள் வேறுவேறு தவறுகளைச் செய்வார்கள் ஆகையால், எழுத்தர் ஒவ்வொருவருடைய குறைகளையும் நாம் ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

இலக்கிய ஆசிரியர் கையாளும் செய்யுளமைப்பு முறையையும் நன்கு தெரிதல், சுத்தப் பதிப்பிற்கு

> **“சந்தேகமான இடங்களில் பழைய பாடத்தைக் கொடுப்பதால் படிப்பவர்களிடையே இது அருவருப்பைத் தோற்றுவிக்கும். திருந்தாத பாடத்தைத் திருத்திக்கொடுக்கும் வாய்ப்பு இருந்தும், கொடுக்காமல் பதிப்பாசிரியர் விடுவதால் கீழ்வரும் இரண்டில் ஒன்று நேரிடும். ஒன்று, வாசகர்களுக்கு அந்தப் பகுதியின் பொருள் விளங்காது போகும். இரண்டு, திருந்தாப் பாடத்தைக் கொள்வதால் ஏனைய பகுதிகளின் பொருளும் விளங்காமல் போகும். அல்லது அவற்றைத் திரித்தே பொருள் கொள்ள வேண்டும்.”**

இன்றியமையாதது. பாடத் தெளிவில்லாத இட மொன்றில் மட்டும், செய்யுளமைப்பு கெட்டிருக்கு மாயின், அங்குள்ள பாடம் தவறானது என்பது கூறாமலே விளங்கும்.

இலக்கிய ஆசிரியரின் சொற்பிரயோகங்களையும் ஊன்றிக் கவனிக்க வேண்டும். இதற்குச் சொல்லடைவு ஒன்று மிகவும் துணைசெய்யும்.

ஒவ்வொரு இடத்திலும் அமைந்துள்ள பாடம் பொருட் பொருத்தமுடையதா, ஆசிரியரின் கருத்து தொடர்புபட்டு வருகின்றதா என்றும் கவனிக்க வேண்டும்.

''பாடத்தைச் சந்தேகிக்கின்றவர்களுக்கு முக்கியக் காரணமாக அமைவது பொருளின்மை, பொருத்தமற்ற பொருள், ஆசிரியர் காலத்தில் வழக்கில் இல்லாத சொல்லாட்சி, செய்யுளமைப்பில் பிழை, கருத்துத் தொடர்பில் இடையீடு முதலியவை ஆகும்.'' இவ் வடிப்படைகள் ஒன்றையொன்று மறுப்பனவாகக் கருதக் கூடாது. இன்னோசை உடையதாக இருப்பதால், பொருளற்ற பாடமொன்றை உண்மைப் பாடம் என்று உறுதிப்படுத்துவது இயலாது. ஆனால், ஒவ்வொன்றும் துணைக் காரணமாக நின்று உறுதிசெய்யும். பாடத்தைச் சீர்தூக்கிக் காணும்போது, நாம் விரும்பும் நடை, அறநினைவு முதலியவற்றை அறவே மறந்துவிட வேண்டும். ஆசிரியர் எதைச் சொல்ல வேண்டும் என்பது பதிப்பாசிரியரின் நோக்கமாக இருக்கக்கூடாது. எதைச் சொன்னார் என்பதே நோக்கமாக இருக்க வேண்டும். இவ்வாறு பதிப்பாசிரியர் தமக்குக் கிடைத்த பிரதிச் சான்றுகளால் மிகப் பழைய பாடத்தை அறுதி யிட்டவுடன் மேலே குறிப்பிட்ட அகச்சான்றுகளையும் பொருத்திப்பார்க்க வேண்டும். பாடத்தின் எந்தப் பகுதியும் இத்தகைய பரிசோதனையிலிருந்து விலக்கத் தக்கதன்று. எனினும், பெரும்பகுதியை இதிலிருந்து விலக்க இயலும். இவ்வாறு பாடத்தை அறுதியிடுவதை *ரிசன்சியோ* என்பார்கள்.

இம்முறையிற் கண்ட பாடத்தில், எது இலக்கிய ஆசிரியர் எழுதியது அல்லது அவ்வாசிரியரால் எழுதப்பட்டிருக்கக்கூடியது என்று நிர்ணயிப்பதே அடுத்த வேலை. இதனை உண்மைப் பாடம் காணல் என்பர். அறுதியிட்ட பாடத்தைப் பற்றி நால்வகையான முடிவுகள் பிறக்கும்: 1. ஏற்பது, 2. சந்தேகிப்பது, 3. நிராகரிப்பது, 4. மாற்றுவது. இதில் முதல் மூன்று தீர்வுகளுக்கும் அகச்சான்றுகள் மிகவும் துணைசெய்யும். பாடத்தைத் திருத்துவது பொருட் பொருத்தமும், செய்யுளிலக்கண அமைதியும் உடையதாக இருந்தால் மட்டுமே ஏற்க வேண்டும். அவற்றோடு மாற்றிய பாடம், பிரதிகளில் கிடைக்கும் பாடபேதங்களின் மூல உருவமே என்று தெளியக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இந்த மூன்று சோதனைகளிலும், திருத்தங்கள் தேறிவிட்டால் அவற்றை ஒப்புக்கொள்ள இயலும். ஏனைய சோதனைகள் மறைமுகமாகத் திருத்தங்களை உறுதி செய்யத் துணைநிற்கும்.

இதுவரை, பதிப்புக்கலை பற்றிய எல்லாக் கூட்டத்தினரின் முயற்சியும் ஒத்தேயிருக்கின்றன. இனிமேல் வரும் கோட்பாடு ஒன்றில் மட்டும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. பதிப்பாசிரியர்களுள் ஒரு சாரார் ஒப்புக்கொள்ளப்பட்ட பாடத்தைப் பதிப்பில் கொடுப்பர். இதில் மாற்றிய பாடமும் இடம்பெறும். இது நகவளைவுக்குள்ளோ அல்லது சதுரக் கோட்டினுள்ளோ அடங்கியிருக்கும். இவ்வாறு செய்பவர்கள் புதுமுறைப் பதிப்பாசிரியர்கள். மற்றொரு சாரார் வழிவழியாக வழங்கும் பாடத்திற்கு மதிப்புக் கொடுத்து அதை மட்டும் பதிப்பிப்பர். திருத்த மாற்றங்களை அடிக்குறிப்பிலோ பிற்சேர்க்கையிலோ கொடுப்பர். இதற்கு அவர்கள் கூறும் காரணம் திருத்துவது உண்மையை மறைப்பதாகும் என்பதே. இதனால் பாடத்தின் உறுதிப்பாடு குறையும். ஒரு பாடம், மூல பாடம் அல்லதாயினும், பிரதிகளில் காணும் அதன் உருவத்தைக் கொடுப்பது திருத்தங்களைக் கொடுப்பதைவிட மேலானதாகும். இவ்வாறு பழைய முறைப் பதிப்பாசிரியர்கள் தக்க ஆராய்ச்சியின்றிப் பாடத்தைத் திருத்துவதில்லை. ஆனால், ஆசிரியர் எழுதியிருக்கக்கூடியதைப் பாடத்தில் கொடுப்பதே மேல். அதை விடுத்து அவர் எழுத இயலாதவற்றைக் கொடுத்தல் நன்றன்று என்று புதுமுறைப் பதிப்பாசிரியர்கள் வாதிக்கின்றனர்.

சந்தேகமான இடங்களில் பழைய பாடத்தைக் கொடுப்பதால் படிப்பவர்களிடையே இது அரு வருப்பைத் தோற்றுவிக்கும். திருந்தாத பாடத்தைத் திருத்திக்கொடுக்கும் வாய்ப்பு இருந்தும், கொடுக்காமல் பதிப்பாசிரியர் விடுவதால் கீழ்வரும் இரண்டில் ஒன்று நேரிடும். ஒன்று, வாசகர்களுக்கு அந்தப் பகுதியின் பொருள் விளங்காது போகும். இரண்டு, திருந்தாப் பாடத்தைக் கொள்வதால் ஏனைய பகுதிகளின் பொருளும் விளங்காமல் போகும். அல்லது அவற்றைத் திரித்தே பொருள் கொள்ள வேண்டும்.

திருத்துவதற்குப் பதிலாக, பொருளைத் திரித்துக் கூறுவதைப் பழைய முறையினர் பாராட்டுவர். எவ்வகைத் திருத்தத்தையும் அவர்கள் வெறுக்கின்றனர். இது ஒரு குறையாகும். மயங்கிக் குழம்பிய பகுதிகளைத் தெளிவாக்குவதற்கு ஆதாரத்துடன் திருத்துவதே புது முறையினரின் கொள்கை. ஒரு மயக்கத்தைத் திருத்தும் போது பிழையின்றி எவ்வளவு திருத்த முடியும் என்று கூர்ந்து நோக்க வேண்டும். பல வழிகளில் ஒன்றைத் திருத்த இயலுமாயின் அந்த மயக்கந்தரும் பாடம் அவ்வாறே விடப்பட வேண்டும். மிகத் தெளிவான தவறுகளை நூலாசிரியரே செய்ய இயலுமல்லவா? திருத்த இயலாத இடங்களை நூலாசிரியர் அவ்வாறே கருதியிருந்தார் என்று கொள்ளுதலே தக்கது.

புலமை அல்லது பிறருடைய உத்தரவாதம் பதிப்புக் கலையில் இடம்பெறுவது நன்றன்று. சான்றுகளைச் சீர்தூக்கி முடிவு காண வேண்டுமேயொழிய பிறர் நல்கும் உத்தரவாதத்தைக் கவனித்தல் கூடாது. இதனால், ஆராய்ச்சி உணர்வு குறையும். பல பதிப்பாசிரியர்கள் உடன்பட்டிருப்பது பாட நிச்சயத்திற்கு அடிப்படையாக அமையாது.

•

**நன்றி: வ. அய். சுப்பிரமணியம் கட்டுரைகள், (2007) தொகுதி - 1, பக். 171-179**

CICTArchives



# கருத்தரங்குகள்

*கருத்தரங்கு 1*

## தமிழ் இலக்கியங்களின் கால வரையறை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சை பெரியார் - மணியம்மை பல்கலைக்கழகப் பெரியாரியல் சிந்தனை மையமும் இணைந்து 2009 சனவரி 9ஆம் நாள் முதல் 11ஆம் நாள் முடிய மூன்று நாட்கள் செம்மொழித் தமிழ் இலக்கியக் கால ஆராய்ச்சிக் கருத்தரங்கை நடத்தின.

9.1.2009 காலை 9.30 மணியளவில் தொடக்க விழா நடைபெற்றது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ந.வேலுசாமி (இயக்குநர், பெரியாரியல் சிந்தனை மையம்) தமது வரவேற்புரையில் கருத்தரங்கின் தேவை, அதை நடத்த எடுத்த முயற்சி, செம்மொழி நிறுவன ஒத்துழைப்பு ஆகியவற்றை எடுத்துரைத்தார்.

கருத்தரங்கத் தலைமையுரை ஆற்றிய பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் நல். இராமச்சந்திரன் கட்டடவியல் (பகுதி நேரம்) பொறியியல் பட்டம் தமிழ் வழியில் கற்பிக்கப் படுவதாகவும் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குப் பல நடவடிக்கைகள் எடுத்துவருவதாகவும் குறிப்பிட்டார்.

கருத்தரங்க நோக்கம் பற்றிச் சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் சோ. ந. கந்தசாமி கால ஆராய்ச்சிக்குக் கல்வெட்டுக்கள், புதை பொருட்கள், நாணயங்கள், இலக்கியச் சான்றுகள் உதவுகின்றன என்றும் செம்மொழித் தமிழ் இலக்கியங்களின் காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 5ஆம் நூற்றாண்டு வரையிலான 1000 ஆண்டுகள் என்பது பொதுவான கணிப்பு என்றும் குறிப்பிட்டார்.

ஆய்வுக் கோவையைப் பெற்றுக்கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் உலகின் தொன்மையான நாகரிகம் எது என்ற வினாவுக்கு விடை கூறுவதற்கே செம்மொழித் தமிழ் இலக்கியக் கால ஆராய்ச்சி என்று தெரிவித்தார்.

பல்கலைக்கழக வேந்தர் திரு கி. வீரமணி இலக்கிய ஆராய்ச்சிகள் தொடர் நிகழ்வாக இருக்க வேண்டும் பரவலாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரெ. குமரன் திட்ட விளக்கவுரையாற்றினார். எண்பேராய உறுப்பினர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் வாழ்த்துரை வழங்கினார்.

ஐம்பதுக்கும் அதிகமான அறிஞர்கள் பல பகுதிகளிலிருந்தும் வந்து கலந்துகொண்ட கருத்தரங்கில் ஐந்து அமர்வுகளில் கீழ்க்காணும் அறிஞர்கள் தம் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர்.

முனைவர் ஔவை. நடராசன்
பேராசிரியர் தமிழண்ணல்
முனைவர் கருவை பழனிச்சாமி
பேராசிரியர் சோ. ந. கந்தசாமி
முனைவர் மு. சதாசிவம்
முனைவர் நா. செல்வராசு
முனைவர் மயில்சாமி
முனைவர் அ. அறிவுநம்பி
முனைவர் வி. மாரிமுத்து
பேராசிரியர் அ. அ. மணவாளன்
கவிவேந்தர் கா. வேழவேந்தன்
முனைவர் இரா. மதிவாணன்
முனைவர் அர. பூங்குன்றன்
முனைவர் எஸ். சந்திரா
முனைவர் எம். முத்துலட்சுமி
முனைவர் எஸ். அருணாசலம்
முனைவர் தி. கமலி
முனைவர் ஆர். சாம்ராஜா
முனைவர் ஆர். விவேகாநந்தகோபால்
முனைவர் ஆறு. அழகப்பன்
முனைவர் எம். கோவிந்தராசு

11.1.2009 ஞாயிறன்று மாலை நடந்த நிறைவு விழா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் மு. அய்யாவு தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் நல். இராமச்சந்திரன் தமிழ் இலக்கியக் கால ஆராய்ச்சியைக் கி.மு., கி.பி. என்று கணக்கிடாமல் திருக்குறளுக்கு முன் (தி.மு.) திருக்குறளுக்குப் பின் (தி.பி.) எனக் கணக்கிடலாம் என்றார்.

பேராசிரியர் தமிழண்ணல், பெரியார் மிகத் துணிச்சலானவர், அவர் துணிச்சலால்தான் யாரும் தயங்கும் கால ஆராய்ச்சி இங்கே தொடங்கப்பட்டுள்ளது, இது தொடர வேண்டும் என்று குறிப்பிட்டார்.



தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் ஔவை. நடராசன், செம்மொழித் தகுதியை மாண்புமிகு முதலமைச்சர் பெருமுயற்சியால் பெற்றுள்ளோம். அதை மறக்காமல், கால ஆய்வு முதல் அனைத்து ஆய்வுகளையும் கவனமாக மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நிறைவுரையாற்றிய தமிழக அரசின் வணிக வரித்துறை அமைச்சர் மாண்புமிகு சி. நா. மீ. உபயதுல்லா, 'தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் காலம் தமிழறிஞர்களுக்குச் சிறப்பான காலம், இலக்கியத்தை அறிவியலுடன் இணைத்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்' என்று பேசினார்.

முனைவர் ச. அருணாசலம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**கருத்தரங்கு 2**

# தமிழ் – அரபு மொழிச் செவ்வியல் இலக்கியங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வாணியம்பாடி இசுலாமியா கல்லூரியும் இணைந்து 2009 சனவரி 20, 21, 22 ஆகிய மூன்று நாட்களில் தமிழ் - அரபு மொழிச் செவ்வியல் இலக்கியங்கள் என்ற பொருளில் தேசியக் கருத்தரங்கை வாணியம்பாடியில் நடத்தின. தமிழ், அரபு ஆகிய மொழிகளைப் பயிலும் 200 மாணவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயனடைந்தார்கள்.





தொடக்க விழா 20.1.2009 காலை 10 மணியளவில் இசுலாமியா கல்லூரி முதல்வர் முனைவர் மேஜர் சையத் ஷஹாபுத்தீன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ப. சிவராஜி வரவேற்புரை நல்கினார். செம்மொழித் தமிழாய்வு நிறுவன எண்பேராய உறுப்பினர் கவிக்கோ அப்துல் ரகுமான், 'அரபும் தமிழும் உலகின் தொடக்கக் கால மொழிகள்' என்றும் 'பிற மொழிகட்கு எல்லாம் தாயும் தந்தையும் போன்றவை' என்றும் கூறியதுடன் ஆதி மாந்தர்களுள் ஆதாம் தமிழகத்துக் குமரிக் கண்டத்தவர் என்றும் ஏவாள் அரபு நாட்டு மங்கை என்றும் விவிலிய ஆதாரம் காட்டித் தமிழ் - அரபு உறவை நிறுவ முயன்றார். செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் முனைவர் கா. கோ. வேங்கடராமன் நன்றி கூறினார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கில்,

முனைவர் பி. நிசார் அகமது
முனைவர் தி. மு. அப்துல்காதர்
முனைவர் எம். மீரான்பிள்ளை
முனைவர் முகமது அலி ஜின்னா
எழுத்தாளர் தோப்பில் முகமது மீரான்
முனைவர் என்.எம்.அகமது இப்ராஹீம்
முனைவர் எம். கே. ஷபிராபேகம்
முனைவர் எம். முஸ்தபா ஷெரிப்
முனைவர் அப்துல் மாலிக்
முனைவர் கே. எம். ஏ. அகமது சுபைர்
பேராசிரியர் ஜே. மனுவேல்
மௌலவி தேங்கை சர்புதீன்
முனைவர் முகமது பலுலையா ஷெரிப்

உள்ளிட்ட 15 அறிஞர்கள் கட்டுரை அளித்துக் கருத்துரை வழங்கினார்கள்.

தமிழ்ப் பாடல்களையும் உரைநடை நூல்களையும் அரபு எழுத்துக்களில் எழுதிவைத்துப் படிக்கும் பழக்கம் நெடுங்காலமாக நிலவிவந்ததைக் கட்டுரையாளர்கள் சிலர் சுட்டிக்காட்டினார்கள். வேறு சிலர் அரபு மொழிக்கும் தமிழுக்கும் இடையிலான இலக்கண ஒற்றுமை குறித்தும் அற இலக்கிய ஒற்றுமை குறித்தும் உரையாற்றினார்கள்.

22.1.2009 பிற்பகல் 3 மணியளவில் நடந்த நிறைவு விழாக் கூட்டத்திற்குக் கல்லூரி நிருவாகச் செயலாளர் ஜனாப் சு. கெய்சர் அகமது தலைமை தாங்கினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. கோ. வேங்கடராமன் அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் மேஜர் சையத் ஷகாபுத்தீன் நிறைவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பா. சிவராஜி நன்றிகூறக் கருத்தரங்க நிகழ்ச்சிகள் இனிதே நிறைவடைந்தன.

CICTArchives



கருத்தரங்கு 3

# சங்க இலக்கியத்தில் சமூகவியற் பண்புகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் எட்டையபுரம் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் தொ.மு.சி. இரகுநாதன் கல்வி அறக்கட்டளையும் இணைந்து 2009 பிப்பிரவரி 7, 8 ஆகிய இரண்டு நாட்களில், 'சங்க இலக்கியத்தில் சமூகவியற் பண்புகள்' என்ற பொருளில் தேசியக் கருத்தரங்கைத் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் நடத்தின.

7.2.2009 காலை 9 மணியளவில் நடந்த தொடக்க விழாவுக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறைத் தலைவர் முனைவர் இ. முத்தையா தலைமை தாங்கினார். சங்க இலக்கிய ஆய்வை மார்க்சியப் பார்வை, பின் நவீனத்துவப் பார்வை ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்த்த வேண்டும் என்று தலைமையுரையில் கூறினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறை மேனாள் தலைவர் முனைவர் தொ. பரமசிவன் சங்க இலக்கியத்தில் மக்களின் வாழ்வியல் முறைகள், தொழில், வாணிபம், ஒழுக்க நெறிகள், சட்டங்கள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருந்தன என்பதை எடுத்துக் கூறினார்.

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கி. செயக்குமார் வாழ்த்துரையில் செம்மொழி நிறுவனம் ஆற்றிவரும் பணிகள் குறித்து எடுத்துக்கூறினார். கலை இலக்கியப் பெருமன்றத் தூத்துக்குடி மாவட்டச் செயலாளரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான திரு இளசை. மணியன் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்.

பேராசிரியர் தொ. பரமசிவன்
முனைவர் ஆர். காமராசு
பேராசிரியர் வ. குருநாதன்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
திரு எம்.பி. டெரன்ஸ் சாமுவேல்
முனைவர் என். சந்திரசேகரன்
பேராசிரியர் இ. முத்தையா
முனைவர் பா. ஆனந்தகுமார்
முனைவர் வின்சென்ட் பிரிட்டோ
பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்
பேராசிரியர் ஆ. தனஞ்செயன்
முனைவர் எஸ். ருக்மணி
முனைவர் கே. சுப்புலட்சுமி
முனைவர் இரா. பாலசந்திரன்
திரு பா. கைலாசமூர்த்தி

ஆகியோர் கருத்தரங்கில் கலந்துகொண்டு ஆய்வுரை வழங்கினார்கள்.

8.2.2009 மாலை நடந்த நிறைவு விழா தூத்துக்குடி வ.உ.சி. கல்விக் குழுச் செயலர் ஏ.பி.சி.பி. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்திச் சங்க இலக்கியச் செய்திகளை விரிந்த அளவில் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று தலைமையுரையில் கூறினார். விடுதலைப் போராட்ட வீரர் இரா. நல்லகண்ணு நிறைவுரையில் சங்க இலக்கியப் பதிப்பில் உ.வே.சா.வின் பங்களிப்பை நினைவுகூர்ந்து அந்த இலக்கியங்களின் யதார்த்த சமூகப் பண்புகளை ஆய்வு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டக் குழு உறுப்பினர் கவிஞர் இளசை அருணா நன்றிகூறினார்.

கருத்தரங்கில் திருநெல்வேலிச் சித்திரச் சபை இயக்குநர் பொன். வள்ளிநாயகம் தீட்டிய சங்க இலக்கியக் காட்சிகள் கொண்ட ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டத் தலைவர் திரு கைலாசமூர்த்தி குழுவினரின் ஒயிலாட்டமும் அ.சீ.ரா. கலாநிகேதன் முனைவர் ச. சிவகுமார் குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றன. சங்க இலக்கியக் கட்டுரைப் போட்டியும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கலும் நடைபெற்றன.





கருத்தரங்கு 4

# சங்க இலக்கியங்களில் படிமங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர் பூ.சா.கோ. கலை - அறிவியல் கல்லூரித்

CICTArchives



தமிழ்த் துறையும் இணைந்து சங்க இலக்கியங்களில் படிமங்கள் என்ற தலைப்பில் 23.2.2009 முதல் 25.2.2009 முடிய 3 நாட்கள் தேசியக் கருத்தரங்கம் ஒன்றை நடத்தின.

எட்டு அமர்வுகளாக நடந்த இக்கருத்தரங்கில் சங்க இலக்கியங்களில் அமைந்துள்ள படிமம் தொடர்பான 17 கட்டுரைகள் படிக்கப்பட்டன.

23.2.2009 காலை 9 மணியளவில் தொடக்க விழா நடைபெற்றது. பூ.சா.கோ. கலை - அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வெ. இரா. சத்தியமூர்த்தி வரவேற்று அறிமுகவுரையாற்றினார். கல்லூரிச் செயலாளர் ஜி. அரங்கசாமி தலைமையுரையும் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ம. ரா. போ. குருசாமி தொடக்கவுரையும் ஆற்றினர். ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. உமாராஜ் நன்றி கூறினார்.

சென்னைப் பல்கலைக்கழக மேனாள் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் அ. அ. மணவாளன் முதன்மை உரை ஆற்றினார்.

பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி
பேராசிரியர் இரா.மோகன்
பேராசிரியர் கே. இராஜா
பேராசிரியர் ஐ. சூசை
பேராசிரியர் நிர்மலா மோகன்
முனைவர் சி. விசுவநாதன்
முனைவர் ஐ. செல்வராஜ்
திரு கே. ஸ்டாலின்
முனைவர் ஆர். ஜெயராமன்
முனைவர் எஸ். பத்மாவதி
முனைவர் எஸ். இரவி
முனைவர் வி. ஆர். சத்தியமூர்த்தி
முனைவர் விவேகானந்த ராஜகோபால்
முனைவர் இரா. பாலச்சந்திரன்
முனைவர் என். ஞானப்பழம்
முனைவர் சசிகலா
முனைவர் கோ. பழனி
முனைவர் பி. சம்பத்குமார்

ஆகிய அறிஞர்கள் கட்டுரைகள் வழங்கினார்கள்.

கருத்தரங்க முடிவில் பேராசிரியர்கள், பங்கேற்பாளர்கள், ஆய்வு மாணவர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல் அமர்வு நடந்தது. முனைவர் ம. ரா. போ. குருசாமி, முனைவர் இரா. பாலச்சந்திரன், முனைவர் கே.எஸ். கமலேசுவரன், முனைவர் வெ. இரா. சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்துரையாடலில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

25.2.2009 பிற்பகல் 4 மணியளவில் நடந்த நிறைவு விழாவில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. உமாராஜ் வரவேற்றுப் பேசினார். பங்கேற்பாளர் சார்பில் முனைவர் செ. விசுவநாதன், ஆய்வு மாணவி பொ. வெங்கடேசுவரி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கல்லூரி முதல்வர் முனைவர் ஷீலா இராமச்சந்திரன் தலைமையேற்றார். கருத்தரங்க நிறைவுரையாற்றிய தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் வெ. இரா. சத்திய மூர்த்தி படிமத்தின் பங்களிப்பு சங்க இலக்கியங்களில் பொதிந்து கிடக்கின்றதென்று எடுத்துரைத்தார்.





திருமதி பொ. கமலா நன்றி கூறக் கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது.

கருத்தரங்கு 5

# இலக்கணக் கோட்பாட்டிற்கு உரையாசிரியர்களின் பங்களிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் இளையாம்பாளையம் விவேகானந்தா கலை, அறிவியல் மகளிர் கல்லூரியும் இணைந்து நடத்திய இலக்கணக் கோட்பாட்டிற்கு உரையாசிரியர்களின் பங்களிப்பு என்னும் தலைப்பிலான தேசியக் கருத்தரங்கம் 2009 பிப்பிரவரி 24 முதல் 26 முடிய நடைபெற்றது.

24.2.2009 காலை 10 மணிக்குத் தொடக்க விழாவை விவேகானந்தா மகளிர் கல்வி நிறுவனங்களின் அறக்கட்டளை உறுப்பினரான திருமதி கிருஷ்ணவேணி கருணாநிதி குத்துவிளக்கேற்றித் தொடங்கிவைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் மு. தேவதா வரவேற்புரை

CICTArchives



ஆற்றினார். விவேகானந்தா மகளிர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் டாக்டர் மு. கருணாநிதி தலைமையேற்று உரையாற்றினார். பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பெ. மாதையன் சிறப்புரையாற்றினார். கல்லூரி நிருவாக அலுவலர் திரு எம். சொக்கலிங்கம், திரு எஸ். மேகநாதன், கல்லூரி இயக்குநர் முனைவர் விவேகானந்தன், துணை முதல்வர் முனைவர் கோவில்தாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. கோ. வேங்கட ராமன் நன்றிகூறினார்.

கருத்தரங்கம் நான்கு அமர்வுகளாக நடந்தது.

பேராசிரியர் பெ.மாதையன்
முனைவர் செ. சாரதாம்பாள்
முனைவர் என். சந்திரன்
முனைவர் ஜே. சந்திரசேகரன்
முனைவர் ப. பாமா
முனைவர் டி. சேதுபாண்டியன்
முனைவர் அ. சீனிவாசன்
பேராசிரியர் அ. இராமசாமி
பேராசிரியர் கரு. அழ. குணசேகரன்
முனைவர் டி. ஞானசேகரன்
முனைவர் கா. கோ. வேங்கடராமன்
முனைவர் எஸ்.சித்ரா
முனைவர் எஸ். கோதண்டராமன்
முனைவர் பா. மதுகேசுவரன்
முனைவர் மா. சின்னு
முனைவர் பி. முத்துராசு

ஆகிய அறிஞர்கள் இலக்கணக் கோட்பாடுகளை விளக்கிக் கட்டுரை வழங்கினர்.

26.2.2009 மாலை 3 மணியளவில் நடந்த நிறைவு விழாவில் முனைவர் கா. கோ. வேங்கடராமன் வரவேற்புரை வழங்கினார். கல்லூரித் தாளாளர் டாக்டர் மு. கருணாநிதி தலைமையுரையாற்றினார். இவ்விழாவின் சிறப்பு விருந்தினரான சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் இலக்கிய வாழ்விற்கு இலக்கணம் எவ்வளவு இன்றியமையாதது என்பது குறித்து உரையாற்றினார்.

மற்றொரு சிறப்பு விருந்தினரான செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இலக்கணத்தின் இன்றியமையாமை குறித்து உரையாற்றினார்.

இறுதியாகக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவரும் ஒருங்கிணைப்பாளருமான முனைவர் ப. பாமா நன்றி கூறினார்.

**கருத்தரங்கு 6**

# தொல்காப்பியம், சங்க இலக்கியம்: திணை, துறை மரபுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கிருட்டிணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரியும் இணைந்து 2009 மார்ச்சு 2, 3, 4 ஆகிய நாட்களில், தொல்காப்பியம், சங்க இலக்கியம்: திணை, துறை மரபுகள் என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கை நடத்தின.

2.3.2009 பிற்பகல் 2 மணிக்குக் கருத்தரங்கத் தொடக்க விழா கல்லூரி முதல்வர் பேராசிரியர் இரா. குப்பாயம்மாள் தலைமையில் நடைபெற்றது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் சௌ. கீதா அனைவரையும் வரவேற்றார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு குத்துவிளக்கு ஏற்றிக் கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார்.

அறிவியல் தமிழ் மன்றத்தின் துணைத்தலைவர் முனைவர் மு. பி. பாலசுப்பிரமணியன் சிறப்புரை யாற்றினார். பேராசிரியர் பெ. மாதையன், முனைவர் இரா. அரங்கராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. கோ. வேங்கடராமன் நன்றிகூறினார்.

பேராசிரியர் கா. கோ. வேங்கடராமன்
பேராசிரியர் அன்னி தாமசு
முனைவர் அழகர்நாதன்
முனைவர் ச. சிவகாமி
முனைவர் க. சின்னப்பா





CICTArchives



முனைவர் செயமூர்த்தி
முனைவர் சிவக்குமார்
முனைவர் சந்திரா
முனைவர் இரவிச்சந்திரன்
பேராசிரியர் பெ.மாதையன்
முனைவர் எஸ். திருஞானசம்பந்தம்
முனைவர் சத்தியமூர்த்தி
முனைவர் சௌ. கீதா
முனைவர் நா. பழனிவேலு
முனைவர் பார்த்திபராஜா
முனைவர் பா. சிவராஜி

ஆகிய அறிஞர்கள் பங்குபெற்றுக் கட்டுரை வாசித்தார்கள்.

4.3.2009 பிற்பகல் 3 மணியளவில் முனைவர் சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிறைவு விழாவில் முனைவர் கா. கோ. வேங்கடராமன் வரவேற்புரை வழங்கினார். பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் பெ. மாதையன் சிறப்புரையாற்றினார். முனைவர் நா. பழனிவேலு, முனைவர் இரவிச்சந்திரன், கருமலை பாரதி முருகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முனைவர் சௌ. கீதா நன்றிகூறினார்.

**கருத்தரங்கு**

# சங்கத்தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் கல்வியியல் சிந்தனைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோவை கதிர் கல்வியியல் கல்லூரியும் இணைந்து சங்கத்தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் கல்வியியல் சிந்தனைகள் என்ற பொருண்மையில் கோவையில் 2-3-2009 முதல் 4-3-2009 வரை தேசியக் கருத்தரங்கம் ஒன்றை நடத்தின.

கருத்தரங்கத் தொடக்க விழா நாளான 2-3-2009 அன்று முனைவர் இரா. ஜானகி வரவேற்புரை வழங்கினார். கௌமார மட ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். பூ.சா.கோ. கலை - அறிவியல் கல்லூரிச் செயலர் முனைவர் பா. சம்பத்குமார் கருத்தரங்கப் பொருண்மை குறித்து விளக்க உரையாற்றினார். கதிர் கல்வியியல் கல்லூரித் தாளாளர் ஈ.செ. கதிர் தலைமையேற்றார். கல்லூரியின் துணை முதல்வர் செ. கணேசன் நன்றி கூறினார்.

முனைவர் கரு. அழ. குணசேகரன்
முனைவர் ஜி. பழனிவேலு
முனைவர் எஸ். தில்லைவனம்
முனைவர் பி. பத்மநாபன்
முனைவர் என். இராஜேந்திரன்
திரு தேவபேரின்பன்







திரு எஸ். கணேசன்
திரு ஏ. அர்ச்சுனன்
திரு ஏ. தண்டபாணி
முனைவர் எம்.சி. தியாகராசன்
முனைவர் தி. மகாலட்சுமி
முனைவர் இரா. காமராசு
முனைவர் எம். அமிர்தகடேசுவரர்
முனைவர் வி. இரம்பாதேவி
முனைவர் க. பசும்பொன்
திரு கே. பூபதி
திரு கே. இரவிச்சந்திரன்
முனைவர் கே. இளமதி ஜானகிராமன்
முனைவர் ஜெபக்கனி செல்வராஜ்
முனைவர் ஆர். முத்தையன்
திருமதி ம. தாமரைச்செல்வி
முனைவர் என். நடராசப்பிள்ளை
முனைவர் அ. சிவபெருமான்
திரு கே. எல். இறைக்கோ
திரு பாலகிருட்டிணன்
திரு ஆர். கலைச்செல்வி
முனைவர் கே. பழனிவேலு

ஆகிய அறிஞர்கள் கட்டுரைகள் அளித்தனர்.

நிறைவு விழாவான 4-3-2009 அன்று செ.கணேசன் வரவேற்புரை நிகழ்த்தினார். நிறுவனத் தாளாளர் ஈ.செ.கதிர் தலைமையேற்று உரையாற்றினார். சிறப்பு விருந்தினர் முன்னாள் நீதிபதி தாமரைச்செல்வி சிறப்புரையாற்றினார். இராமகிருஷ்ணா கல்வியியல் கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் என். ஜி. மணி வாழ்த்துரை வழங்கினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. ஜானகி கருத்தரங்கத் தொகுப்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. உமாராஜ் நன்றி கூறினார். பேராசிரியர் தண்டபாணி, விரிவுரையாளர் இராஜேந்திரன் ஆகியோர் கருத்தரங்கம் குறித்த மதிப்பீட்டுரை வழங்கினர்.

CICTArchives





# சிலப்பதிகாரம்: பன்முக ஆய்வு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பொள்ளாச்சி நா.க.ம. கல்லூரியும் இணைந்து 2-3-2009 முதல் 4-3-2009 முடிய 3 நாட்கள் சிலப்பதிகாரம் - பன்முக ஆய்வு என்ற தலைப்பில் கருத்தரங்கை நடத்தின.

தொடக்க விழா 2-3-09 அன்று காலை 9.30 மணிக்கு நிகழ்ந்தது. தமிழ் இலக்கியத் துறை மாணவர்கள் வரைந்த சிலப்பதிகாரம் பற்றிய வண்ண ஓவியங்கள், வரைகோட்டுப் படங்கள் அடங்கிய கண்காட்சியைக் கல்லூரித் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் திறந்துவைத்தார். இதைத் தொடர்ந்து கல்லூரி முதல்வர் முனைவர் என். ராஜகுமார் வரவேற்புரையாற்ற செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணி கருத்தரங்கத் தொடக்கவுரையாற்றினார். ''பன்முக நோக்கில் சிலப்பதிகாரம்'' என்ற ஆய்வுக் கோவையைக் கல்லூரித் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் வெளியிட, பேராசிரியர் கு. சிவமணி பெற்றுக் கொண்டார்.

இராமலிங்கர் பணிமன்றத்தைச் சேர்ந்த திரு மா. வைத்தியலிங்கம் கானல் வரி இசைப் பேருரை நிகழ்த்தினார். முதுகலை மாணவர் திரு இ. அகமது முஸ்தபாவின் ''மங்கலதேவி கோட்டம்'' என்ற குறும்படம் திரையிடப்பெற்றது. இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் பெ. சுப்பிரமணியன் நன்றிகூறினார்.

இக்கருத்தரங்கில் 53 மாணவர்கள் பங்குகொண்டு பயனடைந்தனர். 8 அமர்வுகளில் கீழ்க்காணும் அறிஞர்கள் கருத்துரை வழங்கினர்.

பேராசிரியர் கா. செல்லப்பன்
பேராசிரியர் அ. பாண்டுரங்கன்
பேராசிரியர் ஐ.கே. சுப்பிரமணியன்
முனைவர் ஆர். பிரேமா
பேராசிரியர் அரங்க. நலங்கிள்ளி
திரு எம். வைத்தியலிங்கம்
பேராசிரியர் கே. நஞ்சையன்
பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம்
முனைவர் இரத்தின கிருட்டிணமூர்த்தி
முனைவர் கே. மாணிக்கம்
முனைவர் சி.பி. கோபால்
முனைவர் அம்பை மணிவண்ணன்
பேராசிரியர் பி. நசீம்தீன்
திரு சி. இரகுராம்
பேராசிரியர் அ. பிச்சை
முனைவர் ஆர். ஜெயராமன்
முனைவர் ஆர். காசிராஜன்
முனைவர் தவசி. ஞானசேகரன்
முனைவர் சீதாலட்சுமி சீனிவாசன்
முனைவர் ஒ. முத்தையா
முனைவர் பி. சுப்பிரமணியன்
முனைவர் தி. முருகரத்தனம்
முனைவர் தி.சு. நடராசன்

இக்கருத்தரங்கத்திற்குச் செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணியும் தமிழ்த் துறைத் தலைவர் பெ. சுப்பிரமணியனும் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

4-3-2009 மாலை நடந்த நிறைவுவிழாவில் கல்லூரிப் பேராசிரியர் அமுதன் வரவேற்புரையாற்றினார். முதல்வர் முனைவர் என். ராஜகுமார் தலைமை தாங்கினார். புதுவைப் பல்கலைக்கழக, சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புல முதன்மையர் முனைவர் அ. அறிவுநம்பி நிறைவு விழாச் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் கு. சிவமணி கருத்தரங்க மதிப்பீட்டுரையாற்றினார். தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் பெ. சுப்பிரமணியன் நன்றிகூறினார்.






### திருத்தமாகப் பதிப்பித்தல்...

''பேரறிவும் பேராற்றலுமுடைய தக்க தமிழறிஞர் பலர் ஒன்றுகூடிப் பல பிரதிகளை வைத்துக் கொண்டு பன்னெடு நாளும் ஆராய்ந்து பதிப்பிப்பதாயினும் மூலமளவிலும் முற்றுந் திருத்தமாகப் பதிப்பித்தல் முடியாததாகுமென்பது, சங்கத்துத் தொகை நூல்களைப் பொறுத்தவரையிலும் எட்டுணையும் மறுக்க முடியாத ஒருண்மையாகும்''

திருமாளிகைச் சௌரிப்பெருமாளரங்கன்
ப.ஆ., குறுந்தொகை, ப.11, 1915.

CICTArchives



கருத்தரங்கு 9

# தமிழ்நாட்டுத் தொல்லியல் ஆய்வுகள்: ஆதிச்சநல்லூர்ச் சிறப்பும் எதிர்காலத் திட்டங்களும்



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை பெரியார் ஈ. வெ. இராமசாமி - நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளையும் இணைந்து தமிழ்நாட்டுத் தொல்லியல் ஆய்வுகள்: ஆதிச்சநல்லூர்ச் சிறப்பும் எதிர்காலத் திட்டங்களும் என்ற தலைப்பில் 2009 மார்ச்சு 4 முதல் 6 முடிய மூன்று நாட்கள் தேசியக் கருத்தரங்கம் ஒன்றைச் சென்னையில் நடத்தின.

திருநெல்வேலி அருகில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூரில் சிந்துவெளி நாகரிகத்தோடு ஒப்பிடத்தக்க தொன்மையான தமிழர் நாகரிகச் சான்றுகள் கிடைத்துள்ளன. அவை பற்றித் தமிழகம் அறியாத பல செய்திகளை மக்களிடம் கொண்டுசெல்லும் நோக்கில் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

தொடக்க விழாவுக்குச் சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் பொன். கோதண்டராமன் தலைமை ஏற்று உரை நிகழ்த்தினார்.

அறக்கட்டளையின் தலைவரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான திரு வே. ஆனைமுத்து அனைவரையும் வரவேற்றார். செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி நிறுவனத் திட்டங்களை விளக்கிப் பேசினார். எண்பேராய உறுப்பினர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் தொடக்கவுரை நிகழ்த்தினார். எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், அழகன்குளம், கொற்கை, அரிக்கமேடு, கொடுமணல், ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் கிடைத்த தொல்பொருள் படக் கண்காட்சியைத் திறந்துவைத்து உரையாற்றினார். தமிழக அரசின் தொல்லியல் துறை இயக்குநர் ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப. வாழ்த்துரை வழங்கினார். அறக்கட்டளை உறுப்பினர் க. முகிலன் நன்றி கூறினார்.

தமிழ்நாடு, புதுவை, கேரளா, கருநாடகம், ஒரிசா, பஞ்சாப் முதலிய மாநிலங்களிலிருந்து வந்த தொல்லியல், வரலாறு, கல்வெட்டு, இலக்கியம், மானுடவியல் துறைகளைச் சார்ந்த

திரு தியாக. சத்தியமூர்த்தி
திரு அர. பூங்குன்றன்
திரு பத்மநாதன் இராகவன்
திரு எஸ். பத்ரிநாராயண்
முனைவர் சி. மகேசுவரன்
திரு எஸ். பாலசுப்பிரமணி
திரு பி. இராமநாதன்
முனைவர் மார்க்சிய காந்தி
திரு மா. சந்திரமூர்த்தி
முனைவர் அ. பத்மாவதி
திரு க. குழந்தைவேலன்
திரு கோ. கிருட்டிணமூர்த்தி
முனைவர் க. நெடுஞ்செழியன்
முனைவர் இரா. மதிவாணன்
முனைவர் பா. ஜெயக்குமார்
முனைவர் கே. ஸ்ரீதரன்

முதலிய 24 அறிஞர்கள் கருத்தரங்கில் பங்குபெற்று 6 அமர்வுகளில் கட்டுரை வழங்கினர். ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வை 2004இல் நிகழ்த்திய இந்தியத் தொல்லியல் துறைக் கண்காணிப்பாளர் திரு சத்தியமூர்த்தி அகழ்வாய்வுச் சான்றுகளை விளக்கிக் காட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

தொல்லியல் ஆர்வமுடைய 200க்கும் மேற் பட்டவர்கள் தமிழ்நாடு முழுவதுமிருந்து வந்து கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

6.3.2009 மாலை 5 மணிக்கு நிறைவு விழா அறக்கட்டளைத் தலைவர் திரு வே. ஆனைமுத்து தலைமையில் நடந்தது. அறக்கட்டளை உறுப்பினர் திரு துரை. கலையரசு அனைவரையும் வரவேற்றார். கவிஞர் ஈரோடு தமிழன்பன் சிறப்புரையாற்றினார். நடுவணரசின் சட்டம் மற்றும் நீதித் துறை இணை அமைச்சர் மாண்புமிகு க. வேங்கடபதி நிறைவு உரை நிகழ்த்தினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரெ.குமரன் நன்றிகூறினார்.

ஆதிச்சநல்லூரில் கண்டெடுத்த - அகழ்ந்தெடுத்த பொருள்களைக்கொண்டு ஆதிச்சநல்லூர்த் தொல்லியல் ஆய்வு அருங்காட்சியக வளாகம் ஒன்றை அகழ்வாய்வுக் களத்திலேயே நடுவணரசு அமைத்திட வேண்டும் என்றும் ஆதிச்சநல்லூரை உலகப் பாரம்பரியச் சின்னமாக உலக நாடுகள் அவையின் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) அறிவிக்க இந்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.



CICTArchives



# சங்க இலக்கிய ஆங்கில மொழிபெயர்ப்புக்கள்







செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆங்கில-பிற வெளிநாட்டு மொழிகள் புலமும் இணைந்து சங்க இலக்கிய ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் என்ற தலைப்பில் திருச்சிராப்பள்ளியில் 2009 மார்ச்சு 5 முதல் 7 முடிய மூன்று நாட்கள் தேசியக் கருத்தரங்கை நடத்தின.

5.3.2009 அன்று நடந்த தொடக்க விழாவில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் நோயல் ஜோசப் இருதயராஜ் கருத்தரங்கத்திற்கு வந்த அனைவரையும் வரவேற்றார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மு. பொன்னவைக்கோ ஆய்வுக் கட்டுரைகளின் சுருக்கத் தொகுப்பை வெளியிட்டுத் தலைமையுரையாற்றினார். ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்த கி.மு. 1500 ஆண்டுக் காலப் பழமையுடையது சமஸ்கிருதம். சங்க இலக்கியத்தில் வேதக் கருத்துக்கள் கி.மு.100இல் இடம்பெற்றன. தமிழ் உலக மொழிகளுக்குத் தாய் மட்டுமன்று; உலகப் பண்பாட்டுக்கும் தாயாக விளங்குகிறது என்று துணைவேந்தர் குறிப்பிட்டார்.

முனைவர் அ. அ. மணவாளன் தமது தொடக்கவுரையில் சமஸ்கிருதம் பற்றியும் சமஸ்கிருதப் படைப்புகள் பற்றியும் மிகுதியாகப் பேசப்படுகிறது. அவை தென்னிந்தியர்களால் படைக்கப்பட்டவை. சமஸ்கிருதம் எப்போதும் பேச்சு மொழியாய் இருந்ததில்லை . அது பண்பாட்டு மொழி என்று உரைத்தார்.

அருள்தந்தை அமுதன் அடிகள் வாழ்த்துரையில் சேவியர் எஸ். தனிநாயகம் அடிகள், ஜி.யு.போப், ஜீகன் பால்கு போன்றோரின் மொழிபெயர்ப்புப் பணிகளைக் குறிப்பிட்டார். சங்கப் பாடல்கள் மதச்சார்பற்றவை. மொழிபெயர்ப்பு மட்டுமே உலகத்திற்கு வாசலைத் திறந்து வைக்கும் என்று குறிப்பிட்டார். முனைவர் மருததுரை நன்றிகூறினார்.

பேராசிரியர் எஸ். தியாகராாச சர்மா
முனைவர் முருகன்
பேராசிரியர் டி தாமஸ்
பேராசிரியர் பானுமதி
பேராசிரியர் ஆர். வி. இராம்
பேராசிரியர் பி. ஆறுமுகம்
பேராசிரியர் இரா. பாலச்சந்திரன்
முனைவர் தேவி திருவளவன்
பேராசிரியர் பி. இராஜா
பேராசிரியர் கே. பூரணச்சந்திரன்
பேராசிரியர் சங்கிலிகாளை
பேராசிரியர் டி ஜெயராமன்
பேராசிரியர் ஏ. நோபல் ஜோசப் இருதயராஜ்
பேராசிரியர் அ. தட்சிணாமூர்த்தி
பேராசிரியர் பி. இரமணி
பேராசிரியர் திருநாராயணன்
பேராசிரியர் அ. ஆலிஸ்
பேராசிரியர் அந்தோணி குருஸ்
பேராசிரியர் துரை. சீனிச்சாமி
பேராசிரியர் கு. சிவமணி
பேராசிரியர் எஸ். ஏ. சங்கரநாராயணன்
முனைவர் எஸ். ஜோசப் அருள் ஜெயராஜ்
பேராசிரியர் மோரிஸ் ஜாப்
முனைவர் இந்திரா மனுவேல்

ஆகிய இவ்வறிஞர்களால் கருத்தரங்கின் ஏழு அமர்வுகளில் கட்டுரைகள் படிக்கப்பட்டுக் கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டது. பெரும்பாலான கட்டுரைகள் ஆங்கிலத்தில் இருந்தன. 150 மாணவர்கள் பங்குபெற்றுப் பயனடைந்தார்கள்.



7.3.2009 மாலை 5 மணியளவில் நடந்த நிறைவு விழாவிற்கு எம்ஜஈடி கலை- அறிவியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் பி.மன்சூர் தலைமையேற்றார். முனைவர் நோயல் ஜோசப் இருதயராஜ் வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் விமலநாதன், பேராசிரியர் மோரிஸ் ஜாய், பேராசிரியர் மருததுரை ஆகியோர் கருத்தரங்க அமர்வுகளை மதிப்பிட்டு உரையாற்றினார்கள். பேராசிரியர் என்.சேஷாத்திரி தமது சிறப்புரையில் சங்க இலக்கிய மொழிபெயர்ப்புக்குப் பன்முகப் பார்வை இன்றியமையாதது என்று கூறினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் அன்னி தாமசு கருத்தரங்கத் தொகுப்புரை வழங்கினார்.

**கருத்தரங்கு 11**

# இந்தியப் பண்பாட்டு உருவாக்கத்தில் தமிழின் பங்களிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சித்தூர் அரசு கலைக் கல்லூரியும் இணைந்து 2009 மார்ச்சு 5, 6, 7 ஆகிய நாட்களில், 'இந்தியப் பண்பாட்டு உருவாக்கத்தில் தமிழின் பங்களிப்பு' என்னும் பொருளில் தேசியக் கருத்தரங்கம் ஒன்றை நடத்தின.

5.3.2009 காலை 10 மணியளவில் நடந்த கருத்தரங்கத் தொடக்க விழாவில் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் நா. ஞானப்பழம் வரவேற்புரை வழங்கினார். செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கு. சிவமணி அறிமுகவுரையாற்றினார். சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் கரு. அழ. குணசேகரன் விழாவிற்குத் தலைமையேற்று உரைநிகழ்த்தினார். கல்லூரி முதல்வர் பேராசிரியர் கே. முருகன் தமிழின் பெருமைகளை எடுத்துக் கூறி வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் க.அ.இராசாராம் விழாவில் பங்குபெற்று உரையாற்றினார். பேராசிரியை க.முத்துலட்சுமி நன்றிகூறினார். கருத்தரங்கம் ஏழு அமர்வுகளாக நடந்தது.



பேராசிரியர் இரத்தினசபாபதி
முனைவர் மகாலட்சுமி
முனைவர் காஞ்சனா
முனைவர் மு. இளமுருகன்
முனைவர் மீனாட்சி
முனைவர் வே. கட்டளை கைலாசம்
முனைவர் டி செல்லையா
முனைவர் மனுவேல்
முனைவர் கே. முருகேசன்
முனைவர் பூங்கொடி
முனைவர் சமுத்திரபாண்டியன்
பேராசிரியர் சசிகுமார்
முனைவர் பி.முருகன்
முனைவர் ஜோதிமணி
பேராசிரியர் அ. அறிவுநம்பி
முனைவர் நா. ஞானப்பழம்
முனைவர் சதீஷ்
முனைவர் கண்மணி
முனைவர் க. அ. இராசாராம்

ஆகிய 19 அறிஞர்கள் 7 அமர்வுகளில் கட்டுரை வழங்கிக் கருத்து விளக்கம் அளித்தார்கள்.

7.3.2009 பிற்பகல் 2 மணியளவில் நடந்த நிறைவு விழா நிகழ்ச்சியில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் நா. ஞானப்பழம் வரவேற்புரை வழங்கினார். தமிழக முன்னாள் அமைச்சர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் தலைமை ஏற்று, இந்தியப் பண்பாட்டுக் கூறுகள் குறித்தும் அதில் தமிழ் இலக்கியத்தின் தாக்கம் குறித்தும் விரித்துரைத்தார். கல்லூரி முதல்வர் திரு கே. முருகன் மூன்று நாட்கள் நடந்த கருத்தரங்கச் சிறப்புக்களை எடுத்துக்கூறினார். பேராசிரியர் ப. முருகன் நன்றிகூற விழா இனிதே நிறைவுற்றது.

**கருத்தரங்கு 12**

# தொல்காப்பியக் கவிதையியலும் சங்க இலக்கியங்களும்


செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறையும் இணைந்து தொல்காப்பியக் கவிதையியலும் சங்க இலக்கியங்களும் எனும் தலைப்பில் 2009 மார்ச்சு 9 முதல் 11 முடிய மூன்று நாட்கள் தேசியக் கருத்தரங்கு ஒன்றை நடத்தின.

தொடக்க விழா 9-3-2009 அன்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. தமிழியல் துறைத் தலைவர் முனைவர் அ. இராமசாமி வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் கு. சிவமணி செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் செயற்பாடுகளை விளக்கிக் கூறியதுடன் கருத்தரங்கத்தின் நோக்கத்தையும்

CICTArchives







எடுத்துரைத்தார். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இரா. தி. சபாபதி மோகன் தலைமை தாங்கிக் கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார். பேராசிரியர் சு. அழகேசன் நன்றிகூறினார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கூறப்படும் கவிதைக் கோட்பாட்டை உலக அளவில் இருக்கும் கவிதைக் கோட்பாடுகளோடு நிரல்படுத்தி அறிமுகப்படுத்தும் நோக்கில் இக்கருத்தரங்கு நடத்தப்பெற்றது. தமிழ்க் கவிதையியலைத் தமிழோடு நெருக்கமான தொடர்புடைய கன்னடம், தெலுங்கு, மலையாள இலக்கியங்களோடும் மேற்கத்திய இலக்கியப் போக்குகளோடும் இணைத்து அறிஞர்கள் உரையாற்றினர். பேராசிரியர்களோடு எழுத்தாளர்களும் சிற்றிதழாளர்களும் கலந்துகொண்டனர்.

பல்கலைக்கழகத் தமிழ்த் துறையைச் சார்ந்த 75 பேராளர்கள் பங்குபெற்றனர்.

முனைவர் பி. நடராசன்
முனைவர் எஸ். பிரபாகர்
பேராசிரியர் தி. சு. நடராசன்
முனைவர் இந்திரா மனுவேல்
பேராசிரியர் சி. சாரதாம்பாள்
பேராசிரியர் பெ. மாதையன்
பேராசிரியர் அரங்க. பாரி
முனைவர் ய. மணிகண்டன்
முனைவர் சு. அழகேசன்
முனைவர் ஞா. ஸ்டீபன்
முனைவர் இரேணுகாதேவி
முனைவர் ஜெயலலிதா
திரு கல்பத்ரா நாராயணன்
எழுத்தாளர் ஜெயமோகன்
திரு யுவன் சந்திரசேகரன்
முனைவர் த. தருமராஜ்
முனைவர் ஜி. பழனிவேல்
முனைவர் ஆர். ஜெயராமன்
பேராசிரியர் தமிழவன் (கார்லோஸ்)
பேராசிரியர் துரை. சீனிச்சாமி
முனைவர் எஸ். நாகநாதன்
முனைவர் எஸ். அரங்கநாதன்
முனைவர் பி. அருள்மனோகரி
முனைவர் ஸ்டாலின் ராஜாங்கம்

ஆகிய அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரை வழங்கினார்கள்.

முனைவர் எஸ்.பிரபாகர், முனைவர் பே. நடராசன், முனைவர் எஸ். அரங்கநாதன், முனைவர் எஸ். நாகநாதன், முனைவர் ப. அருள் மனோகரி, முனைவர் ஸ்டாலின் ராஜாங்கம் ஆகியோர் கருத்தரங்க நோக்கர்களாகச் செயற்பட்டார்கள்.

நிறைவு விழா 11-03-2009 அன்று பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது. வரவேற்புரையை முனைவர் பே. நடராசன் வழங்கினார். சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்ட இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஆய்வு அலுவலர் முனைவர் இல. இராமமூர்த்தி செம்மொழி வாய்ப்பைப் பயன்படுத்திச் செய்ய வேண்டிய ஆய்வுக் களன்களைச் சுட்டிக்காட்டினார். ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கு. சிவமணி கருத்தரங்க மதிப்பீட்டுரை நிகழ்த்தினார். கருத்தரங்கத்தின் மற்றொரு ஒருங்கிணைப்பாளரான முனைவர் அ. இராமசாமி நன்றிகூறினார்.

**கருத்தரங்கு** *13*

# சங்க மொழியும் இலக்கியமும் பற்றிய ஆய்வுக்கு மலையாளத்தின் பங்களிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத் திராவிட - கணினி மொழியியல் துறையும் இணைந்து 'சங்க மொழியும் இலக்கியமும் பற்றிய ஆய்வுக்கு மலையாளத்தின் பங்களிப்பு' என்ற பொருளில் 2009 மார்ச்சு 12 முதல் 14 முடிய மூன்று நாட்கள் தேசியக் கருத்தரங்கை நடத்தின. சங்க மரபை அறிய மலையாளம் துணைபுரியும் என்ற நோக்கில் இந்தக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது.

*14.3.2009* காலை 11 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் எம். ஸ்ரீநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைமையேற்று நடத்திய







பேராசிரியர் ஜி.பாலசுப்பிரமணியன் சங்கத்திற்கும் மலையாளத்திற்கும் இருந்த தொடர்பை எடுத்துக் கூறினார். பெரும்பாலான சங்க இலக்கிய ஆய்வாளர்கள் பண்டைய சேர நாட்டை மறந்து ஆய்வு செய்தால் எவ்வாறு உண்மை காணமுடியும் என்று அவர் வினவினார்.

தமிழ்நாடு உயர்கல்வி மன்றத் துணைத் தலைவர் பேராசிரியர் அ. இராமசாமி கருத்தரங்கைக் குத்துவிளக்கு ஏற்றித் தொடங்கிவைத்தார். இந்திய வரலாற்று ஆராய்ச்சி மன்றத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எம். ஜி. எஸ். நாராயணன், கேரள வரலாற்றில் சங்க காலம் அடுக்கடுக்கான பல சான்றுகளை அள்ளி வழங்கியுள்ளதாகக் கூறினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் அன்னி தாமசு நன்றி கூறினார்.

பேராசிரியர் கி. நாச்சிமுத்து
முனைவர் எம். ஈ. மாணிக்கவாசகம்
முனைவர் வி. செல்வக்குமார்
முனைவர் விளாக்குடி ராஜேந்திரன்
முனைவர் பி. ஜெயகிருஷ்ணன்
பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியன்
பேராசிரியர் டி. பி. வேணுகோபால பணிக்கர்
பேராசிரியர் ஏ. காமாட்சி
பேராசிரியர் நடுவட்டம் கோபாலகிருஷ்ணன்
பேராசிரியர் பி. டாக்டர் நசீம்தீன்
பேராசிரியர் என். கோபிநாதன் நாயர்
முனைவர் எஸ். பிரேமா
முனைவர் டி. மனோ

ஆகிய ஆய்வு வல்லுநர்கள் 6 அமர்வுகளில் கட்டுரை வழங்கினார்கள். தமிழ் நாட்டையும் கேரளத்தையும் சேர்ந்த 10 பல்கலைக்கழக மாணவர்களுடன் திராவிடப் பல்கலைக்கழக 25 ஆய்வு மாணவர்களும் சேர்ந்து மொத்தம் 60 மாணவர்கள் பங்குபெற்றுப் பயன் பெற்றனர்.

ஆறு அமர்வுகளுக்குப் பின் கலந்துரையாடல் நடைபெற்றது. பேராசிரியர் எம்.ஜி.எஸ். நாராயணன் தலைமை தாங்கினார். சங்க இலக்கியங்களைச் சொல்லடைவு செய்வதுடன் அண்டை மாநில மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும் என்றும் தமிழ் மலையாள உறவாலான பண்பாட்டுக் கூறுகளை முதுநிலை மாணவர்களுக்குப் பாடமாக்கலாம் என்றும் பரிந்துரைத்தார்.

14.3.2009 பிற்பகல் 3 மணியளவில் நடந்த நிறைவு விழாவிற்குப் பேராசிரியர் என். பக்தவத்சல ரெட்டி தலைமையேற்றார். பேராசிரியர் ஜி.பாலசுப்பிரமணியன் கருத்தரங்கம் பற்றிய விரிவான அறிக்கை அளித்தார். தில்லி சவகர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் கி. நாச்சிமுத்து நிறைவுரையாற்றினார். முனைவர் எம். ஸ்ரீநாதன் நன்றிகூறினார்.

**கருத்தரங்கு 14**

# செவ்வியல் தமிழ் இலக்கியங்கள் போற்றும் பொருளாதாரச் சிந்தனைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் பெரியார் பல்கலைக்கழகப் பொருளியல் துறையும் இணைந்து நடத்திய தேசியக் கருத்தரங்கம், 'செவ்வியல் தமிழ் இலக்கியங்கள் போற்றும் பொருளாதாரச் சிந்தனைகள்' என்ற தலைப்பில் 19.3.2009, 20.3.2009 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

19.3.2009ஆம் நாள் காலை 10 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் ச. இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மு. தங்கராசு தலைமையுரையில் பழந்தமிழ் இலக்கியங்கள் எண்ணற்ற பொருளியல் சிந்தனைகளை உள்ளடக்கி வைத்துள்ளன என்று கூறினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் வே. சண்முகசுந்தரம் பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாகும் பொருளியல் சித்தாந்தங்கள் எக்காலத்திற்கும் பொருந்தும் எனக் கூறினார். பொருளியல் துறை விரிவுரையாளர் முனைவர் த. ஜெனகம் நன்றிகூறினார்.

இக்கருத்தரங்கில் 24 ஆய்வுக்கட்டுரைகள் வழங்கப் பட்டன. ஆறு அமர்வுகளாக நடைபெற்ற கருத்தரங்கில்

பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் சி. முத்துராசா

CICTArchives







முனைவர் கே. ஆர். சங்கரன்
முனைவர் தார்கிஸ் ஆல்பின்
முனைவர் எஸ். நேரு
முனைவர் ஆர். மனுவேல்
முனைவர் பி. ஜெயகிருஷ்ணன்
முனைவர் எஸ். அய்யம்பிள்ளை
முனைவர் பி. இரத்தினசபாபதி
முனைவர் டி. சேதுபாண்டியன்
முனைவர் த. மணியன்
முனைவர் பி. டாக்டர் நசிமுதீன்
முனைவர் எஸ். இராஜேந்திரன்
முனைவர் மு. தமிழ்மாறன்
முனைவர் வே. சண்முகசுந்தரம்
முனைவர் எஸ். நீலகண்டன்
முனைவர் மு. இளமுருகன்
முனைவர் வி. மோகனசுந்தரம்
திரு அர. பூங்குன்றன்
முனைவர் பி. வீரப்பன்
முனைவர் பி. எஸ். சிவக்குமார்
முனைவர் கே. சத்தியபாமா
பேராசிரியர் பெ. மாதையன்

ஆகியோர் கலந்துகொண்டு கட்டுரை வழங்கினார்கள். ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துரையாடலில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

நிறைவு விழா 20.03.2009 அன்று மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான பேராசிரியர் கா.கோ. வேங்கடராமன் அனைவரையும் வரவேற்றார். சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் பேராசிரியர் எஸ். நீலகண்டன் தலைமையுரையில் திருக்குறள் பற்றிய கருத்துக்கள் இக்காலச் சமுதாயத்திற்கு ஏற்றாற்போல் ஆராயப்பட வேண்டுமென்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தமது நிறைவு உரையில் திருக்குறள் பொருட்பாலில் அறியப்பட்டுள்ள பொருளியல் சிந்தனையை இக்காலத் தலைமுறையினரிடையே எடுத்துச்செல்வது நம் தலையாய கடமை எனக் கூறினார்.

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ச. இராசேந்திரன் நன்றிகூறினார்.

**கருத்தரங்கு 15**

# டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியின் எழுத்துக்களில் சங்க இலக்கியத் தாக்கம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோவை பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறையும் இணைந்து 'டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியின் எழுத்துக்களில் சங்க இலக்கியத் தாக்கம்' என்ற பொருளில் தேசியக் கருத்தரங்கம் ஒன்றை 2009 மார்ச்சு 19 முதல் 21 வரை நடத்தின.

19.3.2009 காலை 9.30 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் த. முத்துக்கிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். மொழியியல் துறைத் தலைவர் பேராசிரியர் சி. சிவசண்முகம் அறிமுகவுரையாற்றினார். பாரதியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஜி. திருவாசகம் தொடக்கவுரையில் சங்க இலக்கியத்தை இன்றைய தலைமுறையினருக்குப் பரப்ப வேண்டும் என்றார். எண்பேராய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் தமிழிலக்கியத்திற்குக் கலைஞர் ஆற்றிய பங்களிப்பை எடுத்துரைத்தார். செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. உமாராஜ் நன்றிகூறினார்.

முனைவர் கா. செல்லப்பன்
முனைவர் ஆர். ஜானகி
முனைவர் என். பாலசுப்பிரமணியன்
முனைவர் பி. தேவகி
முனைவர் யு. ஜெரோம் பெர்னாட்
முனைவர் பி. மஞ்சுளா
முனைவர் சி. சிவசண்முகம்
முனைவர் வி. ஜெயா
முனைவர் கே. மும்மூர்த்தி

CICTArchives








முனைவர் கே. இரத்தினதேவி
முனைவர் பி. அருள்மனோகரி
முனைவர் எஸ். சேட்டு மதார்சா
முனைவர் ஏ. இராஜராஜேஸ்வரி
முனைவர் எஸ். சரண்யா
முனைவர் ஜே.ஆர். நிர்மலா
முனைவர் ஜி. மலர்விழி
முனைவர் கே.வி. குருமூர்த்தி
முனைவர் கே. பன்னீர்ச்செல்வம்
முனைவர் ஆர். ஸ்ரீநிவாசன்
முனைவர் எஸ். இளையராஜா
முனைவர் அ. ஆலிஸ்
முனைவர் பி. மகேஸ்வரி
முனைவர் கே. ஆனந்தகுமார்
முனைவர் சி. சிவக்குமார்
முனைவர் வீ. தயாளன்
செல்வி பி. சத்யா

உள்ளிட்ட 35 பேர் கட்டுரை வழங்கினர். ஒன்பது அமர்வுகளாக நடந்த கருத்தரங்கில் கலைஞர் கருணாநிதியின் கவிதை, சிறுகதை, புதினம், திரைக்கதை, கடிதம் முதலிய அனைத்துப் படைப்புக்களும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

19.3.2009 பிற்பகல் 4 மணியளவில் நடந்த நிறைவு விழா மொழியியல் துறைப் பேராசிரியர் வி. தயாளன் தலைமையில் நடைபெற்றது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் நிறைவுரையாற்றினார். பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் அ. ஆலிஸ் சிறப்புரையாற்றினார். முனைவர் த. முத்துக்கிருஷ்ணன் கருத்தரங்கம் இளைஞர்களுக்குப் பயன்படும் வகையில் சிறப்பாக நடந்ததாகக் கூறினார். பங்கேற்றவர்கள் சார்பில் மகேசுவரியும் அன்புசிவமும் கருத்துரை கூறினர். முனைவர் கா. உமாராஜ் நன்றி கூறக் கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது.

கருத்தரங்கு 16

# சங்க இலக்கியத் திணைக்கோட்பாடுகளும் உயிரினப் பன்மயமும் சூழலியல் கூறுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி புனித சூசையப்பர் கல்லூரி இரபிநாத் உயிரியல் ஆய்வு மையமும் இணைந்து 'சங்க இலக்கியத் திணைக் கோட்பாடுகளும் உயிரினப் பன்மயமும் சூழலியல் கூறுகளும்' என்ற தலைப்பில் 2009 மார்ச்சு 20 முதல் 22 முடிய மூன்று நாட்கள் கருத்தரங்கம் நடத்தின. கருத்தரங்கம் கொடைக்கானல் செண்பகனூர் ஆங்கிலாடு சுற்றுச்சூழல் மையத்தில் நடைபெற்றது.

தொடக்க நிகழ்ச்சி 20-3-2009 காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. அருள் தந்தை முனைவர் எஸ். ஜான் பிரிட்டோ சே.ச. அனைவரையும் வரவேற்றார். அருள்தந்தை ஆரோக்கியம் சே. ச. வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் முனைவர் தி.முருகரத்தனம் தலைமையேற்றார்.

முனைவர் முருகரத்தனம் சங்க இலக்கியத்திலுள்ள திணைகளின் நோக்கங்களையும் எவ்வாறு பண்டைய காலத் தமிழர்களின் வாழ்வியல் சுற்றுச்சூழலோடு இணைந்திருந்தது என்பதையும் எடுத்துக்கூறினார். முனைவர் க. நெடுஞ்செழியன் நன்றிகூறினார்.

முனைவர் கே. இரத்தினம்
முனைவர் ஜே. முத்துமாரி
முனைவர் வாசுதேவன்
முனைவர் க. நெடுஞ்செழியன்
முனைவர் ஜான்பீட்டர்



CICTArchives



முனைவர் கோதண்டராமன்
பேராசிரியர் பக்தவத்சலபாரதி
திரு பாமயன்
முனைவர் கே. முத்துசாமி
முனைவர் பூலோகரம்பை
பேராசிரியர் ஆ. தனஞ்செயன்
முனைவர் வி. நந்தகோபாலன்
முனைவர் ஆர். சுகுமார்
முனைவர் நோபல் ஜோசப் இருதயராஜ்
முனைவர் ஜெயராஜ் கொரான்லா
முனைவர் மேரி நிர்மலா ராணி
முனைவர் எஸ்.ஜான் பிரிட்டோ
முனைவர் மோரிஸ் ஜாப்
முனைவர் எஸ்.ஆர். செந்தில்குமார்
முனைவர் தி. முருகரத்தனம்

ஆகிய தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர். 23 ஆய்வாளர்கள் பங்குகொண்டு பயன் பெற்றனர்.

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களாகச் செம்மொழி நிறுவனத்தைச் சார்ந்த முனைவர் கி. செயக்குமாரும் கல்லூரிச் செயலர் அருள்தந்தை முனைவர் ச. ஜான்பிரிட்டோவும் செயல்பட்டார்கள்.

நிறைவு விழா நாளான 22-3-2009 அன்று முனைவர் க. நெடுஞ்செழியன் வரவேற்புரை வழங்கினார். பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மு. பொன்னவைக்கோ நிறைவு விழாச் சிறப்புரை நிகழ்த்தினார். அவர் தம் உரையில் தமிழ், உலகத்திலுள்ள தொன்மையான மொழிகளுக்கும் தொன்மையானது என்று குறிப்பிட்டார். இதை அறிவியல் நிலையில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நிறுவிட அனைத்து ஒப்பாய்வுகளையும் செய்திட வேண்டும் என்றார். முனைவர் ஜான் பிரிட்டோ சே.ச நன்றி கூறினார்.

**கருத்தரங்கு 11**

# தமிழ் – வடமொழிச் செவ்வியல் இலக்கியங்கள் : ஒப்பியல் ஆய்வு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகப் பாஷா சங்கமும் இணைந்து 2009 மார்ச்சு 24,25 ஆகிய நாட்களில் 'தமிழ் - வடமொழிச் செவ்வியல் இலக்கியங்கள்: ஒப்பியல் ஆய்வு' என்னும் பொருளில் தேசியக் கருத்தரங்கை நடத்தின.

24.3.2009 காலை 11 மணியளவில் தொடக்க விழா நடந்தது. பாஷா சங்கத் தலைவர் பேராசிரியர் எஸ். தேவசங்கீதம் வரவேற்புரையாற்றினார். திருவேங்கடவன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். பிரபாகர் ராவ் கருத்தரங்கைத்




தொடங்கிவைத்து உரை நிகழ்த்தினார். பல்கலைக்கழகக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் எஸ். ஜி. டி. சந்திரசேகர் தலைமையேற்றார். சென்னைப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். ரேவதி கருத்துரை வழங்கினார். திராவிடப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. இரமனையா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். ஆந்திரப் பிரதேச வேளாண் உற்பத்தி ஆணையாளர் முனைவர் கே. செல்லப்பா இ.ஆ.ப. சங்க இலக்கியத்தின் செவ்வியல் தன்மைகளை விளக்கிப் பேசினார். பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் ஒய். வேங்கடசாமி ரெட்டி விருந்தினராகச் சிறப்பிக்கப்பட்டார். செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவன ஆய்வறிஞர் கு. சிவமணி வாழ்த்துரை வழங்கினார். செயலாளர் பேராசிரியர் பத்மஜா தேவி நன்றிகூறினார்.

முனைவர் அஜய் குமார் நந்தா
பேராசிரியர் டி. கேசவநாராயணா
பேராசிரியர் சர்வோதம் ராவ்
பேராசிரியர் இராதாகிருஷ்ணபட்
பேராசிரியர் கே. ஆனந்தன்
பேராசிரியர் ஜோஸ்பின் டோரத்தி
பேராசிரியர் ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி
பேராசிரியர் பி.எஸ். மகாதேவையா
முனைவர் சோமநாத் தேஷ்
முனைவர் சங்கர் கனேஷ்
முனைவர் பரமிதா பாண்டா
முனைவர் என். பத்மா
முனைவர் மாசி ரெட்டி
முனைவர் எம். ஆர். இராஜேஸ்வரி
முனைவர் எம். பொன்னுசாமி
முனைவர் கே.ஏ. இராஜாராம்
முனைவர் கே. உஷாராணி
முனைவர் கே. பிரதாப்
முனைவர் ஜி. வரலட்சுமி
முனைவர் ஜி. சங்கரநாராயணா
முனைவர் பாரத் பூஷன்ரத்

உள்ளிட்ட 45 அறிஞர்கள் ஏழு அமர்வுகளில் கட்டுரைகள் வழங்கினர். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் வழங்கப்பட்ட கட்டுரைகள் தனியே ஒருங்கிணைக்கப்பட்டும் சமஸ்கிருதம், இந்தி மற்றும் பிற மொழிகளில் அமைந்த கட்டுரைகள் தனியே ஒருங்கிணைக்கப்பட்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்தி, தெலுங்கு, சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் கட்டுரை வழங்கிய ஆய்வாளர்கள், கட்டுரைச்

CICTArchives






சுருக்கத்தை ஆங்கிலத்தில் தர வேண்டும் என்று ஆய்வறிஞர் சிவமணி கேட்டுக்கொண்டார்.

25.03.09 அன்று பிற்பகல் 4 மணியளவில் பல்கலைக்கழகப் பேராசிரியர் கே. இரத்தினையா தலைமையில் நிறைவு விழா நடைபெற்றது. அவர் தம்முரையில் இக்கருத்தரங்கைச் சிறப்பாக நடத்திய செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கும், பிற அமைப்புகளுக்கும் தம் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கு.சிவமணி தமது நிறைவுரையில் மிகுந்த எண்ணிக்கையில் கலந்துகொண்ட உரையாளர்களைப் பாராட்டினார். பாஷா சங்கத் தலைவர் பேராசிரியர் எஸ். தேவசங்கீதம் வரவேற்புரையும் செயலாளர் பேராசிரியர் ஜி.பத்மஜா தேவி நன்றியுரையும் கூறினர்.

**கருத்தரங்கு 18**

# செம்மொழித் தமிழ்ப் பனுவல் வாசிப்பும் மூலபாட ஆய்வும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுவைப் பிரஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனமும் இணைந்து, 'செம்மொழித் தமிழ்ப் பனுவல் வாசிப்பும் மூலபாட ஆய்வும்' என்ற பொருளில் பன்னாட்டுக் கருத்தரங்கைப் புதுவை பிரஞ்சு நிறுவனத்தில் 2009 மார்ச்சு 25 முதல் 27 முடிய மூன்று நாட்கள் நடத்தின. கருத்தரங்கில் அறிஞர்களும் ஆய்வு மாணவர்களும் இலங்கை, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் வந்து கலந்துகொண்டார்கள்.

தமிழ்ப் பனுவல்களின் வரலாறு பற்றிச் சிறப்பாக ஆய்வு மேற்கொள்ளப்பெற்றது. செம்மொழித் தமிழ், இக்காலத் தமிழ்ப் பனுவல் குறித்துக் கிடைக்கும் ஆவணங்கள் (ஓலைச்சுவடி, நூலகம், பட்டியல், பதிப்பு மற்றும் பயன்பாட்டாளர்) ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டன.

25.3.2009 காலை 9 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் புதுவைப் பிரஞ்சு ஆய்வு நிறுவன இயக்குநர் பேராசிரியர் வேலாயுதம் மாரிமுத்து வரவேற்றார். வரவேற்புரையில், தமிழ்மொழி போன்ற செம்மொழிகள் இன்றுவரை வழக்கில் இருப்பதை எண்ணும்போது ஆர்வம் பல மடங்கு பெருகுகிறது என்றும் இக்கருத்தரங்கு தடைகளை உடைத்து நடைமுறைக்கு ஏற்ற புதிய கருத்துகளை உருவாக்கும் என்றும் குறிப்பிட்டார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரான செம்மொழி நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன், தொடக்கவுரையில் உயர்நிலையில் தமிழ்க் கல்வியின் தரத்தை உயர்த்த ஏதாவது செய்ய வேண்டும் என்றும் மக்கள் இப்போதுதான் உணரத் தொடங்கியிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். புதுவைப் பிரஞ்சு நிறுவனப் பேராசிரியர் ஒய். சுப்பராயலு அலுவல் முறையில் தமிழ் செம்மொழி என்று அறிவிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் செம்மொழி அறிஞர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். சில பட்டதாரிகளே செவ்வியல் இலக்கியங்களைக் கற்கின்றனர். கல்லூரிகளில் மாந்தவியல் துறைகளுக்கு இரண்டாந்தர மரியாதையே கொடுக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் கல்வியில் வணிகமயத்தைப் புகுத்திவிட்டார்கள். அரசு கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் அறிவியல் துறைகளைத்தான் வளர்க் கின்றன, மாந்தவியல் துறைகளை மதிப்பதில்லை. பல துறைகளில் ஆள் இல்லை: சில துறைகளில் ஓராசிரியர்தான் உள்ளார். இந்த நிலை மாற வேண்டும் என்று எடுத்துக்கூறினார்.

திரு வி. இராஜேஷ்
திரு ப. ஜெய்கணேஷ்
பேராசிரியர் தாமஸ் லெஹ்மன்
பேராசிரியர் அ. பாண்டுரங்கன்
முனைவர் இந்திரா மனுவேல்
பேராசிரியர் பா. ரா. சுப்பிரமணியன்






CICTArchives



முனைவர் டி. இராஜேஸ்வரி
பேராசிரியர் இரா. கோதண்டராமன்
பேராசிரியர் சிவமாதவன்
பேராசிரியர் பெர்னார்ட் பட்டே
முனைவர் அரங்கராஜ்
திரு பி. கிருஷ்ணமூர்த்தி
திரு ஜி. சுந்தர்
முனைவர் ஜெயசங்கர்
முனைவர் அ. சதீஷ்
திரு பி.கே. பெரியசாமி ராஜா
திரு ஆர். நரேந்திரன்
திரு ஜி. சரவணன்
செல்வி வ. கீதா
பேராசிரியர் எஸ். குருசாமி
பேராசிரியர் தி. முருகரத்தனம்
பேராசிரியர் ப. மருதநாயகம்
பேராசிரியர் ராஜ் கௌதமன்
முனைவர் எஸ். பக்தவச்சல பாரதி
முனைவர் சம்பத்
திரு பிரபாவதி
முனைவர் சோமேஸ்வரி கிருஷ்ணகுமார்
பேராசிரியர் ஏ. நீலமேகம்
முனைவர் கருணாநிதி
திரு செந்தில்நாதன்
திரு திலிப் குமார்
திரு பங்கஜவள்ளி

ஆகியோர் கருத்தரங்கில் பங்குபெற்றுக் கட்டுரை வழங்கிச் சிறப்பித்தனர்.

முதல் நாள் கருத்தரங்கில் தமிழ் இலக்கிய ஓலைச் சுவடிகள், பதிப்புகள் பற்றிய கலந்தாய்வு நடைபெற்றது.

இரண்டாம், மூன்றாம் நாட்களில் தமிழ் நாட்டிலும் பிற இடங்களிலும் உள்ள செம்மொழித் தமிழ் நூலகங்கள் பற்றியும் நூலகங்களைப் பட்டியலிட்டுப் பாதுகாப்பது குறித்தும் ஆய்வு செய்யப்பெற்றது.

**கருத்தரங்கு 19**

# இரும்புக் காலம் தொடங்கி வரலாற்றுத் தொடக்கக் காலம் வரை பண்பாட்டு மாற்றங்கள் : ஓர் அகழ்வியல் ஆய்வு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுவைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையும் இணைந்து 2009 மார்ச்சு 25 முதல் 27 முடிய மூன்று நாட்கள் 'இரும்புக் காலம் தொடங்கி வரலாற்றுத் தொடக்கக் காலம் வரை பண்பாட்டு மாற்றங்கள் - ஓர் அகழ்வியல் ஆய்வு' என்ற பொருளில் தேசியக் கருத்தரங்கு ஒன்றை நடத்தின.




25.3.2009 காலை 9.30 மணியளவில் தொடக்க விழா நடைபெற்றது. செம்மொழி நிறுவன ஆய்வறிஞரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான பேராசிரியர் ப. மருதநாயகம் வரவேற்புரையில் தமிழ் மொழியின் தொன்மையைச் சங்க இலக்கியப் பின்னணியில் எடுத்துக் கூறியதுடன் கிடைக்கின்ற சான்றுகளின் அடிப்படையில் அன்றைய சமூகம்பற்றி எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் முடிவை எட்ட வேண்டும் என்றும் கூறினார்.

இந்தியாவில் நடந்த பண்பாட்டு மாற்றங்களைப் பல்துறை அறிஞர்களும் பிற துறைகளோடு ஊடாடி ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்பதை இக்கருத்தரங்கம் வலியுறுத்துவதாகக் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கா. இராஜன் முன்மொழிந்தார். அகழ்வாய்விலும் பிற வகையிலும் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் - வரலாற்றுப் பொருள்களை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அண்மைக் காலமாகக் கண்டெடுக்கப்பட்ட பொருள்களை முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு தமிழ்நாட்டின் பழைய வரலாற்றை அறிய இக் கருத்தரங்கம் இயன்ற வகையெல்லாம் முயன்றது. இரும்புக் காலத்திலிருந்து சங்க காலம் வரை சமூகத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், மொழியியல், இலக்கியம், வரலாறு என எல்லாத்



CICTArchives



துறைகளிலும் கிடைத்த சான்றுகளைக்கொண்டு கற்ற சமூகத்திற்கும் அதற்கு முந்தைய சமூகத்திற்கும் இருந்த பண்பாட்டு வேறுபாடுகள் கணக்கிடப்பட்டன. சமூகத்தில் எழுத்தின் அறிமுகம் தமிழ்நாட்டுப் பழைய வரலாற்றின் தொடக்கக்காலம் என்று கருதப்பட்டது.

கேரள வரலாற்று ஆய்வுப் பேரவையின் இயக்குநர் பேராசிரியர் பி. ஜே. செரியன் சங்க காலச் சேரர் துறைமுகமான முசிறியில் - இன்றைய பட்டணத்தில் அண்மையில் நடந்த அகழ்வாய்வு பற்றி எடுத்துக் கூறினார்.

பேராசிரியர் ஆர். சண்பகலட்சுமி கருத்தரங்கத் தொடக்கவுரையில், 'தொல்லியலாளர்கள் பெருங்கற் காலத்திலிருந்து வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கு மாறிய தமிழக வரலாற்றைத் தம் போக்கில் நிறுவும் அதே நேரத்தில் வரலாற்றாசிரியர்கள் அரசமைப்பில்லாப் பழங்குடிச் சமூகத்திலிருந்து அரசு உருவான காலத்தை வரலாற்றுக்கு முந்தைய காலமாகக் கூறிச் சங்க இலக்கியத்திலிருந்து சான்றுகளும் காட்டுவார்கள். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தாத்தபட்டி, புலிமான் கோம்பை ஆகிய இடங்களில் கிடைத்த நடுகற்களும், அகநானூறு(53) கூறியுள்ள நடுகல் குறிப்புகளும் தொடர்புள்ளனவாக இருக்கின்றன. இதற்குத் தமிழக எல்லைக்குள் இலக்கியச் சான்றுகளைக் காட்டலாம். தமிழகம் தவிர்த்த ஆந்திர - தக்கணப் பகுதிகளில் தொல்லியல் சான்றுகளைத்தான் காட்டமுடியும். இலக்கியச் சான்று எதுவும் அங்கே இல்லை. வரலாற்றை ஒன்றோடொன்று பொருத்திப்பார்த்துத்தான் முடிவு செய்ய வேண்டும்' என்று எடுத்துக்கூறினார்.

பேராசிரியர் கே. என். கணேஷ்
பேராசிரியர் பி. ஜே. செரியன்
பேராசிரியர் ப. சண்முகம்
பேராசிரியர் ஒய். சுப்பராயலு
பேராசிரியர் விஜய வேணுகோபால்
முனைவர் சத்தியபாமா பத்ரிநாத்
முனைவர் த. தயாளன்
முனைவர் கே. பி. ராவ்
திரு தியாக. சத்தியமூர்த்தி
முனைவர் இரவிசங்கர்
முனைவர் அகிலேஷ்
பேராசிரியர் என். அதியமான்
முனைவர் பி.டி. பாலாஜி
திரு கே. குமார்
முனைவர் எஸ். இராஜகோபால்
முனைவர் சு. இராஜவேலு
முனைவர் வி. செல்வகுமார்
முனைவர் சாந்தி பப்பு
முனைவர் ஸ்மிருதி ஹரிசரன்
திரு பி. எஸ். ஸ்ரீராமன்
முனைவர் டி. சுப்பிரமணியம்
முனைவர் வெ. வேதாச்சலம்
திரு வி. பி. யதீஷ்குமார்
முனைவர் கௌன் கெல்லி

என இந்தியா முழுவதிலுமிருந்து வந்திருந்த அறிஞர்கள் 24 கட்டுரைகளை 6 அமர்வுகளில் படித்தனர். 175 மாணவர்களும் ஆய்வு மாணவர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

புதுவைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் முனைவர் ஜி. சந்திரிகா நன்றிகூறினார்.

**கருத்தரங்கு 20**

# தொல்காப்பியம் - சங்க இலக்கியம்: பதிப்பும் பதிப்பாளரும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து தொல்காப்பியம் - சங்க இலக்கியம்: பதிப்பும் பதிப்பாளரும் என்ற பொருளில் 2009 மார்ச்சு 25 முதல் 27 முடிய மூன்று நாட்கள் கருத்தரங்கம் நடத்தின.

25.3.2009 காலை 10 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கரு. அழ. குணசேகரன் விருந்தினர்களுக்கு நூல் வழங்கி வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சிக்குத் தலைமையேற்ற முதுமுனைவர் இரா. இளங்குமரன் கருத்தரங்க மலரை வெளியிட்டுச் செவ்வியல் பற்றியும் செம்மொழி நிறுவனம் பற்றியும் தமிழ் வேர்ச்சொற்கள் பற்றியும் எடுத்துரைத்தார். செம்மொழி நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி ஆய்வுக் கோவையின் முதல் படியைப் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி கருத்தரங்கின் மையப் பொருளுரையை எடுத்து விளக்கினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் அன்னி தாமசு நன்றிகூறினார்.

முனைவர் டி. சேதுபாண்டியன்
முனைவர் வீ. குருநாதன்
திரு பி. வேலுசாமி
முனைவர் கோவைமணி
முனைவர் இரா.மதிவாணன்
பேராசிரியர் அ. ஆலிஸ்
திரு பி. ஜெய்கணேஷ்
பேராசிரியர் அன்னி தாமசு



செல்வி டி. மகாலட்சுமி
முனைவர் இராதா செல்லப்பன்
முனைவர் டி. இராஜரத்தினம்
முனைவர் டி. செல்வம்
முனைவர் ஆர். இலக்குவன்
முனைவர் பி. பாலாஜி
முனைவர் ஆ. தசரதன்
முனைவர் ஆர். காசிராஜன்
முனைவர் இரா. அறவேந்தன்
முனைவர் கி. செயக்குமார்
முனைவர் ஏ.எல். உமாமகேசுவரி
முனைவர் வி. நெடுஞ்செழியன்
முனைவர் தி. மகாலட்சுமி
முனைவர் ச. சிவகாமி
திரு கே. காசி மாரியப்பன்
முனைவர் எஸ். குருசாமி
முனைவர் எஸ். நிர்மலாதேவி
முனைவர் என். இளங்கோவன்
முனைவர் அ. அறிவுநம்பி
பேராசிரியர் பெ. மாதையன்

ஆகியோர் ஐந்து அமர்வுகளில் 28 கட்டுரைகள் வழங்கினர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வு மாணவர்கள், முதுகலை மாணவர், தமிழ் ஆர்வலர் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பார்வையாளர்களாகப் பங்கேற்றனர்.

கருத்தரங்கின் நிறைவு விழா மார்ச்சு 27ஆம் தேதி மாலை 4 மணியளவில் நிகழ்ந்தது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் கரு. அழ. குணசேகரன் வரவேற்புரை வழங்கினார். முனைவர் அன்னி தாமசும் ஆய்வு மாணவர் அறிவுநிதியும் நோக்க உரை நிகழ்த்தினர். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமையில் தமிழூர் உலகத் தமிழ்க் கல்வி இயக்கக மதிப்புறு இயக்குநர் முனைவர் ச. வே. சுப்பிரமணியன் நிறைவுப்பேருரை நிகழ்த்தினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச.சிவகாமி நன்றிகூறக் கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது.

**கருத்தரங்கு** *21*

# சங்க இலக்கியத்தில் மெய்யியல் சிந்தனைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோத்தகிரி புனித சூசையப்பர் கபூசின் மெய்யியல் கல்லூரியும் இணைந்து சங்க இலக்கியத்தில் மெய்யியல் சிந்தனைகள் என்ற தேசியக் கருத்தரங்கை 2009 மார்ச்சு 25 முதல் 27 முடிய மூன்று நாட்கள் நடத்தின.

25.3.2009 காலை 10 மணியளவில் நடந்த தொடக்க விழாவுக்கு உதகைப் பேராயர் முனைவர் அமல் ராஜ் தலைமைதாங்கினார். விருந்தினர்கள் குத்துவிளக்கு ஏற்றியபின் முனைவர் ஏ.ஜே. மாத்தியூ அனைவரையும்



வரவேற்றார். பங்குத் தந்தை ஜான் பீட்டர் விருந்தினர்களுக்குச் சிறப்புச்செய்தார்.

அறிவியல் தமிழ் மன்றத் துணைத் தலைவர் முனைவர் மு. பி. பாலசுப்பிரமணியம் தொடக்க வுரையில் தமிழ் மெய்யியல் கருத்துக்கள் திருக்குறளிலும் மணிமேகலையிலும் விரவிக் கிடக்கின்றன என்றும் சமூகத்தில் ஒற்றுமை, அமைதி, நல்லிணக்கம் ஆகியவற்றை உருவாக்குவதே அவற்றின் நோக்கம் என்றும் எடுத்துரைத்தார். பங்குத் தந்தை ஆல்போன்ஸ் சார்லஸ் சிறப்புரையாற்றினார். முனைவர் கா. உமாராஜ் நன்றிகூறினார்.

முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியம்
முனைவர் ஏ. அமல்ராஜ்
முனைவர் சுந்தரவல்லி
முனைவர் பீட்டர் சூசைமாணிக்கம்
முனைவர் வின்சென்ட் சேகர் சே.ச.
சகோதரர் ஜோஸ் செல்லத்துரை
அருள்தந்தை ஏ. அற்புதராஜ்
செல்வி டி. மகாலட்சுமி
முனைவர் அந்தோணி சவரிராஜ்
முனைவர் உமாமகேசுவரி
முனைவர் ஜேம்ஸ் டி.செல்லையா
திரு விஜயன்
முனைவர் என். இராம்பிரபா
அருள்தந்தை ஹாரி இம்மானுவேல்
பேராசிரியர் எம். சாம் கிறிஸ்டோபர்
முனைவர் கரு. ஆறுமுகம்
முனைவர் சங்கர்
முனைவர் இரவிச்சந்திரன்
திரு வாசுகி
முனைவர் எட்வின் ஜார்ஜ்
அருள்தந்தை ஏ.ஜே. மாத்தியூ
முனைவர் வி.எஸ். ஜார்ஜ் ஜோசப்
முனைவர் கனகசபேசன்
அருள்தந்தை பாசில் சேவியர்
அருள்தந்தை புருனோ
முனைவர் ஏ.டி. இரேவதி
முனைவர் வி. சீனிவாசன்
முனைவர் பி. தேவன்
அருள் தந்தை வல்லபதாஸ் ஜான் பீட்டர்

CICTArchives



முனைவர் எம்.சந்தானம்
முனைவர் எஸ்.லூர்துநாதன்
முனைவர் வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர்
முனைவர் சுவாமி வேதாந்த சரஸ்வதி
முனைவர் பிரியதர்சினி
முனைவர் வின்செண்ட் சேகர் சே.ச
முனைவர் பீட்டர் சூசைமாணிக்கம்

ஆகியோர் 7 அமர்வுகளில் கட்டுரை வழங்கிக் கருத்தரங்கைச் சிறப்பித்தார்கள்.

ஒருங்கிணைப்பாளர் முனைவர் கா. உமாராஜ் 27.3.2009 பிற்பகல் 2.30 மணிக்கு நடந்த நிறைவு விழாவில் அனைவரையும் வரவேற்றார். பங்குத் தந்தை முனைவர் ஏ.ஜே. மாத்தியூ விருந்தினர்களுக்குச் சிறப்புச் செய்தார். எண்பேராய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் நிறைவுரையாற்றும்போது தமிழ் எல்லா மத இலக்கியங்களுக்கும் இடம் கொடுக்கும். எனவே தமிழுக்குக் குறிப்பிட்ட மதம் என்பது கிடையாது என்று எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினராக நீலகிரி மாவட்டக் கூடுதல் ஆட்சியர் திரு டி. ஆபிரகாம் கலந்துகொண்டு தமிழ் மரபு விரிவானது, சிறப்பானது என்று குறிப்பிட்டார். ஒருங்கிணைப்பாளர் பங்குத் தந்தை வல்லபதாஸ் ஜான் பீட்டர் நன்றிகூறக் கருத்தரங்கம் நிறைவுபெற்றது.

**கருத்தரங்கு 22**

# பக்தி இயக்கத்திற்குச் சங்க இலக்கியத்தின் பங்களிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சிவகாசி ஸ்ரீ காளீசுவரி கல்லூரியும் இணைந்து நடத்திய தேசியக் கருத்தரங்கம் 'பக்தி இயக்கத்திற்குச் சங்க இலக்கியத்தின் பங்களிப்பு' என்ற தலைப்பில் 27-3-2009 முதல் 29-3-2009 வரை நடைபெற்றது.

27-3-2009 காலை 9 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் ஸ்ரீ காளீசுவரி கல்லூரிச் செயலர் திரு அ. பா. செல்வராசன் குத்துவிளக்கேற்றிக் கருத்தரங்கைத் தொடங்கிவைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் ச. கண்மணி வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன எண்பேராய உறுப்பினர் முனைவர் மா. நன்னன் தலைமையுரையில் தமிழின் இன்றைய நிலை பற்றிக் குறிப்பிட்டதோடு பேராளர்கள் தலைப்பை ஒட்டியும் காலமுறைப்படியும் சான்றாதாரங்களுடன் கருத்துக்களை முன்வைக்க வேண்டுமென்றும் கூறினார். முனைவர் ச. ஜெயஸ்ரீ நன்றிநவின்றார்.

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
முனைவர் அ. பாண்டுரங்கன்
பேராசிரியர் கே.ஏ. இராஜாராம்
முனைவர் எஸ். தங்கதுரை
புலவர் மணியன்



முனைவர் பி. என். கமலா
பேராசிரியர் இரா. மோகன்
முனைவர் ஜே. அமுதா
பேராசிரியர் எம்.எஸ். அறிவுடைநம்பி
முனைவர் சிவ. மாதவன்
முனைவர் பி. ஜெயகிருஷ்ணன்
முனைவர் எம். மணிவேல்
பேராசிரியர் டி. சங்கையா
முனைவர் எஸ். கண்மணி
முனைவர் வேல். கார்த்திகேயன்
பேராசிரியர் எஸ். வேங்கடராமன்
பேராசிரியர் கே. பலராமன்
முனைவர் எஸ். சந்திரா
முனைவர் சசிகுமார்
முனைவர் எஸ். ஜெயஸ்ரீ

ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர்.

29.3.2009 பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் ஸ்ரீ காளீசுவரி கல்லூரிப் பேராசிரியர் வை. முத்துலட்சுமி வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வறிஞரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான முனைவர் இரெ. குமரன் தலைமையுரையாற்றினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் முனைவர் ச. வே. சுப்பிரமணியன் வாழ்த்துரையில் வழிபாடு தொடங்குவதற்கு ஐம்பெரும் நூல்கள் அடிப்படை எனக் கருத்துரைத்தார். முனைவர் எஸ். ஜெயஸ்ரீ கருத்தரங்கில் பங்குபெற்று உரையாற்றினார். இறுதியாகக் கல்லூரிப் பேராசிரியர் ச. சரஸ்வதி நன்றிகூறினார்.




CICTArchives



# பேராசிரியர் கமில் வாச்லாவ் சுவலபில்

***1927-2009***



கெப்லர் (Keplar), காஃப்கா (Kafka) முதலான பெருந்தகையாளர்கள் தோன்றி வாழ்ந்த செக்கோஸ்லோவாக்கியத் தலைநகர் பிராக் (Prague). இங்கு 17.11.1927இல் பேரறிஞர் கமில் சுவலபில் தோன்றினார். இவரது முழுப்பெயர் கமில் வாச்லாவ் சுவலபில் (Kamil Vaclav Zvelebil) என்பதாகும்.

சுவலபில் 1946 முதல் 1952 வரை சார்லஸ் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம், மெய்யியல், இந்தியவியல், ஆங்கில இலக்கியம் ஆகியவற்றைப் பயின்று புலமைபெற்றார். 1952இல் வடமொழி சார்ந்தும் 1959இல் திராவிட மொழியியல் சார்ந்தும் இரண்டு முனைவர் பட்டங்களைப் பெற்ற சுவலபில் செக்கோஸ்லோவாக்கியக் கீழையியல் துறையில் பதினெட்டாண்டுகள் (1952 முதல் 1970 வரை) ஆய்வாளராகப் பணிபுரிந்தார்.

இங்கே பணிபுரிகையில்தான் கிரேக்கம், இலத்தீன், வடமொழி ஆகிய செவ்வியல் மொழிகளிலும் உருசியம், ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலியம், போலிஷ் (Polish), இந்தி, மலையாளம் ஆகிய நவீன மொழிகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டார். பன்மொழியாளராக விளங்கிய போதும் சுவலபில் தமிழியல் ஆய்வுகளில்தான் மிகுந்த ஆர்வம் காட்டினார். பெரும்பாலான அவரது படைப்புக்கள் திராவிடவியலையும் தமிழியலையும் சார்ந்தவையேயாகும். சுவலபில் தம்முடைய ஆய்வுப் பணிகளை அமெரிக்கா, ஜெர்மனி, ஃபிரான்சு, இந்தியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சார்ந்த பல்கலைக் கழகங்களோடு இணைந்து மேற்கொண்டார்.

தமிழகத்துக்குப் பலமுறை வருகைதந்த இவர் இங்கிருந்த தமிழியல், இந்தியவியல் சார்ந்த பல தலைசிறந்த அறிஞர் பெருமக்களோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். பழந்தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடுகொண்ட இவர் தமிழ்மொழியின் சிறப்பை மொழிபெயர்ப்புகள், ஆய்வுக் கட்டுரைகள் வாயிலாக மேலைநாட்டினர்க்கு அறிமுகப்படுத்தினார்.

பழந்தமிழ் இலக்கிய மரபுகள், திராவிட மொழியியல், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பாரதியின் படைப்புக்கள், நாட்டுப்புறக் கதைகள், இருளர் மொழி ஆகியவற்றில் இவர் கவனம் அழுத்தமாக விழுந்தது. தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் சார்ந்த படைப்புக்களை ஜெர்மன், செக், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கொணர்ந்ததன் வாயிலாகத் தம்மைச் சிறந்த மொழிபெயர்ப்பாளராக நிலைநிறுத்திக்கொண்டார்.

ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளையும் ஆய்வு நூல்களையும் தமிழியலுக்கும் திராவிடவியலுக்கும் இந்தியவியலுக்கும் காணிக்கையாக்கிய சுவலபில் பெருமகனார் ஓர் ஒப்பற்ற ஆய்வுக் களஞ்சியம். கமில் வாச்லாவ் சுவலபில் என்ற அறிவுச் சுடர் 17.01.2009 அன்று அணைந்து நம்மை இருளெனும் துயரக்கடலில் ஆழ்த்திச் சென்றுவிட்டது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சுவலபிலின் மறைவிற்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

### பேராசிரியர் **கமில் வாச்லாவ் சுவலபில்**

#### நூல்கள்

1. The smile of Murugan - 1973
2. Tamil Literature - 1974
3. Companion Studies to History of Tamil literature 1992
4. Lexicon of Tamil Literature - 1995
5. Literary conventions of Akam poetry - 1986
6. Dravidian Linguistics, an introduction - 1990
7. Classical Tamil prosody.
8. Introducing Tamil Literature
9. Introduction to the Historical Grammar of the Tamil Language -1970
10. Tamilica et Dravidica - 1998

And more than 500 bibliographic items including books, articles, reviews and Translation.



# பொருந்தல் அகழாய்வு

கா. ராஜன், புதுச்சேரி

புதுவைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை, பேராசிரியர் கா. இராஜன் தலைமையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மற்றும் மத்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் நல்கையுடன் சங்ககாலப் புலவர் வாழ்ந்த ஊராகக் கருதப்படும் பொருந்தல் என்ற ஊரில் 2009 மே, ஜூன் ஆகிய இரண்டு மாதங்களில் தொல்லியல் அகழாய்வினை மேற்கொண்டது.

இச்சிற்றூர் மேற்குத் தொடர்ச்சி மலையின் பின்புலத்தில் பொருந்தலாற்றின் இடக்கரையில் பழநி நகரத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் சங்ககாலத்தில் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையிலிருந்து சேரநாட்டின் தலைநகரான வஞ்சிக்குச் செல்லும் பெருவழியில் அமைந்திருப்பது ஒரு சிறப்பாகும். இவ்வூர் 'வைகாவி நாட்டுப் பொருந்தல்' என்று அழைக்கப்படுவதால் வேளாவிக்கோ பெரும்பேகன் ஆட்சிக்கு உட்பட்ட இடமாக இருந்திருக்க வேண்டும்.

சேரரின் குலதெய்வமாகக் கருதப்படுகிற கொற்றவை உறையும் இடமான அயிரைமலையும், உரோம நாட்டு நாணயங்கள் கிடைத்த இடமான சின்னக் கலையமுத்தூரும், இடைக்கால வணிகக் குழுவான ஐந்நூற்றுவர் கல்வெட்டுக்கள் கிடைத்த ஊர்களான தாமரைக்குளமும் இராஜராஜபுரமும் இப் பொருந்தலுக்கு அருகில் அமைந்திருப்பது, இவ்வூரின் சிறப்பை மேலும் உயர்த்துவதாக அமைந்துள்ளது.

புதுவைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்ட ஆய்வாளரான வி. பி. யதிஸ்குமார் களஆய்வு செய்தபொழுது இவ்வூர் கண்டுபிடிக்கப்பட்டது. பொருந்தல் ஊருக்கு அருகில் அமைந்துள்ள 'பாசிமேடு' என்று அழைக்கப்படும் 5.5 எக்டேர் பரப்பளவு உள்ள வாழ்விடத்தில் மேற்கொண்ட அகழாய்வில் கி.மு. முதலாம் நூற்றாண்டுக்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தினைச் சார்ந்த கண்ணாடி மணிகள் மெருகு ஏற்றம் செய்யப் பயன்பட்ட உலைக்களம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. *தமிழகத்திலேயே முதன் முதலாகச் சங்ககாலத்தினைச் சார்ந்த கண்ணாடி மணிகள் உருவாக்கிய தொழிற்கூடம் இங்குக் கண்டு பிடிக்கப்பட்டது. இது ஒரு முக்கியக்* கண்டுபிடிப்பு எனலாம். அகழாய்வுக் குழிகளிலிருந்து, இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம், வெள்ளை நிற மணிகள் கிடைத்திருப்பது இவ்வகழாய்வின் சிறப்பு எனலாம்.


கண்ணாடி மணிகள் செய்யும் தொழிற்கூடத்தைப் பார்வையிட்ட சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் தொல்லியல் பேராசிரியர் ப. சண்முகம் இவ்வூர் கண்ணாடி மணிகள் உற்பத்தி செய்கின்ற தொழில் நகரமாக விளங்கியிருக்க வேண்டும் என்று கருத்துரைத்தார். கண்ணாடி மணிகள் மெருகேற்றப் பயன்படுத்தப்பட்ட உலைக் களத்தினைச் சுற்றிலும் கண்ணாடி மணிகள் வைப்பதற்கான மண் குவளைகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

ஓர் அகழாய்வுக் குழியில் சங்ககாலத்தைச் சார்ந்த செங்கல் கட்டடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. *இதில் பயன்படுத்திய செங்கல்லின் அளவு 7x21x42 மற்றும் 8x24x48 செ.மீ. ஆகும். இது 1:3:6 என்ற அளவில் இருப்பதைக் குறிப்பிட வேண்டும். இத்தகைய செங்கற்கள் சங்ககால நகரங்களான கொற்கை, அழகன்குளம், பூம்புகார், அரிக்கமேடு, உறையூர், கரூர் ஆகிய நகரங்களில் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.*

மத்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் தொல்லியல் கண்காணிப்பாளர் முனைவர் து. தயாளன் இத்தகைய செங்கல் கட்டடம் பொதுவாகப் பழமையான நகரங்களிலும் துறைமுகங்களிலும் தலைநகரங்களிலும் கிடைப்பதால் பொருந்தலும் மிகச் சிறப்புப் பெற்ற ஓர் ஊராக விளங்கியிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கேரள மாநிலத்தில் சேரரின் துறைமுகமான முசிறியை அகழாய்வு செய்துவரும் கேரள வரலாற்று ஆய்வுக் கழகத்தின் இயக்குநர் முனைவர் பி.ஜே. செரியன் முசிறித் துறைமுகத்தில் கிடைக்கின்ற கண்ணாடி மணிகளும் பொருந்தலில் கிடைக்கின்ற கண்ணாடி

CICTArchives









மணிகளும் ஒன்றாக இருக்கின்ற காரணத்தால் பொருந்தலில் வடிவமைக்கப்பட்ட கண்ணாடி மணிகளை முசிறித் துறைமுகத்தின் வழியாக மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்.

பிரஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனத்தின் இந்தியவியல் துறையின் தலைவரான பேராசிரியர் எ.சுப்பராயலு இவ்வூரின் அருகிலும், வணிகப் பெருவழியிலும் கிடைக்கின்ற உரோம நாட்டுக் காசுகளின் அடிப்படையிலும், இடைக்கால வணிகக் குழுக் கல்வெட்டுக்களின் பின்புலத்திலும் இவ்வாய்வினைப் பார்க்க வேண்டும் எனக் கருதுகிறார்.

பழநி வட்டாரத்தில் கிடைத்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுக்களை மத்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் துணைக் கண்காணிப்பாளர் முனைவர் சு. இராஜவேலு ஆவணப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளார்.

இவ்வகழாய்வில் கிடைத்த சிறப்புமிக்க பிற தொல்பொருட்களில் குறிப்பிட வேண்டியவை சங்ககாலச் சதுர வடிவச் செப்புக்காசு, சுடுமண் பொம்மை, தந்தத்தால் ஆன தாயக்கட்டை, எடைக் கற்கள், காதணிகள், மோதிரங்கள் போன்றவை ஆகும். இச்செப்புக்காசு சங்ககாலச் சேர மன்னருக்கு உரியதாக இருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். இதன் ஒருபுறம் வில்அம்பு பொறிக்கப்பட்டுள்ளது. சுடுமண் பொம்மைகளில் குறிப்பிடத்தக்கவை ஆண் உருவமும், பெண்ணின் தலை உருவமும், திமிலுடன் கூடிய எருதும் ஆகும்.

இதைத் தவிர வரலாற்றுக் காலத்தினைச் சார்ந்த சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்படைச் சின்னமான கற்பதுக்கை ஒன்று சின்னகாந்திபுரத்திற்கு அருகில் அகழப்பட்டது. இவ்வீமச்சின்னத்தில் காரனீலியன் என்று அழைக்கப்படுகின்ற சூதுபவள மணிகளும், ஸ்டியடைட் என்று அழைக்கப்படுகின்ற சூதுபவள மணிகளும், ஸ்டியடைட் என்று அழைக்கப்படுகின்ற வெள்ளை நிற மணிகளும், குவார்ட்ஸ் என்று அழைக்கப்படுகின்ற பளிங்கு மணிகளும் ஆக 7500 மணிகள் கிடைத்துள்ளன. இரு கூறாகப் பிரிக்கப்பட்ட இக்கற்பதுக்கையில் கருப்பு சிவப்பு மட்பாண்டங்களும், சிவப்பு மட்பாண்டங்களும், பளபளப்பாக்கப்பட்ட கருப்புநிற மட்பாண்டங்களும், நான்கு கால்களையுடைய மண்ஜாடிகளும், குவளைகளும், தட்டுக்களும், குடங்களும், இவற்றை வைப்பதற்கு உரிய புரிமனைகளும் இறந்தவருக்கு ஈமப்பொருட்களாக வைக்கப்பட்டுள்ளன.

நான்கு கால்களுடன் கூடிய மண் சாடியில் இருந்து நெல் கண்டுபிடிக்கப்பட்டது இதன் சிறப்பு அம்சமாகும். மேலும் புரிமனை ஒன்றினைச் சுற்றி 22 சூதுபவள மணிகளும், புரிமனைக்குள் 5 மணிகளும் வைக்கப்பட்டிருந்தன. இம்மணிகள் வைக்கப்பட்டிருந்த முறைமையைப் பார்க்கும்பொழுது இப்புரிமனை ஒரு சிறப்புச் சடங்குக்கு உட்படுத்தப்பட்டது தெரியவருகிறது. இப்புரிமனையின் வெளிப்புறத்தில் நான்கு குறியீடுகள் காணப்படுகின்றன. முதல் மூன்று குறியீடுகள் கி.மு. முதல் அல்லது கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த வரிவடிவத்தில் 'வய்ர' என்று எழுதப்பட்டுள்ளது. நான்காவது குறியீடு இப்புரிமனையின் எதிர்ப்புறத்திலும் பிற மட்பாண்டங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இக் குறியீட்டினை ஆய்வு செய்த ஐராவதம் மகாதேவன் முதல் மூன்று குறியீடுகளைத் தமிழ்ப் பிராமி எனக் கொண்டு இதன் காலத்தைக் கி.பி. முதலாம் நூற்றாண்டு எனக் காலக்கணிப்புச் செய்கிறார். இக்கருத்தைக் கல்வெட்டாய்வாளர்கள் முனைவர் வெ. வேதாசலமும், முனைவர் சு.இராஜவேலுவும் ஏற்றுக்கொள்கின்றனர். பேராசிரியர் எ. சுப்பராயலு, ப. சண்முகம், சு. இராசகோபால் போன்றோர் இவற்றைக்

CICTArchives













குறியீடுகளாகக் கருதவும் வாய்ப்புள்ளது எனவும் இவற்றை மேலும் ஆய்வுக்கு உட்படுத்தி முடிவுகள் மேற்கொள்வது சிறப்பாக அமையும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதைத்தவிர இப்புரிமனைக்கு அருகில் குதிரை ஏற்றத்தின் அங்கவடிகள் வைக்கப்பட்டு அவற்றைச் சுற்றிலும் ஏராளமான ஸ்டியடைட் வகையைச் சார்ந்த மணிகள் வைக்கப்பட்டிருந்தன. இந்த அங்கவடிகளுடன் கத்தி மற்றும் அம்பு முனைகள் வைக்கப்பட்டிருந்தன.

இக்கற்பதுக்கையைச் சுற்றி 12.50' விட்டமுள்ள கல்வட்டம் ஒன்று காணப்படுகிறது. இக் கற்பதுக்கையின் தோற்றம், இதில் கிடைத்துள்ள நூற்றுக்கணக்கான மட்பாண்டங்கள், 7500க்கும் மேற்பட்ட மணிகள், மேற்கொள்ளப்பட்ட சடங்குகளின் தன்மை ஆகியவற்றைப் பார்க்கும்பொழுது இக்கற்பதுக்கை இப்பகுதியில் வாழ்ந்த குறுநில மன்னனுக்கு அல்லது தலைவனுக்கு எடுக்கப்பட்டதாகவே கருதவேண்டியுள்ளது.


சங்க இலக்கியங்களான புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து போன்றவை இங்கு வாழ்ந்து மறைந்த சங்ககாலக் குறுநில மன்னர்களான பேகன், பதுமன் போன்றோரின் சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளன.

இவ்வகழாய்வில் புதுவை, மங்களூர், திருப்பதி வெங்கடேசுவரா மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தினைச் சார்ந்த முனைவர் பட்ட ஆய்வாளர்கள், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்கள், முதுகலைப் பட்ட மாணவர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு பணியாற்றினர்.

CICTArchives



# பேராசிரியர்
# வ.அய். சுப்பிரமணியம்



தமிழ்ச்செம்மல் வ.அய்.சுப்பிரமணியம் (1926 - 2009), தம் வாழ்நாள் முழுவதும் தமிழ் மொழிக்காகவும், திராவிட மொழியியலுக்காகவும் ஓயாது உழைத்தவர்.

அமெரிக்க இண்டியானா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்.

திராவிட மொழியியல் ஆய்வை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றவர்.

திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும், திராவிடப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகவும் சிறப்புடன் பணியாற்றியவர்.

திருவனந்தபுரம் திராவிட மொழியியல் நிறுவனம், பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளி, இந்திய மொழியியல் நிறுவனம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இந்திய நாட்டுப் புறவியல் நிறுவனம், இந்திய இடப்பெயராய்வு நிறுவனம், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், திராவிடப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அன்னாரின் பங்கு சிறப்பாகக் குறிப்பிடற்குரியது.

தனிநாயக அடிகளோடு இணைந்து உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை உருவாக்கி உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற உறுதுணையாய் இருந்த பெருந்தகை.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவர்களில் ஒருவராக இருந்து வழிகாட்டி வந்தார்.

29.06.2009 அன்று நிகழ்ந்த அன்னாரின் மறைவு நம்மைத் தாங்கொணாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவரது குடும்பத்தினர்க்குச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர், ஐம்பெருங்குழு, எண்பேராய உறுப்பினர்கள், அலுவலர்கள் ஆகிய எல்லோருடைய சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**எழுதிய நூல்கள்**

1. அக்கரை இக்கரை ( மொழிபெயர்ப்பு - புதினம் )
2. அவள் மெல்ல மறைந்தாள் ( மொழிபெயர்ப்பு - புதினம் )
3. எண்ண வட்டம் ( கட்டுரை )
4. ஏற்பதா? மறுப்பதா? ( கட்டுரை )
5. ஒரு நாள் ஒரு பொழுது ஒரு சிந்தனை (கட்டுரை)
6. காப்பியக் கட்டுரைகள் ( கட்டுரை )
7. சில கட்டுரைகள் ( கட்டுரை )
8. பாஷயும்...... (மலையாளக் கட்டுரை)
9. விளக்கின் நிழல் (கட்டுரை)
10. Debates on the Grammatical Theories of Dravidian Languages (பதிப்பாசிரியர் )
11. Dialect Survey of Malayalam (ஆய்வு )
12. Dravidian Encyclopedia (3Vols) (தொகுப்பாசிரியர் )
13. Handbook of Tamilnadu (தொகுப்பாசிரியர் )
14. Index of Purananuru
15. International Journal of Dravidian Linguistics (சிறப்பாசிரியர்)
16. Let us Reorient Ourselves (ஆய்வு )
17. Pioneers in Linguistics (இணை ஆசிரியர் )
18. Proceedings of the first All India Conference of Dravidian Linguistics (பதிப்பாசிரியர் )
19. Seminar on Technology (பதிப்பாசிரியர் )
20. Teaching on Indian Languages. (தொகுப்பாசிரியர் )

CICTArchives





# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

## சென்னை

2004ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் நடுவண் அரசு 'செம்மொழிகள்' என்ற ஒரு சிறப்புப் பிரிவைத் தோற்றுவித்துத் தமிழைச் 'செம்மொழி' என அறிவித்தது. விருதுகள், தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம், ஆய்வு உதவித்தொகைகள், செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் ஆகிய நான்கு உட்பிரிவுகளைக் கொண்ட நடுவண் அரசின் செம்மொழித் தமிழ்த் திட்டத்தினைச் செயற்படுத்தும் பொறுப்பு இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திடம் 2005ஆம் ஆண்டு இறுதியில் ஒப்படைக்கப்பட்டது. இப்புதிய திட்டத்தின்கீழ்ச் செவ்வியல் காலத் (கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட) தமிழ் இலக்கியம், இலக்கணம், இசை, கல்வெட்டுக்கள், நாணயங்கள் ஆகியவை குறித்த ஆய்வுகளில் பெருங்கவனம் செலுத்துவதென வல்லுநர் குழுவால் முடிவு செய்யப்பட்டது. திட்டத்தின் முதன்மைக் கூறான செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் 2006 மார்ச்சுத் திங்களில் குறைந்த அளவு ஆய்வறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், நிருவாகப் பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டு மைசூரில் தொடங்கப்பட்டது. திட்டத்தின் பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஒன்றினைச் சென்னையில் நிறுவுவதென 2007 ஆகஸ்டு 13 அன்று தில்லியில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டத்தின்போது முடிவெடுக்கப்பட்டு 11ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.76.32 கோடி நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் சீரிய தலைமையில் மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை 2007 ஆகஸ்டு 18ஆம் நாள் சென்னையில் தொடங்கி வைத்தார். 2007 நவம்பர் 5ஆம் நாளிட்ட தமிழக அரசின் ஆணையின்படி சென்னைக்கு அருகில் உள்ள பெரும்பாக்கத்தில் 17 ஏக்கர் நிலம் தமிழக அரசால் நிறுவனத்திற்கென ஒதுக்கப்பட்டது. 2008 மே 19 முதல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னைப் பாலாறு இல்லத்தில் செயற்படத் தொடங்கியது. 2009 சனவரி 21 அன்று தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1975) 27 பிரிவு 10 இன் கீழ் நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது (பதிவு எண்.1/2009).

### *2008-09ஆம் ஆண்டில்*

### *நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள்*

★ *கி.பி.6 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 41 செவ்வியல் நூல்களின் செம்பதிப்புப் பணி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. ஒவ்வொரு நூலுக்கும் தொடர்புடைய ஓலைச் சுவடிகள், தாள் சுவடிகள், பதிப்புக்கள் ஆகியவற்றைத் திரட்டுதல், பாடவேறு பாடுகள் அடங்கிய பட்டியல் தயாரித்தல், தகுந்த காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பாடம் உறுதி செய்தல், யாப்பு மரபும் புணர்ச்சி நெறியும் வழுவாத மூலபாடத்தை முடிவுசெய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொல்காப்பியம், இறையனார் களவியல், அகநானூறு, ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு ஆகிய ஐந்து நூல்களின் செம்பதிப்புப் பணி இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப்பெற்று நூல்கள் வெளியிடப்படும்.*

★ *மணிப்புரி, நேப்பாளி ஆகிய இரு மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறள் அறத்துப்பால் - 18 ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் அடங்கிய தொகுப்பு நூலும் நற்றிணை, முத்தொள்ளாயிரம், முல்லைப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, நானாற்பது ஆகியவற்றின் மூன்று ஆங்கில மொழிபெயர்ப்புகள் அடங்கிய தொகுப்பு நூல்களும் முடிக்கப்பெற்றுள்ளன.*

★ *தமிழ் வரலாற்று இலக்கணம் தொடர்பான தொடரனியல் முதல் தொகுதி முடிக்கப் பெற்றுள்ளது.*

★ *பழந்தமிழ் இலக்கியங்களை மரபுவழி ஓசை ஒழுங்குடனும் இசையுடனும் கற்பிப்பதற்குக் குறுந்தகடு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.*

★ *தொல்காப்பியம் முற்றோதல் குறுந்தகடுகள் (5) உருவாக்கப்பட்டுள்ளன.*

★ *செம்மொழித் தமிழ் இலக்கியம், இலக்கணம், கல்வெட்டுகள், நாணயங்கள் தொடர்பான 18 காட்சிப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.*

★ *திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - பகுதி-I (Dravidian Comparative Grammar-I) என்னும் ஆங்கில நூல் வெளியிடப்பட்டுள்ளது.*

★ *இதுவரை அகராதிகளில் இடம்பெறாத எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்காற்றுச் சொற்கள் (அளவைகள், ஆடு மாடுகள், நெல் வகைகள், மீன்பிடிப்புத் தொழில், நெசவுத் தொழில், மட்பாண்டத் தொழில், வேளாண்மை தொடர்பானவை) தொகுக்கப்பட்டு ஆவணப் படுத்தப்பட்டுள்ளன.*

★ *ஏறத்தாழ 11,000 நூல்களும் பல்வேறு நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகளின் மின்பதிப்புடன் கூடிய குறுந்தகடுகளும் நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.*

CICTArchives

# செம்மொழி

- தமிழகம், புதுவை, ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பல்வேறு உயர் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களிலிருந்து பழந்தமிழ் ஆய்வில் ஈடுபட்டுள்ள 30 (2008-09 ஆம் ஆண்டில் 10) ஆய்வாளர்களுக்கு முனைவர் பட்ட ஆய்விற்கும் 12 (2008-09 ஆம் ஆண்டில் 5) ஆய்வாளர்களுக்கு முனைவர் பட்ட மேலாய்விற்கும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.
- 2005-06, 2006-07, 2007-08 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான செம்மொழித் தமிழ் விருதுகளுக்குத் தகுதியுடைய அறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விருதுகள் வழங்கும் விழா கூடிய விரைவில் ஏற்பாடு செய்யப்படவுள்ளது. 2008-09 ஆம் ஆண்டிற்கான விருதுகளைத் தேர்வுசெய்யும் கூட்டம் ஆகஸ்டு 2009 இல் நடைபெறவுள்ளது.
- 2008 சூலை 24 அன்று கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அறக்கட்டளைக்கெனத் தம் சொந்த நிதியிலிருந்து உவந்தளித்த ஒரு கோடி ரூபாய் பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இம் முதலீட்டிலிருந்து வட்டியாகப் பெறப்படும் தொகையைக்கொண்டு உலக அளவிலான செம்மொழி விருது ஒன்றினை ஆண்டுதோறும் வழங்குவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கான நெறிமுறைகள் அடங்கிய தகவல் சிற்றேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
- சிறப்புமிக்க நிறுவனங்களைச் சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் நிறுவனம் சாராத மூத்த தமிழ் அறிஞர்கள் 60 (2008-09 ஆம் ஆண்டில் 25) பேர்களுக்குக் குறுகிய கால ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ள நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 17 ஆய்வுத் திட்டங்கள் முடிக்கப்பெற்று ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டுள்ளன.
- கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 94 பிராமிக் கல்வெட்டுக்களும் 37 வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் HD Video & High Resolution Still Image என்னும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- நிறுவன நிதிநல்கையுடன் பழனிக்கு அருகில் உள்ள பொருந்தல் என்னும் ஊரில் நடத்தப்பட்ட அகழ்வாய்வின் மூலம் பல்வேறு அரிய சங்க காலத் தொல்லியல் சான்றுகள் (காசுகள், சூது பவள மணிகள், பளிங்கு மணிகள், தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புக்கள், மட்பாண்டங்கள், கண்ணாடி மணிகள், சுடுமண் பொம்மைகள் போன்றவை) அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் அமைந்துள்ள சிந்துவெளி ஆய்வு மையத்திற்கு நிறுவனத்தால் அளிக்கப்பட்ட நிதிநல்கையின் மூலம் சிந்துவெளி எழுத்துக்கள் பற்றிய தொடரடைவுப் பணி முடிக்கப்பெற்று உயராய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
- இதுவரை நிறுவனத்தால் மின்னணுவாக்கமும் நிறச் சீர்மையும் செய்யப்பட்டுக் குறுந்தகடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள ஓலைச் சுவடிகள், தாள் சுவடிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை 175: தொல்காப்பியம் 36, எட்டுத்தொகை 9, பத்துப் பாட்டு 22, பதினெண் கீழ்க்கணக்கு 102, இறையனார் அகப்பொருள் 3, சிலப்பதிகாரம் 1, மணிமேகலை 2.
- கூட்டங்கள், பணியரங்குகள், பயிலரங்குகள், தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகள், மாநாடுகள் என 132 நிகழ்ச்சிகள் இதுவரை நடத்தப்பட்டுள்ளன. 2008-09ஆம் ஆண்டில் 6 சிறப்புக் கூட்டங்களும் 11 பயிலரங்குகளும் 22 கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை 10,000த்திற்கும் மேற்பட்டதாகும்.
- இதுகாறும் நடத்தப்பட்டுள்ள 25 பயிலரங்குகளில் (30 நாட்கள், 21 நாட்கள், 10 நாட்கள் என்னும் கால அளவினைக் கொண்டவை) பங்கேற்ற மாணவர்கள், ஆய்வாளர்கள், தமிழாசிரியர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை 1,550 ஆகும். இவர்கள் அனைவருக்கும் சங்க இலக்கியத் தொகுப்பும் தொல்காப்பியமும் இலவசமாக வழங்கப்பட்டுப் பயணப்படி, அகவிலைப்படி, மதிப்பூதியம் ஆகியவையும் அளிக்கப்பட்டுள்ளன. ஆற்றல் மிக்க பல்துறைப் பேராசிரியர்களைக் கொண்டு பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன.
- இதுகாறும் நடத்தப்பட்டுள்ள 49 கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் பல்துறை சார்ந்த அறிஞர்கள் 1500 பேர் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ளனர்.
- நிறுவனத்தின் பணிகள், ஆய்வுகள் தொடர்பான தகவற் குறிப்புகள் செய்திமடல்கள் வாயிலாகவும் இணையத்தின் வாயிலாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன.
- நடுவண் அரசின் வேண்டுகோளிற்கிணங்க நிறுவனத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள 17 ஏக்கர் தாழ்நிலப் பகுதியைச் சமன்செய்து தரத் தமிழக அரசு 1.46 கோடி ஒதுக்கீடுசெய்து ஆணை பிறப்பித்துள்ளது. எல்லைக் கற்கள் பதிக்கப்பட்டுச் சமன்செய்யும் பணிக்காக நிலம் பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரு மாத காலத்தில் இப்பணி நிறைவேற்றப்பட்டுக் கட்டடப் பணிகள் இவ்வாண்டிலேயே தொடங்கப்படும்.

CICTArchives



# பணிக்குழாம்

பேராசிரியர் ச. மோகன்
**இயக்குநர்**

பேராசிரியர் க. இராமசாமி
**பொறுப்பு அலுவலர்**

**முதுநிலை ஆய்வறிஞர்கள்**

பேராசிரியர் க. இராமசாமி
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி

**ஆய்வறிஞர்கள்**

பேராசிரியர் ப. மருதநாயகம்
முனைவர் கா. கோ. வேங்கடராமன்
முனைவர் இரெ. குமரன்
முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்
முனைவர் கா. உமாராஜ்
முனைவர் ச. மனோகரன்
முனைவர் அன்னி தாமசு
பேராசிரியர் இரா. கோதண்டராமன்
பேராசிரியர் கு. சிவமணி
முனைவர் ந. அரணமுறுவல்

**முதன்மை ஆய்வு வளமையர்கள்**

முனைவர் வி. முருகன்
முனைவர் வி. இராமசாமி
முனைவர் என். முருகையன்
முனைவர் ம. டொமினிக் ராஜ்
முனைவர் ம.ச. நாகராஜன்

**இணை ஆய்வறிஞர்கள்**

முனைவர் கூ. மு. புவனேஸ்வரி
முனைவர் மு. இராமகிருஷ்ணன்

**ஆய்வு வளமையர்கள்**

முனைவர் கி. செயகுமார்
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
திரு கோ. உத்திராடம்
திரு கி. சிவகுமார்
திரு கோ. சதீஷ்
திருமதி ம. தாமரைச்செல்வி

**நூலக ஆய்வு வளமையர்கள்**

முனைவர் வ. மாரியப்பன்
முனைவர் யு. ஜெயபாரதி
திரு கோ. செந்தில்நாதன்
திரு கி. கண்ணன்
திரு ச. ராஜேஷ்குமார்

**முதுநிலை ஆய்வு வளமையர்கள்**

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் இரா. அருள்மணி
முனைவர் கு. ஜெயகுமாரி
முனைவர் ப. கண்ணதாசன்
முனைவர் சுப. வேல்முருகன்

**இளநிலை ஆய்வு வளமையர்கள்**

முனைவர் சு. ஏழுமலை
திரு கோ. சீனிவாசன்
திரு பெ. முத்துசாமி
திரு மு. செல்வதுரை
முனைவர் கு. இராசசேகரன்
செல்வி சீ. நாகூர்அம்மாள்
திரு ச. தமிழ்ச்செல்வன்
செல்வி மோ. அனுசுயா
திரு சே. கரும்பாயிரம்
திரு த. சரவணன்
செல்வி த. லலிதமாலா
திரு இரா. வெங்கடேசன்
திரு ந. பெரியசாமி
முனைவர் ம. தமிழ்வாணன்
முனைவர் இரா. குமாரசாமி
முனைவர் அ. ஆரோக்கியதாஸ்
திரு வே. அழகுமுத்து
திரு ம. நாகராஜன்
முனைவர் மா. சுசிலா
முனைவர் த. பூவை சுப்பிரமணியன்
திரு பா. இராஜா
திரு சி. இராமச்சந்திரன்

**நிரலாளர்கள்**

திரு க. கார்த்திகேயன்
திரு த. செந்தில்குமார்
திரு இரா. அகிலன்
திரு அ. முருக சுவாமிநாதன்

**இணைய வடிவமைப்பாளர்**

திரு ச. குணசேகரன்

**கணினி நிருவகிப்பாளர்**

திரு இரா. சுந்தரகணபதி

**முதுநிலை எழுத்தர்கள்**

திரு கோ. புண்ணியமூர்த்தி
திரு ஜா.வா. பாஸ்கரன்

**இளநிலை எழுத்தர்கள்**

திரு மோ. முருகானந்தம்
திரு க. பெருமாள்

**தரவு உள்ளீட்டாளர்கள்**

திரு வெ. சிவப்பிரகாசம்
செல்வி இரா. ஜெயந்தி
திரு சு. சங்கர்
செல்வி வெ. காயத்திரி
செல்வி இரா. நளினா
செல்வி பி. கல்பனா
திரு அ. முருகேசன்

**மெய்ப்புத் திருத்துநர்கள்**

திருமதி தி. சுபாஷினி
திரு அ. கோ. இராஜதுரை

**அலுப்புகை எழுத்தர்**

திரு ம. கோவிந்தன்

**முனைவர் பட்ட மேலாய்வாளர்கள்**

முனைவர் சீ. மாணிக்கம்
முனைவர் இரா. ராஜலட்சுமி
முனைவர் ந. தேவி
முனைவர் அ. ஜெயக்குமார்
முனைவர் ஜெ. அரங்கராஜ்
முனைவர் ந. ஆனந்தி
முனைவர் செ. சிலம்புமணி
முனைவர் ஜெ. முத்துச்செல்வன்

**முனைவர் பட்ட ஆய்வாளர்கள்**

திரு அ. அறிவுமொழி
திரு ஜே. இரவி
திரு இ. இனியன்
திரு ஆர். ஐயப்பன்
செல்வி ஜி. சத்தியதேவி
செல்வி பி. சர்மிளா
திரு ஆர். செல்வன்
செல்வி ஆர். செல்வி
செல்வி ஜே. பிரீத்தி
செல்வி ஏ. தீபா

**காவலர்கள்**

திரு அ. ஆறுமுகம்
திரு ச. பாபு

**துப்புரவுப் பணியாளர்கள்**

திருமதி ந. ஜெயலட்சுமி
திருமதி ம. சுமித்ரா

அச்சகம்: சுதர்சன் கிராஃபிக்ஸ், தியாகராய நகர், சென்னை - 600 017

CICTArchives



தொல்காப்பியம்

எட்டுத்தொகை
- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

பத்துப்பாட்டு
- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

பதினெண் கீழ்க்கணக்கு
- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னாநாற்பது
- இனியவைநாற்பது
- கார்நாற்பது
- களவழிநாற்பது
- ஐந்திணைஐம்பது
- ஐந்திணைஎழுபது
- திணைமொழிஐம்பது
- திணைமாலைநூற்றைம்பது
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

சிலப்பதிகாரம்

மணிமேகலை

முத்தொள்ளாயிரம்

இறையனார் களவியல்